

கல்கி
KALKI
8-3-1964
30
காசு

உயர்தரமான காபிக்கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது
...சாஸ்திரீய முறையில் வறுத்து, பொடியாக்கப்பட்டது
...சுத்தத்திற்கு உத்தரவாதம்!



தரத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டது:- நீங்கள் மிகச் சிறந்த காபி வாங்கவென்று ப்ரூக் பாண்ட் நிபுணர்கள் உத்தமமான தென்னிந்திய காபிப் பயிரைத் தேர்ந்தெடுக்கின்றனர்!

வளமான நறுமணம் பெற வறுத்தல்:- உங்களுக்கு இனிய சுவையும் மணமும் தரவென்று நவீன விஞ்ஞான முறைகளில் வறுக்கப்படுகின்றன!

மிக சுத்தமாயிருக்க காற்று புகாத டப்பாக்களில் ஸீலிடப்படுகிறது:- கைபடாமலும் காற்று புகாமலும் சுகாதார முறையில், கேடுறாத டப்பாக்களில், நயம், புத்தம் புதுமை, நறுமணத்துடனும் அடைக்கப்பெற்று ஸீலிடப்பட்டு, ப்ரூக் பாண்ட் காபி உங்களிடம் வருகிறது.



ப்ரூக் பாண்ட்
சுத்தமான காபி
அல்லது சிகரி
கலந்த ப்ரூக்
பாண்ட் ப்ரெஞ்சு
காபி குடித்துப்
பாருங்கள்

JWTBB 1293 TM

கல்கி



32ம் பக்கம் பார்க்க

பொருளடக்கம்

சோபகிருது, மாசி 25 ★ மார்ச் 8

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பனாமா
இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
செழுமையான
வர்ஜீனியாப் புகையிலை
சீர்நிரவிய கலவை
புதுமை மயமானது
GTC
GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD
விசேஷக் கலவை செய்வோர் :
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்-56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 632 TM
Greens' Advtg.



மலர் 23 ✵ தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் ✵ இதழ் 32

நல்ல அறிகுறி

காங்கிரஸ் கட்சியின் அதிகார பலமும், பண பலமும், சூழ்ச்சித் திறனும், பூரணமாகப் பிரயோகமான போதிலும் மக்கள் ஒரேயடியாக மயங்கிப் போய்விடவில்லை என்பதை சென்னை நகரசபைத் தேர்தல் முடிவுகளில் காணலாம்.

தமிழகத்தில் எவ்வளவு ஸ்தானங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது என்பதையே பெரும்பாலான பத்திரிகைகள் எடுத்துக் காட்டி எழுதி யிருக்கின்றன. ஆனால் ஜனநாயக அடிப்படையில் வெற்றியை நிர்ணயிக்க வேண்டுமானால் எவ்வளவு ஸ்தானங்கள் என்பதைவிட எவ்வளவு வாக்குகளைக் காங்கிரஸ் பெற்றிருக்கிறது என்பதே முக்கியமாகும். இப்படிப் பார்க்கும்போது அநேக இடங்களில் மிகக் குறைந்த வோட்டு வித்தியாசத்திலேயே காங்கிரஸ் வெற்றி பெற்றிருப்பது தெரியும். விகிதாசார பிரதிநிதித்துவம் (Proportional representation) என்ற முறையைக் கைக்கொண்டிருந்தால் எதிர்க்கட்சிகள் ஏறக்குறைய காங்கிரஸுக்குச் சமமான ஸ்தானங்களைப் பெற்றிருக்கும்.

சென்னை நகரசபையில் மீண்டும் தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பது காங்கிரஸின் தோல்விகளுக்கு அழுத்தமான முத்தாய்ப்பாகும். இந்த நகரசபைத் தேர்தல் முடிவே இனி பொதுத் தேர்தல் முடிவாகவும் பரிணமிப்பது இயற்கையாகும். காங்கிரஸ் கட்சி சென்னை மாநகரில் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காகச் செய்த பிரசாரம் கொஞ்சநஞ்சமல்ல. அப்படி யிருந்தும் அதனிடம் நகரசபையைச் சென்னைவாசிகள் ஒப்புவிக்கவில்லை என்பது அவர்களின் அரசியல் அறிவுக்கு ஒரு நல்ல அத்தாட்சியாகும்.

காங்கிரஸின் பணபலத்தையும், தி. மு. க. தலைவர்கள் சிறைப்பட்டிருப்பதையும் எண்ணிப் பார்த்தால் கழகத்தின் வெற்றியை இரண்டு மடங்காகப் பாவிக்கத் தோன்றும். 'குறைந்த வோட்டு வித்தியாசத்தில்தானே தி. மு. க. வெற்றி பெற்றிருக்கிறது என்று கேட்கலாம். 'இதையே நான் வரவேற்கிறேன்' என்கிறார் ராஜாஜி. 'எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும், அது ஏறக்குறைய சமமான எதிர்ப்பைப் பெற்றிருந்தால்தான் கட்டுப்பாட்டுடன் செயல்புரியும். ஜனநாயகம் நிலைபெற வேண்டுமெனில் இரு சாராரும் ஏறக்குறைய சம பலம் பெற்றிருக்க வேண்டும்' என்கிறார் அவர்.

சுதந்திரக் கட்சியானது நகரசபை நிர்வாகங்களில் கட்சி அரசியல் நிலவுவதை விரும்பவே இல்லை. எனினும் ஆட்சியாளரின் பிடிவாதத்தை ஆட்சேபிப்பதற்கு அடையாளமாகவே ஒரு சில இடங்களில் ஒரு சில ஸ்தானங்களில் போட்டியிட்டது. சுதந்திரக் கட்சியின் வெற்றியை ஸ்தூலமாகக் கணக்கெடுத்துப் பார்க்க முடியாது. ராஜாஜி கூறியது போல் சாம்பாரில் பருப்பும், காய்கறிகளும் கண்ணுக்குத் தெரிந்தாலும், உப்பு கண்ணுக்கே தெரியாமல் கரைந்திருந்து அதற்குச் சுவை அளிப்பதுபோல், எதிர்க்கட்சிகளின் வெற்றியில் எல்லாம் சுதந்திரக் கட்சியின் பணியும் கரைந்திருக்கிறது. இறைவன் அருளால் அந்தப் பணி ஸ்தூலமாக வெற்றிபெறும் நன்னாள் விரைவில் ஏற்படும் என நம்புகிறோம்.

இதுவே எங்கள் மாற்றுத் திட்டம்

ராஜாஜி

'காங்கிரஸ் கட்சியின் ஆட்சி முறையைச் சுதந்திரக் கட்சி எதிர்ப்பதெல்லாம் இருக்கட்டும். காங்கிரஸ் திட்டத்துக்கு மாற்றுகச் சுதந்திரக் கட்சி விரிவாகத் தனது திட்டத்தை விளக்கிக் காட்ட வேண்டும்' என்று சிலர் விரும்புகிறார்கள். இன்னின்ன செய்வோம் என்று சகல அம்சங்களையும் பட்ஜெட் போல விவரித்துத் திட்டம் போட்டுக் காட்டுவது எதிர்க் கட்சிகளால் சாத்தியமில்லை. ஏனென்றால், நாட்டின் வளங்களும், வசதிகளும், பொருளாதார நிலைமையும் கணக்கிட்டபடி சர்க்கார் ஸெக்ரிடேரியட்டுக்குத்தான் விரிவாகத் தெரிய முடியும்; ஆட்சியிலில்லாத எதிர்க்கட்சிகள் விஸ்தாரமான மாற்றுத் திட்டத்தை அமைத்து எடுத்துச் சொல்ல இயலாது. என்றாலும் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் இப்போது காங்கிரஸ் செய்துள்ள ஊழல்களையெல்லாம் அழித்து நாட்டின் வாழ்வை நல்ல முறையில் அமைக்க முடியும் என்று அழுத்தமாகச் சொல்கிறேன். பொதுவாகச் சுதந்திரக் கட்சியின் திட்டம் என்ன என்பதைத் தெளிவாக்குகிறேன்.

நாங்கள் விரும்புவது என்ன என்பதும் வெளிப்படை. ஏழைகளின் வாழ்க்கை நிலை உயர வேண்டும் என்பதே சோஷலிஸ இலட்சியமென்றால் அந்த இலட்சியத்தை அடையவே நாங்களும் விரும்புகிறோம். பேச்சளவோடு நிற்காமல் உண்மையிலேயே மக்களின் வாழ்க்கை நிலை மேம்பட வேண்டும் என்று விரும்புகிறோம். முக்கியமாக, பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே துவேஷத்தைக் கிளப்பி விடாமல், சுமுகமான சூழ்நிலையில் நாட்டின் சுபிட்சத்தை வளர்க்க ஆசைப்படுகிறோம். இன்று போல் இல்லாமல், மக்களின் வேலை வாய்ப்புக்கள் பெருகும் முறையிலேயே இயந்திரத் தொழில்கள் நாட்டில் விருத்தியாக வேண்டுமென்று விரும்புகிறோம். கோடிக்கணக்கான ரூபாயை மக்களின் அடிப்படைத் தேவையான உணவுக்கும், உடைக்கும், வீட்டு வசதிக்கும் செலவிட்டு வறுமையைத் தீர்க்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

பிரும்மாண்டமான சாதனைகளைச் செய்ததாக வெளியில் காட்டிக்கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி விரும்புவதும் அதற்காக வரிகள் போட்டு ஏழைகளை வருத்துவதும் தவறு. பனிப்போரில் இந்தியா தன் பட்சத்தில் இருக்க வேண்டுமென்றே இவ்வளவு காலமாக இரண்டு வல்லரசு கோஷ்டிகளும் நமக்குத் தாராளமாகக் கடன் உதவி செய்தன. இதனுலேயே டாம்பீகத் திட்டங்கள் வகுக்க முடிந்தது. தற்போது பனிப்போரின் உருவம் மாறி வருகிற சமிக்ஞைகள் தோன்றியிருக்கின்றன. இனி முன்போல் பெருத்த கடன் வசதிகள் கிட்டாமல் போகும். டாம்பீகத் திட்டங்களைக் கைவிட வேண்டியதாகும். நாடு தன்னுடைய இயல்பான சக்தியைச் சரியான முறையில் மதிப்பிட்டு, அதற்கு ஏற்பவே திட்டமிட்டு முன்னேற வேண்டும் என்கிறது சுதந்திரக் கட்சி. என்றாலும் இப்போது கோடிக்கணக்கில் பணம் செலவாகி அரைகுறையாக நிறைவேறியிருக்கும் டாம்பீகத் திட்டங்களைக் கைவிடுவதற்கில்லாததால், அவற்றை மட்டும் ஒருவாறு பூர்த்தி செய்யவேண்டியிருக்கும்.

நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டுமானால் சர்க்காரின் வரிக் கொள்கை அடியோடு மாற வேண்டுமென்று சுதந்திரக் கட்சி கருதுகிறது. நம் நாட்டு ஏழைகளின் மேல் மறைமுக வரிகள் போட்டு விலைவாசிகளை உயரச் செய்வது பெரும் பாவம். ஏழைகளின் மீதும், நடுத்தர மக்கள் மீதும் எந்த விதத்திலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பொறுக்க முடியாத வரிகள் விதிக்கக் கூடாது; பணம் படைத்தவர்களின் மீது வரி விதிக்கும் போதும் அதனால் தொழில் அபிவிருத்தி தடைப்படாத முறையில் விதிக்க வேண்டும் என்கிறது சுதந்திரக் கட்சி.

தொழில் தொடங்குவதற்காக லைசென்ஸ் வழங்கியபின், உற்பத்திக்கு இடைஞ்சலாக வரிகள் போடும் பேதைமையை என்னென்பது? புதுத்தொழில்களுக்குத் தேவையாக நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற பண்டங்களுக்கு அந்த நாடுகளில் ஏற்றுமதி வரி விதிக்கிறார்கள். அதை நாம் தடுக்க இயலாது. ஆனால் நாமும் அவற்றை இறக்குமதி செய்வதற்காக வரி விதிப்பதால் அந்தப் பொருட்களுக்குத் தொழில் அதிபர்கள் மேலும் அதிக விலை கொடுத்தாக வேண்டியிருக்கிறது. இதனால்தான் நமது தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பண்டங்களின் விலை உயர்கிறது. இவற்றை உள் நாட்டிலும் விற்க முடிவதில்லை; இவ்வளவு விலை உயர்வான பண்டங்களை

வெளிநாட்டினரும் வாங்க மாட்டார்கள். இந்த நிலைமையில் தேசத்தின் பொருளாதாரம் எப்படி முன்னேற்ற மடையும்? உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் ஊக்கம்குன்றி, தொழில்வளர்ச்சியில் உற்சாகம் காட்ட முடியாத அளவுக்கு வரிகள் போடுவதைச் சுதந்திரக் கட்சி வன்மையாக ஆட்சேபிக்கிறது. அவர்கள் ஊக்கத்தோடு தொழில்களைப் பெருக்கினால்தான் பொது மக்களுக்கு வேலைவாய்ப்புகள் உயரும். பால் கறக்கும் பசுவை இறைச்சிக்காகக் கசாப்புக் கடைக்கு அனுப்பி விடலாமா ?

மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்கள் மீது மறைமுக வரியே விதிக்கக்கூடாது என்பது எங்கள் கொள்கை. பொது மக்களின் வாழ்க்கைச் செலவை வரிகள் மூலம் இம்மியும் உயர்த்தலாகாது. ஒரு சிலர் மீது நேரடி வரிகளைத் திணிக்காமல் கோடிக் கணக்கான ஏழைகள்மீது பரவலான முறையில் இலேசான வரி விதித்துச் சர்க்கார் வருமானம் உயர்த்தலாம் என்று காங்கிரஸ் இவ்வாறு செய்கிறது.

ஆனால் அது நியாயமாகாது. கூடுதலாக ஒரு வைக்கோல் புரியைச் சுமத்தினாலும் வண்டியிருசுக் கட்டை முறிந்துபோகும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சாலமிகுத்துப் பெயின் —குறள்

(பீலி - மயிலிறகு; பெயின் - ஏற்றினால்: சாகாடு-சகடம்-வண்டி; அச்சு-இருசுக்கட்டை இறும்-உடைந்து போகும்.)

விவசாய நாடு என்று பேர் எடுத்திருந்தும், நம் நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள இயலாத இன்றைய நிலைமையில் நில வரிகள் வசூலிப்பது அநியாயம். சுதந்திரம்பெற்ற இந்தியாவில், மக்கள் தங்கள் நில உடைமைக்காக அரசாங்கத்துக்கு

— ஊர் வம்பு



வரி செலுத்த வேண்டும் என்பது ஒப்புக் கொள்ள முடியாததாகும். விவசாயிகளின் அற்ப வருமானத்தில் ஒரு சிறிதைப் பறிப்பதுகூட அவர்களுக்குப் பெரிய நஷ்டமேயாகும். நில உடைமையைப் பதிவு செய்யும் செலவு தவிர வேறு நில வரிகள் கூடாது.

ரூபாயின் மதிப்பு குறைந்து போகும் முறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கலாகாது என்கிறது சுதந்திரக் கட்சி. மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் சின்னஞ் சிறிய தொகையின் மதிப்பை அவர்கள் அறியாமலே குறைப்பது நீதியாகாது.

இவ்வாறு வரிகளையெல்லாம் குறைத்து, பண வீக்கத்தையும் தடுத்தால் தேசிய கஜானாவின் வருமானம் குறைந்து விடாதா என்று ஆள்கிறவர்கள் கேட்பார்கள். ஆரம்பத்தில் குறையத்தான் செய்யும். ஆனால் நாளடைவில் வரிச் சுமை நீங்கியதால் தொழில்கள் தழைக்கும்; விவசாயம் விருத்தியாகும். மொத்தத்தில் உற்பத்தியும், மக்களின் ஊதியமும் உயரும். அப்போது சர்க்காரின் வருமானமும் ஓங்கும். தேசம் துர்பலமாக உள்ள இப்போது பளுவான வரிகள் போடுவதால் நாடு ஒருபோதுமே முன்னேறாமல் செய்கிறார்கள். முதலில் நாடு ஆரோக்கியம் பெற வசதி செய்ய வேண்டும்.

நாட்டில் இயந்திரத் தொழில்களைப் பெருக்க வேண்டும் என்ற கொள்கையின்படி ஒருபுறம் சர்க்கார் பெரிய நகரங்களில் புதுப் புது ஆலைகள் தோன்றக் காரணமாயிருக்கிறார்கள். மறுபுறம், 'கிராமங்களுக்குச் செல்லுங்கள்' என்னும் கோஷம் போடுகிறார்கள். இது முரண்பட்ட கோஷமாகும். தொழிற்சாலைகளைப் பெரிய நகரங்களிலேயே அமைக்கும் வரையில் கிராம மக்கள் அவற்றில் வேலை தேடி நகரங்களுக்கு வரத்தான் செய்வார்கள். இன்றுபோல் நகரமெங்கிலும் கீழ்த்தரக் குடியிருப்புக்கள் தோன்றி, ஆரோக்கியம் கெடத்தான் செய்யும். இந்த நெரிசலைத் தடுக்க வேண்டுமானால் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள சிற்றூர்களில் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் ஒரே இடத்தில் குவிந்து, ஆரோக்கியக் குறைவடையும் நிலைமை மாறும். தேசம் முழுதும் சிறு சிறு நகரங்கள் தோன்றவேண்டும். அப்போது தான், மக்களின் குடிநீர், வீடு, கழிவுகால் முதலிய தேவைகளையும் சமாளிக்க முடியும். ஆங்காங்கு தொழிற்பேட்டைகள் தோன்றினால்தான் சுற்றுப்புற மக்களின் வேலை இல்லாக் கொடுமையும் தீரும். சுதந்திரக் கட்சியின் திட்டங்களில் இவ்வாறு சிறு தொழில்களைக் கச்சிதமான அளவில் சிறு நகரங்களில் வளர்ப்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

நாட்டின் உற்பத்தி உயர்ந்து, மக்களின் ஆரோக்கியமும் நல்ல நிலை அடைந்தால் மற்ற நாடுகளுக்கு நாம் நம்பகமாக ஆவோம். அதன் பின்னரே அவர்களிடம் நமது மதிப்புக்குப் பங்கம் இல்லாத முறையில் அவசியமான அளவுக்குக் கடனுதவிகள் பெற முடியும். இன்றுபோலில்லாமல், வாங்கிய கடனை நாம் திருப்பிக் கொடுக்கவும் அப்போது தான் திட்டமிட முடியும்.

இனி வெளிநாட்டுக் கொள்கையைப் பார்ப்போம். நம்முடைய ராணுவம் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும். நாம் போதிய அளவுக்கு ஆயுதங்களும் தளவாடங்களும் பெற்றிருக்க வேண்டும். இதற்குத் தேவைப்படும் செலவு அவ்வளவையும் ஏற்கக் கூடிய நிலையில் நம் நாடு இல்லை. ஆனபடியால் மேல்நாடுகளுடன் கெட்டி நட்பை ஏற்படுத்திக் கொண்டு சகாயம் பெறுவதே முறையாகும். அவ்விதம் செய்தால் நம்மை யாரும் தாக்க மாட்டார்கள். பயப்படுவார்கள். அரைகுறை மனத்தோடு நட்புத் தேடுவது பயன் தரும் முறையல்ல. இப்போது பாதுகாப்புச் செலவுக்காக இந்தியாவின் பட்ஜெட்டில் ஒரு பெரிய பங்காகி, மக்களின் தலையில் வரியாக விழுந்திருக்கும் பளு அப்போதுதான் நீங்கும்.

மேலே காணும் கொள்கைகள் யாவும் அமுலாக ஒரு நல்ல வாய்ப்பு இருந்தால் மக்கள் சுக வாழ்வையும், சுதந்திர வாழ்வையும் ஒருங்கே பெறுவார்கள் என்பது யாருக்கும் தெளிவாகும். சர்க்கார் சர்வாதிபத்தியம்—லைசென்ஸ் பர்மிட் கோட்டா ராஜ்யம் என்ற முள்வேலியிலிருந்து வெளிப்பட்டு மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பார்கள். சுதந்திரக் கட்சிக்கு ஆட்சிப் பொறுப்புக் கிட்டுமானால் இந்தக் கொள்கைகளெல்லாம் வரையறை செய்யப்பட்டு ஜனநாயகத்துக்கு இசைந்த வருஷாந்தர பட்ஜெட்டுகளாக உருவாகும். ஆண்டுதோறும் மக்கள் பிரதிநிதிகளின் யோசனையுடன் அவை அமுலாகும். நாடு முன்னேறப் போவதாகக் கற்பனை செய்து, அந்த நெடுங்காலத்தை நாலு திட்டங்களாகப் பிரித்து, மக்களைப் பிரமிக்கச் செய்து பார்லிமெண்டின் அதிகாரம் இல்லாமலே ஏககட்சி ஏகாதிபத்தியத்தின் மூலம் திட்டங்களை நடத்தி வைக்கும் கொடுமை நீங்கும்.



உலகனைவும் அருள் அரசாகிய ஸ்ரீ காமகோடி பீடத்தின் தலைநகராகிய காஞ்சிபுரத்திலிருந்து சுமார் ஏழாண்டுகளுக்கு முன் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளும், இளைய ஸ்வாமிகளும் புறப்பட்டு, தமிழக முழுதும் தெய்விகத்தை நிலைநாட்டி விட்டு, பிப்ரவரி 26ந் தேதி யன்று காஞ்சிபுரத்துக்குத் திரும்பினர். கருணை சாம்ராஜ்யத் தலைநகர வாசிகள் ஞான வேந்தர்களுக்கு வெற்றி விழா போல் பட்டண பவனி நடத்தி மகிழ்ந்தார்கள். வெள்ளி ரதத்தில் ஆரோகணித்து அன்னை காமாட்சியே தனது பிரதிபிம்பத்தைக் காண வருவது போல் ராஜ வீதி எல்லையில் ஜகத் குருவை எதிர்கொண்டாள். பூம்பல்லக்கில் மலையான மாலைகளிடையே பூமனத்தவரான பெரியவர்களும், யானையின் மீது கம்பீரம் துலங்க இளைய ஸ்வாமிகளும் ஆரோகணித்து நகர் வலம் வந்து, ஸ்ரீ சங்கர மடத்தை அடைந்து ஆசாரியரைத் தொழுதனர்.





அவளுடைய முதல் நீண்ட பயணம்



திருமணம் ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பாதையை மாற்றி அவளை ஒரு புது உலகிற்கு அழைத்துச் செல்லுகிறது. அதோ அந்தப் பெண், பெற்று வளர்த்த தாய் பேணிவளர்த்த தந்தை ஆகியோரிடமிருந்து பிரிந்து தன்னுடைய முதல் நீண்ட பயணத்தைத் துவக்கப் போகிறாள்.

கணவனுடைய இல்லத்தில் அவளுடைய வருங்காலம் எப்படி அமைந்திருக்கும்? பெற்றோரையும் உற்றோரையும் விட்டுப் பிரியும் அந்த இளம் பெண்ணுக்கு அவளுடைய தாய் ஆறுதல் கூறுகிறாள். "பல ஆண்டுகளுக்கு முன், புது வீடு அமைக்க உன் தந்தையுடன் புறப்படும்போது நானும் இப்படித்தான் உணர்ந்தேன். என் கவலைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. மகிழ்வுடன் வாழ்ந்தோம். நீ பிறந்தாய். உன் வருங்கால வாழ்வு செழித்திருக்க திட்டமிட்டு உழைத்தோம். உன் திருமணம் இனிது நடந்தேறியது. திருமணச் செலவுகளுக்குப் பெரிதும் உதவியது ஆயுள் இன்சூரன்ஸ். நானும் என்னாலியன்ற சிறு அளவில் உன் தந்தைக்கு உதவினேன்." ஆம், ஆயுள் இன்சூரன்சின் நோக்கம் இருவகையானது. அது, உங்கள் குடும்பத்திற்கும் உங்களுடைய வருங்காலத்திற்கும் பாதுகாப்பளிக்கிறது. கல்விச் செலவுகள் திருமணச் செலவுகள் போன்ற பல பொறுப்புகளிலிருந்தும் பிற கவலைகளிலிருந்தும் உங்களுக்கு விடுதலை அளிக்கிறது. ஆயுள் இன்சூரன்ஸ் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையானதொன்று.

ஆயுள் இன்சூரன்சு போல

ஆதரவு தருவது எதுவுமே இல்லை.

மீண்டும் ஒரு பரிசு

கல்கியைத் தமிழ் மக்கள் தங்கள் சொந்தப் பத்திரிகையாகக் கருதுவதன் காரணம் கல்கியின் வளர்ச்சிக்கு அவர்கள் துணை புரிந்திருக்கிறார்கள், அவர்களுடைய பேராதரவினால் கல்கி வளர்ந்திருக்கிறது என்பது மட்டுமல்ல. தமிழர்கள் தரமுணர்ந்து எதையும் எடை போடும் தன்மையினர். அதனால் தான் தரமுயர்ந்த பத்திரிகையான கல்கியைத் தங்கள் சொந்தப் பத்திரிகையாகக் கருதுவதில் அவர்கள் பெருமை கொள்ளுகிறார்கள்.

பாரதப் பிரதமர் நேருஜியைத் தலைவராகவும், உப ராஷ்டிரபதி ஜாகிர் ஹுஸைனைத் துணைத் தலைவராகவும் கொண்டு இயங்கி வரும் சாகித்திய அகாதமி வருஷத்துக்கு ஒரு முறை பாரத மொழிகளில் வெளியாகியுள்ள உயர்ந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகிறது. தமிழைப் பொறுத்தமட்டில் இவ்வாறு அகாதமி பரிசு பெற்ற நூல்களில் நான்கினை அவை அப் பரிசுகளைப் பெறுவதற்கு முன்பாகவே அச்சேற்றிய தனிப் பெருஞ் சிறப்பு கல்கி பத்திரிகைக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ் மக்களின் சொந்தப் பத்திரிகை தரம் உயர்ந்த பத்திரிகை என்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?

திரு அகிலன் எழுதிய வேங்கையின் மைந்தனுக்கு அகாதமி பரிசு கிடைத்திருக்கும் செய்தி சமீபத்தில் வெளியானதையொட்டி ஏற்படும் பெரு மகிழ்ச்சியை நேயர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம்.

வேங்கையின் மைந்தன் அகிலன் அவர்களுடைய முதல் சரித்திரக் கதை. முதல் சரித்திரக் கதையே இவ்வளவு பெரிய வெற்றியடைந்தது. அவரது எழுத்துக்களை ஆரம்ப முதல் கவனித்து வருபவர்களுக்கு வியப்பைத் தராது.

இளங்கோவின் இளமை துடிக்கும் வீரத்தையும், ரோகிணியின் கோமள இருதயத்தையும், அருள்மொழியின் ஆழமான அன்பினையும் வாசக நேயர்கள் மறந்திருக்க முடியாது.

இராஜேந்திர சோழரது கம்பீரமான தோற்றமும், மகிந்தரின் வெருளித்தனமும் கீர்த்தியின் சூழ்ச்சிகளும் புத்தகத்தை ஒருமுறை படித்தவர்களின் நினைவில் என்றும் நிலைத்திருக்கும். ஆகவே நூலைப் பற்றிய நீண்ட விமர்சனத்துக்கு அவசியமில்லை. ஆனால் அகிலன் அவர்களுடைய எழுத்து நடையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டும். அவருடைய நடையின் அலாதியான ஒரு சிறப்பு கதாபாத்திரங்களின் குண இயல்புகளை அவர் வெளிப்படுத்தும் அழகுதான். இந்தக் கதாபாத்திரத்தின் குண இயல்பு இது. அதனால் அவன் அப்படி நடந்து கொள்கிறான் என்பதாக அகிலன் விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பதில்லை; விறுவிறுப்பான கதையோட்டத்தினூடே கதாபாத்திரங்களுடைய செயல்களைச் சுருக்கமாக வர்ணித்தும், இயற்கையான சம்பாஷணைகளைப் புகுத்தியுமே உயிரோவியங்களாக அந்தக் கதாபாத்திரங்களை நம் இதயத்திலே தீட்டிவிடுகிறார். ஆகவேதான், Characterization என்கிற இந்தக் கடினமான சாதனையை அகிலன் அவர்கள் மிக அலட்சியமாக நிறைவேற்றிவிட்டது போல் தோன்றும் படிப்பவர்களுக்கு. ஆனால் அதற்குப் பின்னால்தான் கண்ணுறக்கம் பிடிக்காத கடுமையான உழைப்பு இருக்கிறது.

வாசகர்களின் பிடிவாதமான கோரிக்கை காரணமாக, வேங்கையின் மைந்தன் புத்தக உருவில் வெளியானபோது இறுதியில் ஒரு மாறுதலைச் செய்து புதிய முடிவுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் அகிலன் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. இதனைப் பலர் ஆட்சேபிக்கக் கூடும். எழுத்தாளன் தன்னுடைய மனோதர்மத்துக்குப் புறம்பாக நடக்கலாமா, வாசகர்களின் விருப்பத்துக்கு வளைந்து கொடுக்கலாமா என்று கேட்கலாம். ஆனால் அகிலன் அவர்களோ 'வாசகர்களுக்காகத் தானே நான் எழுதுகிறேன்' என்று கேட்பார். தம்முடைய ஆத்ம திருப்திக்காக மட்டும் எழுதும் சுயநலவாதியல்ல அவர். நாவலாசிரியன் என்ற முறையில் தம்மை மட்டுமின்றி, வாசக நேயர்களையும், ஏன் நாவலில் வரும் கதாபாத்திரங்களையும் கூடத் திருப்திப்படுத்தி அனைவருக்கும் ஏற்ற நல்ல முடிவை நாடும் லட்சிய எழுத்தாளர் அவர்.

பரிசு பெற்ற அகிலனைப் பாராட்டுவதற்காக அவர் இல்லத்துக்குச் சென்றிருந்த போது, டில்லிக்குப் போய்ப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள டிக்கட் எடுப்பதற்காகச் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும், தமக்குக் கிடைத்த பெருமையெல்லாம் கல்கி பத்திரிகைக்கும் அதன் வாசகப் பெருமக்களுக்குமே சேரும் என்பதாக வழக்கமான பணிவன்புடன் தெரிவித்துக் கொண்டார். எனினும் கண்களில் குடியேறியிருந்த ஜொலிப்பை அவராலும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை!




அகிலன்


"டில்லிக்குப் போய்ப் பரிசைப் பெற்றுக் கொண்டு சீக்கிரம் திரும்பி வாருங்கள் : புத்தாண்டு இதழில் ஆரம்பமாகவிருக்கும் உங்கள் புதிய சரித்திரத் தொடர்கதையைக் கல்கி வாசகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றோம்.

"நீங்கள் ஞாபகப்படுத்த வேண்டுமா என்ன? இரவும் பகலும் அதே சிந்தனைதானே எனக்கு" என்றார் திரு அகிலன்.

பட்டினத்துப் பேச்சு



○ "தமிழ்நாட்டில் கோதுமை விற்பனை நூற்றுக்கு நாற்பது சத விகிதம் உயர்ந்திருக்கிறது: காரணம் தமிழர்கள் அதிகக் கோதுமை




உட்கொள்வதுதான்' என்று ஓர் அரசாங்கப் புள்ளி விவர நிபுணர் முடிவு கட்டுகிறார். 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது; தமிழன் பசித்தாலும் கோதுமையைத் தின்ன மாட்டான்' என்பது பழமொழி. ஆகையால் தமிழ்நாட்டில் கோதுமை அதிகம் விற்பனையாவதற்குக் காரணம் வடக்கத்தியார்கள் இங்கே அதிகமாகக் குடியேறி வருவதாகத்தான் இருக்க வேண்டும்!

○ "ஊழியர்களுக்கு இரண்டு ரூபாய் அதிகமாகக் கிராக்கிப் படி கொடுத்ததை, கடைக்காரர்கள் தங்கள் சாமான்கள் விலையை உயர்த்திப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள்" என்று ஸ்ரீ நந்தா லோக சபையில் குறைப்பட்டார்.

"அதை நாம் வரி மூலம் திரும்ப வசூலித்து விடுவோம்; அல்லது வருமான வரி, விற்பனை வரி உத்தியோகஸ்தர்கள் தங்களுக்காக வசூலித்துக் கொள்வார்கள். அஞ்சற்க!" என்று நிதி மந்திரி ஆறுதல் கூறியிருக்கக் கூடும்.

○ சமீபத்தில் நடந்த ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் கொளச்சல் என்ற ஊரில் 16 ஸ்தானங்களுக்கும் சுயேச்சை அபேட்சகர்கள் 16 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். கட்சிகள் என்றிருந்தால் கூட்டம் நடக்கும் போது பதவி ஏற்ற கட்சி ஒரு பக்கத்தி



லும் மற்றக் கட்சிகள் எதிர்ப் பக்கத்திலும் உட்காருவது சம்பிரதாயம். சுயேச்சை அங்கத்தினர்கள் நவக்கிரகங்களைப் போல் ஒருவரையொருவர் பார்க்காமல் உட்கார்ந்து கொள்வார்களோ, என்னமோ!

உபவாசச் செய்திகள்

○ சம்யுக்த காம்தார் ....சங்கத் தலைவரான இந்துலால் யக்னிக் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதை ஆட்சேபித்து 18-ந் தேதி முதல் ஐந்து தினங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

டிரேட் யூனியன் காங்கிரஸின் தலைவர் எஸ். பிராஸ்கரும் அவரது சகாக்களும் வரிப் பளுவையும், விலைவாசிகளையும் குறைக்கச் செய்வதற்காக 20ந் தேதியிலிருந்து உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள்.

—பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா

காந்திஜி இப்போது உயிருடனிருந்தால் மது விலக்குச் சட்டம் தளர்த்தப்படுவதை ஆட்சேபித்து உயிர் போகும்வரை உண்ணாவிரதம் இருப்பார்.

— மொரார்ஜி தேசாய்

செம்பொன்னூர் கோவிலைச் சேர்ந்த 27 பாட்டிமார்களும், 20 தாத்தாமார்களும், மாசி மாதத்தில் ஒரு நாள் முழுதும் உண்ணாவிரதமிருக்கப் போகிறார்கள்; திரிசங்கு சுவர்க்க சர்வ ஏகாதசி தினமன்று.

— நமது சொந்தமல்லாத நிருபர்

○ "சீக்கிரத்திலேயே சாதாரண மக்களும் ஏறிச் செல்லக் கூடிய ஜனதா விமான சர்வீஸ் ஏற்படுமெனக் கனவு காண்கிறேன். அதில் விமான ஹோஸ்டஸ் பெண்கள் இருக்க மாட்



டார்கள்" என்று இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பொரேஷன் அதிகாரி ஸ்ரீ பராக் கூறுகிறார்.

இதைக் கேட்ட பல பொதுமக்கள் இப்பொழுதே தாங்கள் விமானங்களில் இடம் ரிசர்வ் செய்வதை நிறுத்தி விடக் கூடும். ஜனதா விமானம் என்றால் ஜனதா விமான ஹோஸ்டஸ் இருக்க வேண்டாமா? பசு மஞ்சள் பூசிக் குளித்த முகத்துடனும், காதில் ஓலை, காலில் காப்பு, கொலுசு முதலிய ஆபரணங்களுடன் காட்சியளிக்கட்டுமே. விமான ஹோஸ்டஸ் இல்லா விமானம் பாழல்லவா?

○ கேரள உள்நாட்டு மந்திரி ஸ்ரீ சாக்கோ தமது பதவியை ராஜிநாமா செய்வதாக எழுதிக் கையெழுத்திடும்போது அவர் முகம் மலர்ந்திருக்கிறது; மீசைக் கிடுக்கில் உதடுகளில் புன்னகை தவழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த அருமையான காட்சியின் போட்டோ பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. இப்படிச் செயற்கையாகச் சிரிக்கும் திறமை கதக்களி கலா உணர்ச்சி உள்ளவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும் போலும்.

செயற்கைச் சிரிப்புப் போலவே செயற்கை ஜால்ய இலக்கிய நடையும் உண்டு:

கருணை கல்லூரி மாணவர்களின் உள்ளங்களில் ஜீருஜுவாக ஜொலித்தான். அவள் வருகிறாள் என்றால் போதுமே...

ஹெலன் கன்னம், கிலியோபாத்ரா மீடுக்கு, அட்லெண்டா நடுக்கு என்று ஆங்கிலம் முக்கிய பாடம் எடுத்துப் படிக்கும் மாணவர்களும்.... தனி ஊசல் போன்ற அவள் தளிர் நடை, வெப்பம் கடத்தா தர்மாசுக் குடுவை போல் உள்ளக் கருத்தை வெளி விடாத் தன்மை சமதள ஆடியில் பிரதிபலிப்பது போல் மாணவ இதயங்களில் பிரதிபலிக்கும் அவளது பேரழகு.....

இத்தோரணையிலே ஒரு மாணவரால் எழுதப்பட்டிருக்கும் கதை ஒரு கல்லூரி பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. —காசி



நடப்பவைதான் நம்புங்கள்



ஆமதாபாத் அட்வகேட் ஒருவர், இருபத்தொன்பது கிலோ மீட்டர்களுக்கு அப்பால் வசித்த தமது கட்சிக்காரருக்கு ரிஜிஸ்தர் தபாலில் ஒரு கடிதம் அனுப்பினார். கட்சிக்காரர் ரசீதில் கையெழுத்திட்டுக் கடிதத்தை வாங்கிக்கொண்டார். அந்த ரசீது அட்வொகேட்டுக்குத் திரும்பி வந்து சேர நாற்பத்தைந்து வருஷங்கள் ஆயின. அதற்குள் அந்த அட்வகேட் இறந்துபோய் முப்பத்திநாலு வருஷங்கள் ஆகிவிட்டன!

—பாரத நாட்டுச் செய்தி

● கடிதங்கள் பட்டுவாடா செய்வதைத் துரிதப்படுத்த மேற்கு ஜெர்மனி தபால் இலாகாவினர் பெரிய தபால் நிலையங்களில் ஓர் எலெக்ட்ரானிக் சாதனத்தை நிறுவியுள்ளனர். தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய கடிதங்களோ அல்லது ஒரு நகரத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் போக வேண்டிய கடிதங்களோ எப்படியானாலும் சரி, இந்தச் சாதனம் கடிதங்களைப் பகுதிவாரியாகப் பிரிக்கிறது. அந்தப் பகுதிக்குண்டான எண் கடித உறையில் குறிப்பிடப்பட்டிருந்தால் போதும். ஒரு மணி நேரத்தில் நாற்பதாயிரம் கடிதங்களைப் பகுதிவாரியாகப் பிரித்து விடுகிறது, இந்த எலெக்ட்ரானிக் சாதனம்.

— மே. ஜெர்மானியச் செய்தி

● அறுபத்தொரு வயதான ஒரு கிழவி இறந்துவிட்டதாகக் கருதி மயானத்துக்கு எடுத்துப் போனார்கள். ஈமச் சடங்குகள் நடந்து கொண்டிருக்கையில் அவள் திடுமென உயிர் பெற்று எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டாள். இப்போது பூரண ஆரோக்யத்துடன் அவளுக்குப் பிரியமான பொழுது போக்கான காப்பி அருந்துதலைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறாள்.

— ஹாங்காங் செய்தி

● ஆப்பரேஷன் வெற்றிகரமாக முடிந்தது, நோயாளி இறந்துவிட்டான் என்றும் ஆப்பரேஷன் வெற்றி பெற்று நோயாளி சௌக்கியம், ஆனால் டாக்டர் இறந்து விட்டார் என்றும் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இதை யெல்லாம் தூக்கி அடிப்பதாக இருக்கிறது, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இரண்டு வாரங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம். நோயாளியாகப் படுத்திருந்த நண்பனைப் பார்க்க வந்த பிரிட்டோ என்பவர் வராந்தாவில் தடுக்கி விழுந்து தலையில் பலத்த அடிபடவே இறந்து விட்டார்!


— சென்னைச் செய்தி

● பிரபல அமெரிக்கத் துப்பறியும் நாவலாசிரியர் மிக்கி ஸ்பில்லேனின் காரை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள். போலீஸாரிடம் சென்ற மிக்கி ஸ்பில்லேன், அவர்களையும் முந்திக்கொண்டு, ''நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். 'நீயேதான் துப்பறிந்து திருட்டைக் கண்டுபிடியேன்' என்பீர்கள்'' என்றார்.

● இத்தாலி நாட்டுக்குச் சொந்தமான லேபாரித் தீவு மத்தியதரைக் கடலில் உள்ளது. இத்தீவு முழுதும் பியூமைஸ் கற்களால் ஆனது. இதற்கு அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களில் நிரம்பக் கிராக்கி இருப்பதால் இத்தீவில் வசிப்போர் தங்கள் தீவை வெட்டிச் சாக்குகளில் நிரப்பி ஏற்றுமதி செய்துகொண்டிருக்கின்றனர். இப்படியே தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தால் இன்னும் ஐம்பது வருஷங்களில் லேபாரிவாசிகளுக்கு வசிக்கத் தீவு இராது. தங்கள் தீவு முழுவதையும் அவர்கள் ஏற்றுமதி செய்துவிட்டிருப்பார்கள்!

● எடை பார்க்கும் கருவியில் நாம் காசைப் போட்டால் எடை டிக்கட் வெளியே வந்து விழுவது போல மேற்கு ஜெர்மனியில் காசைப் போட்டால் அன்றைய தினசரிப் பத்திரிகை ஒன்றினை வெளியே நீட்டும் கருவியைத் தயாரித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும் பதினாறு பக்கங்கள் கொண்டதான சுமார் இருநூற்றைம்பது தினசரிகளை இந்தக் கருவி விற்பனை செய்யும்.

● ஒரு மணி நேரம் ஒரே மாதிரியாக நாற்காலியில் உட்கார்ந்திருந்தால் போதும். நமக்கு அலுத்து விடுகிறது. கால் கைகளை நீட்டிச் சோம்பல் முறிக்கிறோம்; அல்லது சற்று நடமாடிவிட்டேனும் வருகிறோம். இங்கிலாந்தில் புது விதமான நாற்காலி ஒன்றினை இப்போது தயாரித்து விற்பனை செய்து வருகிறார்கள். இந்த நாற்காலியில் நாம் எந்த விதமாக உட்கார்ந்தாலும் சரி, நம்முடைய உடம்பு கோணுவதற்கு ஏற்ற மாதிரியாக நாற்காலியும் வளைந்து கொடுக்கிறது. இந்த நாற்காலியில் நாம் சப்பணித்து உட்காரலாம்; மண்டியிட்டு அமரலாம்; நிமிர்ந்து நேராக இருக்கலாம்; சாய்ந்து கொள்ளலாம்; சுருண்டு படுக்கக்கூடச் செய்யலாம். நாற்காலியும் இதற்கெல்லாம் அனுசரணையாக விட்டுக் கொடுத்துத் தன் உருவம், கன பரிமாணங்களைத் தானாகவே மாற்றிக் கொள்கிறது!




● இதையெல்லாம் கேள்விப்படும் போது என்னென்னவோ கண்டு பிடிக்கிறார்களே க்ஷவரம் செய்து கொள்ள எலெக்ட்ரிக் ஷேவர் இருப்பது போல் பல் தேய்க்க ஓர் எலெக்ட்ரானிக் பிரஷ் உருவாக்கக் கூடாதோ என்று கேட்கிறார் மிஸ்டர் முழுச் சோம்பேறி. —இராவதம்

பாமாலிவ் லவண்டர்

வசீகரிக்கும் நறுமணம்....

பெருமிதத்தையும், அழகையும் அளிக்கிறது!





வசீகரம்...பாமாலிவ் லவண்டர் டால்கம்
பெருமிதத்திற்கும், அழகிற்கும் உற்றநண்பன்.
சிறிது பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பின்மேல்
தூவிக்கொண்டால், அதன் இனிய நறுமணம்
உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள். பாமாலிவ்
உபயோகித்து எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும்,
நறுமணத்துடனும், அழகுடனும் விளங்குங்கள்.

(பாமாலிவ் டீலக்ஸ்—மயக்கும்
17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை!

(PT-6-6-TAM-)



அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி 57

பெல்காமிலிருந்து ஸ்வாமிஜி பெங்களூர் வந்து சேர்ந்தார். முதலில் சில நாள் யாரு மறியாது அங்கு வாழ்ந்த பின் மைசூர் சம்ஸ்தானத்துத் திவானாக இருந்த ஸர் கே. சேஷாத்திரி ஐயரைச் சந்தித்தார். சில நிமிஷங்கள் ஸ்வாமிஜியுடன் சம்பாஷித்ததிலிருந்தே திவானுக்கு அவர் 'காந்த சக்தி வாய்ந்தவர், இந்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு முத்திரையைப் பொறிக்கப் போகிற தெய்விக சக்தி பொருந்தியவர்' என்ற உணர்ச்சி ஏற்பட்டது. சுமார் நாலு வாரங்கள் ஸ்வாமிஜி திவான் சேஷாத்திரி ஐயரின் விருந்தாளியாகத் தங்கியிருந்தார்.

அன்று மைசூர் மன்னராக இருந்த சாமராஜேந்திர உடையாருக்கும் ஸ்வாமிஜிக்கும் இடையே அரண்மனையில் சந்திப்பு நிகழ்ந்தது. பாரதப் பண்புகளிலும் நன்கு ஊறிய மகாராஜா ஸ்வாமிஜியினால் பெரிதும் கவரப்பட்டார். ஸ்வாமிஜியை அரசாங்க விருந்தினராக இருக்கச் செய்து மரியாதை செலுத்தினார். பற்பல விஷயங்களில் ஸ்வாமிஜியின் உபதேசத்தை நாடினார் மன்னர்.

ஒரு நாள் தமது ராஜ சபையைச் சேர்ந்த பிரமுகர்களின் முன்னிலையில் மகாராஜா ஸ்வாமிஜியிடம், ''என்னுடைய சபைப் பிரமுகர்களைப் பற்றித் தங்களது கருத்து என்ன ஸ்வாமிஜி?'' என்று வினவினார்.

''துரதிர்ஷ்ட வசமாக எல்லா ராஜ சபையினரும் எப்படி இருக்கிறார்களோ அப்படியே தான் உங்கள் ராஜ சபையினரும் இருக்கிறார்கள்'' என்று நறுக்குத் தெறித்தாற் போல் கூறினார் ஸ்வாமிஜி. அதாவது அவர்கள் மகாராஜாவுக்கு இச்சகம் பாடுபவர்களாகவே இருக்கிறார்கள் என்று குறிப்பால் உணர்த்திவிட்டார்.

எல்லோருக்கும் தூக்கி வாரிப் போட்டது. மன்னர் சுதாரித்துக் கொண்டு, ''அல்ல வாமிஜி அல்ல, என்னுடைய திவானொருவரேனும் அவ்வாறில்லை. அவர் நல்லறிவு படைத்தவர்; நம்பகமானவர்'' என்றார்.

ஸ்வாமிஜி அதற்கும் விட்டுக் கொடுக்காமல், ''ஆனாலும் மகாராஜா, எந்த திவானுமே தமது அரசனை ஏமாற்றி பிரிட்டிஷ் ஏஜெண்டுக்குப் பொருளைக் குவிப்பவர்தான்'' என்றார். அரசர் பேச்சை மாற்றிவிட்டார்.

பிறகு தாமும் ஸ்வாமிஜியும் தனித்திருக்கும்போது மைசூர் அதிபர், ''என் அன்பு ஆர்ந்த அடிகளே, மிகவும் வெளிப்படையாகப் பேசுவது அபாயமாகும். நீங்கள் சற்று முன் பேசினாற்போலவே இனியும் செய்தால், உங்களுக்கு யாரேனும் விஷம் வைத்துவிடுவார்கள்'' என்றார்.

உடனே ஸ்வாமிஜி சத்தியத்தின் சக்தியில் இடியாகப் பேசினார். ''என்ன சொன்னீர்கள்? உண்மையான சந்நியாசி தன் உயிருக்கு ஆபத்து என்பதற்காகப் பொய் சொல்வான் என்றா எண்ணுகிறீர்கள்? நாளைக்கே உங்கள் பிள்ளை என்னிடம், 'ஸ்வாமிஜி, என் தகப்பனாரைப் பற்றி என்ன அபிப்ராயப்படுகிறீர்கள்?' என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். நான் உங்களிடம் இல்லாத குணவிசேஷங்களெல்லாம் உங்களுக்கு இருப்பதாக இளவரசரிடம் சொல்வதா? நான் அசத்தியமா சொல்வது? ஒருபோதுமில்லை.''

ராஜ சபையினர், திவான், மன்னர் யாரையுமே சத்தியத்துக்கு முன்பு அலட்சியமாகக் கருதும் ஸ்வாமிஜியின் சீலத்தைப் பாருங்கள்! தமக்கு சகல உபசாரங்களும் செய்தவர்கள் என்பதற்காகவோ, தம்முடைய மேல் நாட்டுப் பயண உத்தேசத்துக்கு உதவியாக

இருப்பார்கள் என்பதற்காகவோ அவர் உள்ளத்துக்குக் கள்ளம் செய்யாத உணர்வை எண்ணிப் பாருங்கள்! அவருடைய இந்த சத்திய சக்தி காரணமாகத்தான் வெளிப்பார்வைக்கு அவரால் இடித்துரைக்கப்பட்ட பலரும் அவரிடம் வெறுப்புக் கொள்ளவில்லை. மைசூர் மகாராஜாவும் திவானும் அதன் பின்பும் அவரிடம் மரியாதையுடனும், அன்புடனுமே பழகி வந்தனர்.

ஸ்வாமிஜி ஒருவரை நேரில் கண்டவிடத்து அவரது குறைகளையே கூறித் திருத்திக்கொள்ளச் செய்வார். ஆனால் பிறரிடம் பேசும்போது அவர்களது குண நலன்களைப் பற்றியே பேசுவார். மைசூர் மன்னரைப் பற்றியும் திவானைப் பற்றியும் ஸ்வாமிஜி மற்றவரிடம் மிக உயர்வாகப் பேசியுள்ளார்.

மைசூர் ராஜக்ருஹத்தில் தங்கியிருந்தபோது ஆஸ்திரிய தேசத்தைச் சேர்ந்த ஓர் இசைக் கலைஞரை ஸ்வாமிஜி சந்தித்தார். அவரிடம் ஐரோப்பிய சங்கீத நுணுக்கங்களைப் பற்றி ஸ்வாமிஜி சரளமாக விவாதித்தது எல்லாருக்கும் மிக ஆச்சரியமாகிவிட்டது. இன்னொரு நாள் அரண்மனையில் மின்சார வேலை நடக்கும்போது அலுவலரிடம் ஸ்வாமிஜி மின்சார விஞ்ஞானம் பற்றிப் பேசி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினர்.

ஸ்வாமிஜி மைசூரில் இருந்தபோது அங்கு வித்வத் ஸதஸ் ஒன்று நடைபெற்றது. ஸ்வாமிஜியும் அதில் கலந்து கொண்டார். எல்லாப் பண்டிதர்களும் பேசியான பின்பு அழுத்தம் திருத்தமான மொழியில் ஸ்வாமிஜி வேதாந்த சாரத்தை அப்படியே பிழிந்து தருவதுபோல அற்புதமானதோர் உரையாற்றினர். பண்டிதர் யாவரும் அவரைப் பாராட்டிக் கரக் கம்பம், சிரக்கம்பம் செய்தனர்.

''ஸ்வாமிஜி, தங்களுக்கு நான் என்ன கைங்கரியம் செய்யட்டும்?'' என்று விநயமாகக் கேட்டார் மைசூர் வேந்தர்.

ஸ்வாமிஜி தம் மனதிலிருந்த பெரும் பணியைப் பற்றி உணர்ச்சி மயமான சொற்களில் விரித்துரைக்கலானர். தத்துவத்தையும், ஆன்மிகத்தையுமே செல்வமாகக் கொண்ட இந்தியா அவற்றை மேல் நாடுகளுக்குக் கொடுத்து உதவி, அவைகளிடமிருந்து பொருளாதார உயர்வையும் விஞ்ஞான அறிவையும் பெற வேண்டும் என்று கூறினர் ஸ்வாமிஜி. இந்தப் பரிவர்த்தனைக்காகத் தாம் சிகாகோவில் நடைபெறவிருக்கும் சர்வ மத மகாசபைக்குச் செல்ல விரும்புவதாகவும் வெளியிட்டார்.

உடனேயே மைசூர் மாமன்னர் ஸ்வாமிஜியின் மேல் நாட்டு யாத்திரைக்குத் தேவைப்படும் செலவை அளிப்பதாக முன் வந்தார்.

ஆனல் முன்பு ஹரிபாதரிடம் செய்ததுபோலவே, இப்போதும் ஸ்வாமிஜி, ''இப்போதைக்குத் தங்கள் உதவி வேண்டாம்'' என்று கூறிவிட்டார். ''நான் ராமநாதனைத் தரிசிக்க வேண்டும். அதன் பின்பு பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறிவிட்டார்.

நாளாக ஆக மன்னருக்கு ஸ்வாமிஜியிடம் நேசமும் பாசமும் அதிகமாகிக் கொண்டே வந்தன. ஸ்வாமிஜி ''போய் வருகிறேன்'' என்று புறப்பட்டபோது வாஸ்தவமாகவே மைசூர் ராஜ்யாதிபதியின் கண்களில் நீர் துளித்து விட்டது.

ஆசாரியர்களுக்குச் செய்வது போலத் தாம் ஸ்வாமிஜிக்குப் பாத பூஜை செய்ய விரும்புவதாக அவர் தெரிவித்தார். ஸ்வாமிஜி மெத்த மனநெகிழ்ச்சியுடன் மறுத்துவிட்டார்.

ஸ்வாமிஜி விடைபெற்றுக்கொள்ளும்போது அவர் பாதத்தில் விழுந்து பணிந்தார் அரசர். திவான் சேஷாத்திரி அய்யர் கத்தை ரூபாய் நோட்டுக்களைக் கையில் வைத்துக்கொண்டு இறுதி முயற்சியாக அதை ஸ்வாமிஜியின் அங்கியில் திணிக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்.

ஸ்வாமிஜி அவரிடம் ''எனக்காக ஏதேனும் செய்தே தீரவேண்டுமெனில் திருச்சூருக்கு டிக்கட் வாங்கித் தாருங்கள்'' என்றார்.

ஃ ஃ ஃ

திருச்சூரில் ஒருசில தினங்களே தங்கிய ஸ்வாமிஜி கேரள நாட்டின் சித்திராலங்கார அழகுகளைக் கண்டவாறு சஞ்சரித்துக் கொண்டிருந்தார். திருவிதாங்கூர் ராஜ்யத்தின் தலைமைப் பட்டணமான திருவனந்தபுரத்தைச் சென்றடைந்தார்.

அங்கு மன்னரின் மருமகனும், முதல் இளவரசருமான மார்த்தாண்ட வர்மருக்குப் போதகராக இருந்த பேராசிரியர் சுந்தரராம அய்யரின் இல்லத்தில் தங்கினர். ஸ்வாமிஜி அங்கு வசித்தபோது நிகழ்ந்த சம்பவங்களைச் சுந்தரராம அய்யரும், அவரது புத்திரரும் இன்று சென்னை நகரத்தின் முதுபெரும் பிரமுகர்களில் ஒருவராக விளங்கி வருபவருமான ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளும் அருமையான கட்டுரைகளாக வடித்துத் தந்திருக்கிறார்கள்.

கொச்சி ராஜ்யத்து சேவகரான ஒரு முஸ்லிமுடன் ஸ்வாமிஜி சுந்தரராம அய்யரின் இல்லத்தை அடைந்தார். சிவப்புத் தலைப்பாகையும், பூமி மட்டும் புரளும் காவி அங்கியும், இடுப்பில் 'பெல்ட்' போலக் கட்டிய வஸ்திரமுமாக வந்த ஸ்வாமிஜியை சுந்தரராம அய்யரின் இரண்டு பிள்ளைகளும் பார்த்தனர். மூத்தவரான ராமஸ்வாமிக்கு அப்போது வயசு சுமார் பதினறு. அந்த ஆண்டுதான் அவர் எஃப்.ஏ. சேர்ந்திருந்தார். இளையவருக்குப் பன்னிரண்டு பிராயம். தென் இந்திய சந்நியாசிகளை மட்டும் பார்த்திருந்த இரண்டு பிள்ளைகளுமே ஸ்வாமிஜியை ஒரு சந்நியாசி என்று நினைக்கவில்லை. அவரது முகத்தில் ததும்பிய கம்பீரத்தைக் கண்ட மூத்த பிள்ளை தந்தையிடம் சென்று, 'அப்பா நம் வீட்டுக்கு யாரோ ராஜா வந்திருக்கிறார்' என்றான். இளையவன், 'நம் வீட்டுக்கு இரண்டு முஸ்லிம்கள் வந்திருக்கிறார்கள்' என்றான்.

வந்தவருடன் சிறிது சம்பாஷித்த பின் சுந்தரராமய்யருக்கு அவர் மன்னருமல்ல, முஸ்லிமுமல்ல என்பது தெரிந்தது. வங்காள நாட்டு சாதுவாகிய அவர் மன்னருக்கெல்லாம் மேல் மரியாதைக்குகந்த ஞானி, ஹிந்து முஸ்லிம் என்றெல்லாம் மதம் வகுக்க முடியாத சமரச சன்மார்க்க சீலர் என்று புரிந்து கொண்டார்.

சுந்தரராம ஐயரைக் கொள்ளை கொண்டு விட்டார் ஸ்வாமிஜி. அவரைத் திருவனந்த

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழிக்கிறது.


கால்கேட் உடனடியாக வாய்-துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்ருகத் துலக்குங்கள். இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கிடைக்கும் அருமையான நறுமணத்தினால், குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினுல், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெற
வும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும்
விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.,

பனாமா

ஸேப்டி
ரேஸர்
ப்ளேட்கள்

அதி சுத்தமான, வழவழப்பான
க்ஷவரத்திற்கு



நாடெங்கணும் லட்சக்கணக்கான மக்கள் பனாமாவை உபயோகிக்கிறார்கள். அது வழவழப்பான, சுகமான க்ஷவரத்திற்கான சிறந்த ஸேப்டி ரேஸர் ப்ளேட். உங்கள் பணத்திற்கு அதிக மதிப்பைப் பெற பனாமாவிற்கு மாற்றிக் கொள்ளுங்கள்.

பனாமா

ஸேப்டி ரேஸர் ப்ளேட்



SQ/PNA-18 TAM

புரம் கிளப்புக்கு அழைத்துச் சென்று பல ருக்கு அறிமுகம் செய்து வைத்தார் ஐயர். கிளப்பில் அவர் சந்தித்த பேரா சிரியர் சுந்தரம் பிள்ளை தமக்கும் ஹிந்து மதத்துக்கும் சம்பந்தமில்லை என்றும் தாம் ஒரு திராவிடர் என்றும் கூறினர். இதை ஸ்வாமிஜியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பின்னர் சுந்தரராம அய்யரிடம் அவர், 'சுந் தரம்பிள்ளை மிகவும் பாண்டித்தியம் பெற்ற வர் என்பது உண்மைதான். ஆனல் அவர் இன வேற்றுமைகளுக்கு இடம் அளித்திருக் கிருர். தென் இந்தியாவில் புத்தி சமநிலையில்லாத மனிதர்கள் சிலரிடம் இந்த அருசியான அம்சம் இருப்பதைக் காண்கிறேன்' என்ருர்.

ஸ்வாமிஜி இந்தியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாக இனக் கலப்பு ஏற்பட்டதாக வும், யாரும் தங்களைக் குறிப்பிட்ட ஓர் இன மாகக் கருத முடியாது என்றும் அபிப்பிராயப் பட்டார். இது விஷயத்தில் அவரிடமிருந்து முரண்பட்டார் சுந்தரராம ஐயர். வி. எல். ப்ரேஸ் முதலியோரின் நூல்களை ஆதாரமாகக் காட்டிய சுந்தரராம ஐயர் பிராமணர்கள் இனக் கலப்பற்றவர்கள் என்று வாதித்தார்.

ஸ்வாமிஜி தமது கருத்தை மாற்றிக் கொள்ள வில்லை. ''அதெல்லாம் எப்படி யாளுலும் அந்தணர்கள் சுயநலமின்றி, தமக் குரிய கர்மத்தைப் புரிந்து, எல்லா மக்களுக் கும் ஞான சம்பத்தை அளிக்கும் வரையில் பிராமண குலம் உயிர் வாழும். பாரதத் துக்கு பிராமண குலம் மகத்தான பணி செய் தது: செய்கிறது: இனியும் இதைவிட உயரிய பணி செய்ய இறைவனுல் விதிக்கப்பட் டிருக்கிறது'' என்று உள்ளார்ந்த மரியாதை உணர்வுடன் கூறினர் ஸ்வாமிஜி.

சுந்தரராம ஐயரிடம் எம். ஏ. பரீட்சைக் குப் படித்துக் கொண்டிருந்த இளவரசர் மார்த்தாண்ட வர்மரைச் சந்தித்தார் ஸ்வாமிஜி. ஸ்வாமிஜியின் சுந்தரத் திரு உருவில் லயித்த அவர், தாமே ஸ்வாமிஜியை ஒரு புகைப்படம் எடுத்தார். (சென்ற அத்தி யாயத்தில் காணப்படும் சித்திரமே அது என நம்பப்படுகிறது.)

பொது மேடையில் தோன்றிப் பேசுமாறு சுந்தரராம ஐயர் ஸ்வாமிஜியைக் கேட்டுக் கொண்டார். ஸ்வாமிஜி தமக்குப் பழக்க மில்லை என்றும், தாம் மேடையேறினல் தோல்விதான் ஏற்படும் என்றும் கூறினர்.

''அது சரி, ஆனல் சிகாகோ சர்வமத மகா சபைக்குப் போய்ப் பிரசங்கம் செய்ய விரும்பு வதாகச் சொன்னீர்களே, அது எப்படி சாத் தியமாம்?'' என்று கேட்டார் ஐயர்.

ஸ்வாமிஜி இதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை.

''ஆண்டவனுடைய சித்தம் நான் அவ னுடைய கருவியாக இருந்து சத்தியத்துக்கும், புனித வாழ்க்கைக்கும் பணி புரிய வேண்டும் என்றிருந்தால் அவனே அதற்கான ஆற்றல் களை அருள்வான்'' என்ருர்.

''இம்மாதிரி ஆண்டவனே ஒருவர் விஷய மாகக் குறுக்கிடுவான் என்பதை நான் நம்ப வில்லை'' என்ருர் சுந்தரராம ஐயர்.

உடனே ஸ்வாமிஜிக்குச் சினம் பொங்கி எழுந்தது; ஐயரின் மீது சம்மட்டியெனச் சொற்களை வீசினர் அவர்: ''ஆசார அனுஷ் டானம் அமர்க்களமாகச் செய்தாலும் இதயத்தில் நீங்கள் ஒரு நாஸ்திகர். ஆண்டவனின் ஆற்றலுக்கு நீங்கள் எல்லை வகுக்கிறீர்கள். மனித குலத்தின் மேன்மைக் காக அவனே தலையிட்டுச் செயல்புரிகிருன் என்பதை நம்ப மறுத்து, அவனது அளப்பரும் கருணைக்கு அளவுகட்டுகிறீர்கள்'' என்ருர்.

ஸ்வாமிஜியின் அந்தரங்க சுத்தமான பக்தி ஐயரை உலுக்கி விட்டது.

இப்படியாக ஸ்வாமிஜி திருவனந்தபுரத் தில் ஒன்பது நாட்கள் தங்கியிருந்ததை ''ஸ்வாமிஜியுடன் எனது முதல் நவராத் திரி'' என்ற கட்டுரையில் ஐயர் விவரிக் கிருர். (ஸ்வாமிஜி மேல்நாட்டில் பயணம் செய்து திரும்பியபின் சென்னையில் அவருடன் கழித்த ஒன்பது தினங்கள் பற்றி ''ஸ்வாமிஜி யுடன் எனது இரண்டாம் நவராத்திரி'' என்ற கட்டுரையில் கூறுகிருர் ஐயர்.)

சுந்தரராம ஐயரின் வீட்டில் ஓர் அங்கத் தினர் போலவே ஸ்வாமிஜி சுவாதீனமாகப் பழகி வந்தார். இந்தத் தமிழ்க் குடும்பத்தில் தங்கிய போது பல தமிழ்ச் சொற்களையும் கற்றுக் கொண்டாராம். பரிசாரகரிடம் தம் முடைய தமிழ் ஞானத்தைக் காட்டிப் பேசுவ தில் ஸ்வாமிஜிக்கு மிகவும் மகிழ்ச்சியாம். இதைப் படிக்கும் போது நமக்கும் அளவற்ற மகிழ்ச்சி உண்டாகத்தானே செய்கிறது? விவேகாநந்தர் போன்ற மஹாத்மாக்கள் தேசம் காலம் எல்லாம் கடந்து எல்லாருக்கும் பொதுவானவர்கள்தாம். எனினும் அவர் களும் நம் நாட்டுக்கு வந்தார்கள், நம் மொழி யைப் பேசினர்கள் என்பதில் நமக்கெல்லாம் பெருமை உண்டாகத்தானே செய்கிறது? மதுரகண்டத்துக்குப் பெயர்பெற்ற ஸ்வாமிஜி யின் நாவில் தமிழ்ச் சொற்கள் பூத்த போது அது எவ்வளவு கர்ணுமிருதமாக இருந்திருக் கும்? அதில் குழந்தைத் தனமும் கூடிவிட்ட தென்ருல்.....? அதை வர்ணிக்கத் தமிழி லேயே வார்த்தை கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும்.

மக்கள் பணிபற்றி ஸ்வாமிஜி திருவனந்த புரத்தில் கூறியதை ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் தமது கட்டுரை யொன்றில் கூறுகிருர்: ''நான் இந்தியா முழுதும் காலால் நடந்து சென்றிருக்கிறேன். மக்களின் அறியாமையையும், வறுமைத் துயரையும், அசுத்தத்தையும் என் கண்களால் பார்த்திருக்கிறேன். என் ஆவி முழுவதும் பற்றி எரிகிறது. இப்படிப்பட்ட இழி நிலையை மாற்ற வேண்டும் என்ற தீவிரமான ஆசை யில் நான் வேகிறேன். இதெல்லாம் 'கர்மம்' என்று யாரும் பேசாதீர்கள். 'கஷ்டப்பட வேண்டும் என்பது அவர்கள் கர்மம்' என்று நீங்கள் சொன்னல், 'அவர்களுடைய கஷ் டத்தை நிவர்த்தி செய்ய வேண்டியது நம் கர்மம்' என்று நான் சொல்வேன். ஈசுவரனைத் தரிசிக்க விரும்பினீர்களானல் மனிதனுக்குச் சேவை செய்யுங்கள். நாராயணனை அடைய வேண்டுமானல் பட்டினியில் துயருறும் கோடிக் கணக்கான தரித்திர நாராயணர் களுக்குப் பணி புரியுங்கள்'' என்ருராம் ஸ்வாமிஜி.

''ஸ்வாமிஜி சென்றதும் எங்கள் வீட்டிலிருந்த ஒளி வெளியேறி விட்டது போல எங்களுக்குத் தோன்றியது'' என்கிறார் சுந்தரராம ஐயர்.

அப்படித் திருவனந்தபுரத்தைவிட்டு வெளியேறிய ஒளி, தான் நீண்ட காலமாகக்காணத் துடித்த ராமேசுவரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தெய்வத் தமிழ் நாட்டில் வங்கத்துச் சிங்கத்தின் தங்கப் பாதங்கள் பதிந்தன. வழியில் நான்மாடக் கூடலாகிய மதுரையம்பதியில் ராமநாதபுரத்தரசர் பாஸ்கர சேதுபதியைக் கண்டார் ஸ்வாமிஜி. நல்ல அறிஞரும், பக்தி நிரம்பியவருமான சேதுபதி மன்னர் ஸ்வாமிஜியிடம் இதயபூர்வமான ஈடுபாடு கொண்டார். ஸ்வாமிஜியை மறு ஆண்டு சிகாகோவில் நடக்கவிருந்த சர்வமத மகா சபையில் கலந்து கொள்ளுமாறு தூண்டினார். ''இதற்கு என்னால் முடிந்த உதவியெல்லாம் செய்கிறேன்'' என்று முன்வந்தார் அந்தத் தமிழ் மகன். ''ஆகட்டும், பார்ப்போம்; நான் முதலில் ராமேசுவரத்தைத் தரிசித்து வருகிறேன்'' என்று கூறிவிட்டார் ஸ்வாமிஜி.

மக்களுக்கு வாழும் வழியை உணர்த்த வேண்டும் என்பதற்காகப் பரமபதநாதனே மானுடனாக வந்து, அன்னைக்கும், அப்பனுக்கும், உடன்பிறந்தோருக்கும், மனைவிக்கும், சகல மக்களுக்குமே இனியனான ஸ்ரீராமபிரானாக வாழ்ந்தான் அல்லவா? அவனே ஆதரிச பக்தனாக இருந்து சிவபெருமானை வணங்கிய எளிமைக்குச் சின்னம் ராமேசுவரம்.

இந்தியாவின் வடக்கே ஹிமயபர்வதத்தின் புத்திரியாகப் பிறந்து பார்வதி என்ற பெயரில் நாட்டைக் காக்கும் தாய், தெற்கே இங்கும் பர்வதவர்த்தினி என்ற திவ்விய நாமத்திலே அருள் புரிகிறாள்.

ராமநாதனைத் தரிசித்துத் தாம் வாழ்க்கையில் கொண்டிருந்த நீண்ட நாளைய மனோரதமொன்று பூர்த்தியானதில் மன நிறைவு கொண்டார் ஸ்வாமிஜி.

ராமேசுவரத்திலிருந்து நாட்டின் தென் கோடியாகிய கன்யாகுமரியைச் சென்றடைந்தார். பாரதத் தாயின் திருமுடியாகிய பனி மூடிய ஹிமாலயத்திலிருந்து புறப்பட்டவர் அவளின் திருமேனி முழுவதையும் தரிசித்து விட்டு இப்போது இரு அடிகளின் முடிவை வந்தடைந்து விட்டார்.

அன்னைத் தெய்வத்தின் பிறந்த வீடு ஹிமாலயம் என்றால் கன்யாகுமரியும் அவளது திருத்தலமாகவே அல்லவா இருக்கிறது? இந்நாடு முழுவதும் அவளுடைய உடைமை தான் என்பதற்கு இதைவிட என்ன சான்று வேண்டும்?

கன்னியாக, தபஸ்வினியாக வாழும் தேவியைக் காணத் துடித்தார் ஸ்வாமிஜி. அவள் கன்னியானாலும் லோக மாதா அல்லவா? அவளை எண்ணியவுடன் பச்சிளம் பாலனானார் ஸ்வாமிஜி. நீண்ட நாட்களாக அன்னையைக் காணாதிருந்த குழந்தைபோலவே ஒரே பரபரப்புடன், பரவசத்துடன் கன்யாகுமரியைக் கண்டு, அவள்முன்பு தண்டமென வீழ்ந்து தண்டனிட்டார் ஸ்வாமிஜி.

ஆலயத்திலிருந்து வெளியேறினார்: சமுத்திரக் கரையை அடைந்தார். மூன்று கடல்களும் கூடிய சங்கமத்தில் இறங்கி நீந்தலானார்: அதே சமயத்தில் அவரது உள்ளம் அறிவு, இதயம், இரண்டுக்கும் மேம்பட்ட ஆத்மா என்ற முக்கடல்களில் மூழ்கி அங்கு கிடைத்த முத்துக்களை மக்களுக்கு வழங்கத் துடியாகத் துடிக்கலாயிற்று. சிறிது தொலைவில் சமுத்திர மத்தியில் இருந்த ஒரு பாறை மீதேறி அமர்ந்து கொண்டார் ஸ்வாமிஜி. (இன்று அது விவேகானந்தர் பாறை என்றே பெயர் பெற்று விட்டது.)

நாற்புறமும் அவரைச் சுற்றி அலைகள் எழும்பி எழும்பிப் பாறையில் மோதி வெண் புகைகளைத் தெறித்துக் கொண்டிருந்தன. அவற்றைவிட உயரமாக அவருடைய உள்ளத்தில் சிந்தனை அலைகள் எழும்பிக் கொண்டிருந்தன. அதோ அவருக்கு எதிரே இந்தியா முழுவதும் கிடக்கிறது! பாரதத்தின் கடைசி கடைசி மண்ணில் அமர்ந்து கொண்டிருந்த ஸ்வாமிஜிக்குப் புல்லரித்தது. அலைகள் உடைந்து விழும் போது எழும்பிய தூவானம் அவரை ஸ்பரிசித்துக் குறுகுறுக்கச் செய்தது போலவே அவரது சிந்தனை அலைகள் மடிந்து விழும் போதும் நுண்ணிய பல எண்ணத் துளிகள் அவரது உள்ளத்தில் குறுகுறுத்து அவரை ரோமாஞ்சனம் அடையச் செய்தன. விரிந்த அவரது நயனங்கள் மேலும் விரியத் தம் எதிரே கிடந்த புண்ணிய பூமியை நோக்கினார். பரந்த அவரது மார்பு நீண்ட நீண்ட சுவாஸங்களால் மேலும் பரந்தது. பாரதத்தை அல்லவா அவர் காண்கிறார்! பாடபுத்தகத்தில் படித்த, தேசப் படங்களில் கண்ட, பேச்சாளர்களின் பிரசங்கங்களில் கேட்ட, பாரதத்தை இதோ பிரத்தியட்சமாக அல்லவா உயிருடன் கூடியதாகக் காண்கிறார்? அவர் கண் முன் அப்போது தமிழகத்தின் ஒரு கோடியாகிய கன்யாகுமரி தெரியவில்லை. ஏன், கேரளம், கர்நாடகம், ஆந்திரம், உத்கலம், அவரது அருமை வங்காளம், மஹாராஷ்டிரம், கூர்ஜரம், மத்தியப்பிரதேசம், பாஞ்சாலம், மகோந்நதமான ஹிமாசலம் உள்பட எதுவுமே அவருக்கு அப்போது தெரியவில்லை. பாரதம் என்ற ஒன்றே அவர் கண்களுக்குத் தெரிந்தது. இத்தனை பகுதிகளிருந்தாலும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மொழிகளும் பழக்க வழக்கங்களும் இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் ஆதாரமான வேதமும், வேதாந்தமும், ஆகமமும், புராணமும் ஒன்றேயல்லவா? இத்தனை பகுதிகளுக்கும் பொதுவான ஆத்மிக அமுதத்தைப் பருகி அமரத்துவம் பெறவே பிறந்தவர்கள் அல்லவா இந் நாட்டு மக்கள்? ஆனால் நடைமுறையில் அந்த அமுதத்தை அவர்கள் பருகக்காணோமே! அமுதம் கிடக்கட்டும். வயிற்றுக்கு வெறும் கூழுமின்றி, அறிவுக்குக் கல்வி உணவும் இல்லாமல் அல்லவா கோடிக்கணக்கான மக்கள் துயருறுகின்றனர்? தனிகர்களும் மேல் ஜாதி என்று சொல்லிக்கொள்கிறவர்களும் தங்களுடைய இதயங்களுக்கு உணவே படைத்துக் கொள்ளாததாலல்லவா பாமர மக்கள் இந்தக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள்?

சித்ராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்...

காதலிக்க நேரமில்லை

ஈஸ்ட்மென் கலர்







வின்சென்ட்

விஸ்வநாதன் ராமமூர்த்தி

கண்ணதாசன்

N.M.சங்கர்

கங்கா

இப்பொழுது நடைபெறுகிறது சென்னை

காஸினோ
ஸ்ரீ கிருஷ்ணா
உமா

மற்றும் தென்னாடெங்கும்...

புதுமை எதையாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்கு ஏற்படுத்தியது எனது ரசிகர்களே. காதலிக்க நேரமில்லைப் படத்தைப் பொறுத்தவரையில் நான் செய்திருக்கும் புதுமை வழக்கம்போல் காதலில் தோல்வி, சோகமான முடிவு போன்றவைகள் இல்லாமல் ஒரு சிறிய காட்சியில்கூட எனது ரசிகர்கள் கண்கலங்கக் கூடாது என்ற வகையில் ஒரு முழு நீள ஹாஸ்யப் படமாகத் தயாரித்திருப்பதே. முக்கிய இரண்டு கதாபாத்திரங்களுக்கு புது முகங்களைப் புகுத்தி ஒரு முழு நீள கலர் படமாக முதன்முறையாக வெளிவரும் சமூகச் சித்திரம் காதலிக்க நேரமில்லை ஒரு சின்ன ரகசியம்–ஆனால் உண்மை–புதுமணத் தம்பதிகளுக்கும், கல்யாணம் செய்துகொள்ளப்போகும் இளைஞர் சமுதாயத்திற்கும் காதலிக்க நேரமில்லை ஒரு நல்ல காதல் விருந்து. அலுவலகத்திற்கு செல்பவர்களோ வயதில் பெரியவர்களோ நாங்கள் மட்டும் விதிவிலக்கா என்று கேட்டு விடாதீர்கள் ஓயாத உழைப்பிற்குப் பிறகு உங்கள் பொழுதை குடும்பத்தோடு உற்சாகத்துடன் கழிக்க வழிசெய்யும் படம் காதலிக்க நேரமில்லை.

ஆனால் ஒரு நிபந்தனை. படம் பார்த்த பிறகு அதிகம் சிரித்ததினால் ஏற்படக்கூடிய வயிற்றுக் கோளாறுகளுக்கு சித்ராலயா ஸ்தாபனம் பொறுப்பாளியல்ல.

இந்த நாட்டின் கோடானு கோடி ஏழைகளின் வேதனை அவ்வளவையும் சேர்த்து ஸ்வாமிஜி அப்போது அநுபவித்தார். அந்த விகல வேதனையைத் தீர்க்கும் மருந்தான கருணையும் அப்போது அவருள்ளத்தில் சுரக்கத் தொடங்கிற்று. இந் நாட்டு தனிகர்களும், மேல் ஜாதியினரும் காட்டாத கருணை எல்லாம் சேர்ந்து ஸ்வாமிஜி ஒருவரின் உள்ளத்திலேயே அவரைச் சுற்றியுள்ள கருங் கடலாக அலை மோதிப் புரண்டது. அப்படி அலை வீசும்போதே அவர் அமர்ந்திருந்த பாறை போன்ற ஓர் உறுதிப்பாடும் அவரது உள்ளத்தில் இறுகிற்று. அற்புதமானதொரு கருணை சமாதியில் ஆழ்ந்தார் ஸ்வாமிஜி. கடலும் அவரைப் போலக் கருணை சமாதியில் ஆழ்ந்தே சோக ஒலி பெருக்குவதாகத் தோன்றிற்று.

மெல்ல மெல்ல அலை ஒலி பிரணவநாதமாக மாறியது. பிரணவத்தை ஜீவஸ்வரமாகக் கொண்ட வேத கோஷமாயிற்று.

ஜகத்தையெல்லாம் பரம்பொருளின் கவின் மிகு ஓவிய சாலையாகக் கண்டு இயற்கையுடனும், சகல ஜீவராசிகளுடன் இயைந்து வாழ்ந்து, அவற்றைப் போற்றிப் பூஜித்த வேதகால வரலாறு அவர் முன் விரிந்தது.

இந்த ஓவிய சாலையை நிர்மாணித்த மகா மதியில் கரைந்து போய், பரம்பொருளும் தானும் ஒன்றாகும் பரம நிலையைக் கூறிய உபநிஷத காலம் ஸ்வாமிஜிக்கு ஸ்வச்சமாகத் தெரிந்தது.

ஜீவன் பிரம்மமாவதற்கு வழி கூறிய அக்காலத்துக்குப்பின் பிரம்மமே ஜீவனாகி ராமனாகவும், கிருஷ்ணனாகவும் இந்தப் பாரத மண்ணில் வந்து வாழ்ந்த காலத்தில் ஸ்வாமிஜி இணைந்தார்.

சடங்குகள் அதிகமாகி, அக உணர்வு குன்றி, புறச் செயலே மிகுதியானபோது, சிலத் திறனால் ஒவ்வொருவனும் தானாக சத்தியத்தைக் காணவேண்டும் என்று கூற வந்த புத்தரின் சரித்திரத்தையும், பௌத்தம் இந்தியாவில் வளர்ந்ததையும் கண்டார் ஸ்வாமிஜி.

அதன் பின்பு சடங்குகள், பக்தி, ஞானம், அஹிம்ஸை இவை யெல்லாம் இணைந்த ஹிந்து தர்மத்தை ஆதிசங்கரர் நிலைநாட்டியதைக் கண்டார்.

பிற்பாடு ஆழ்வார்களும், நாயன்மார்களும், ராமாநுஜரும், மத்வரும் தோன்றி பக்தியை வலியுறுத்தியதைக் கண்டார். கௌரங்கரும், மீராவும், இன்னும் எண்ணற்ற அடியார்களும் அந்தப் பக்திப் பிரவாகத்தைப் பெருக்கியதைக் கண்டார்.

ஆத்மிகத்தில் மட்டுமின்றி அரசியலிலும் மகோந்நதமாக விளங்கி வந்த பாரதம் — அந்நியர்களின் ஆட்சிக்கு அவ்வப்போது அடங்கி யிருந்தாலும், அந்த அந்நியர்களின் தத்துவங்களையும் தனதாக்கிக் கொண்ட நாடு — அதன்பின் ஒரேயடியாக வீழ்ந்ததைக் கண்டு நெஞ்சுடைந்தார். முகலாய ஆட்சியும், அதன்பின் பிரிட்டிஷ் ஆட்சியும் ஏற்பட்டுப் பாரதம் ஆட்சியாளர்களின் வாழ்முறையே சிறந்தது என மயங்கித் தன் ஒப்பற்ற பண்பைக் கைவிட்டதைக் கண்டு குமுறினார்: விட்டுக் கொடுக்கவே முன்வராமல் மூடநம்பிக்கைகளைக் கட்டி அழுகிற சநாதனிகளிடமும், பாரதப் பண்புகள் அவ்வளவையும் விட்டுக் கொடுத்து மேல் நாட்டுப் பாதையிலேயே செல்ல வேண்டும் என்று மோகித்துக் கிடக்கும் 'சீர்திருத்தவாதி'களிடமும் நாடு சிக்கிக் கொண்டிருப்பதாகக் கண்டார்.

மலரின் தனித் தனி இதழ்களைக் கண்டு, பின்னர் இதழ்களை மறந்து மலர் என்ற ஒன்றைக் காணுவது போல, ஒவ்வொரு சகாப்தமாகப் பாரத சரித்திரத்தைக் கண்டு வந்த ஸ்வாமிஜி இப்போது பாரதத்தின் பிராணன் என்பதாக ஏதோ ஒரு பண்பையே தெள்ளத் தெளியக் கண்டார். அதன் பிராணவாயு சமயம்தான் என்ற உணர்வும் முன் எப்போதையும்விடப் பலமாக ஸ்வாமிஜியின் உள்ளத்தில் உறைந்தது. பாரத மக்களின் இசைக்கும், இலக்கியத்துக்கும், சித்திரத்துக்கும், சிற்பத்துக்கும், பாரத மக்களின் வாழ்க்கையில் ஒவ்வோர் அம்சத்துக்கும் ஊட்டமளிப்பது சமய உணர்வுதான் என்று திடமாக உணர்ந்தார்.

சக்தி குன்றிக் கிடக்கும் பாரத நாட்டைத் தட்டி எழுப்பப் போவதும் இந்த சமய உணர்வுதான் என்ற நம்பிக்கையைப் பெற்றார். அரசியலும், பொருளாதாரமும், விஞ்ஞானமும் இந்தியாவுக்கு இரண்டாம்பக்ஷம் தான் என்று உணர்ந்தார். இந்தியா தான் ஆத்மிகம் பெறுவதோடு, ஆத்மிகத்தையும் அதன் அங்கமான அறநெறியையும் உலகம் முழுவதற்கும் காத்துக் கொடுக்கும் மகத்தான பொறுப்பு பெற்றுள்ளது என உணர்ந்தார்.

இந்தியாவுடைய பொறுப்பு என்றால் அது தம்முடைய பொறுப்பு என்றே பொருளாகும்: ஏனெனில், தாமே இறுகிய இந்தியா என்று ஸ்வாமிஜியுடைய உயிரணுக்கள் ஒவ்வொன்றும் தீவிரமாக உணர்ந்தன. பிற்காலத்தில் தம்மை இறுகிய இந்தியா (Condensed India) என்று வருணித்துக்கொண்ட ஸ்வாமிஜி கன்னியாகுமரியில் அந்த உணர்வை அசைக்க முடியாதபடி பெற்று விட்டார்.

உணர்வு சரிதான். ஆனால் இதைக் காரியத்தில் தாம் எப்படிச் செய்ய முடியும்? காரியமல்லவா முக்கியம்? காரியமற்றிருப்பது சாதாரணசமாதியின் நிறைவு. ஆனால் கருணை சமாதியின் நிறைவு பிறருக்காகக் கருமத்தில் ஈடுபடுவதல்லவா? கையில் கால் காசு இல்லாத தாம் ஏழைகளிடம் வாய் வேதாந்தம் வேண்டுமானால் பேசலாமே ஒழிய, காரிய பூர்வமாக அவர்களுடைய வறுமையை எப்படித் துடைப்பது? உலகின் ஆத்மிக வறுமையை முப்பது பிராயத்து ஆண்டிப் பரதேசியான தாம் எப்படித் தீர்ப்பது?

கலங்கிய கண்களுடன் நாற்புறமும் பார்த்தார் ஸ்வாமிஜி. எங்கும் ஒரே அலைகள்தான்: கண்ணுக்கெட்டிய தூரம் வரை சமுத்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார், ஸ்வாமிஜி. திடீரென்று அவரது திருஷ்டியின் எல்லை விரிந்து, விரிந்து சென்று கொண்டேயிருந்தது, தொடுவானம் என்பது

மேலும் மேலும் தொலைவில் நகர்ந்து கொண்டே யிருந்தது. விந்தையிலும் விந்தையாக ஆயிரமாயிரம் காதங்கள் கடந்து கடலை அளந்து கொண்டிருந்தது அவரது பார்வை. ஆயிரம் பல்லாயிரம் காதங்களுக்கப்பாலுள்ள அமெரிக்கக் கண்டம் அவருடைய கண்களுக்குக் கோசரமாயிற்று. அங்கிருந்து ஓர் ஒளி ரேகை புறப்பட்டது. அது நீண்டு நீண்டு ஸ்வாமிஜியின் அருகில் வந்து, 'வா, வா' என்றழைத்தது.

'ஆம், நாம் அமெரிக்கா சென்றேயாக வேண்டும்; சர்வமத மகாசபையில் கலந்து கொண்டு ஸநாதன தர்மத்தின் மாண்பினை உலகுக்கு அறிவித்தேயாக வேண்டும். உலகுக்கு ஆத்மிகத்தை அளிக்க வேண்டும். தம்முடைய ஒரு பிறவிப் பணி இதனால் பூர்த்தியாகும். அந்தப் பெருமையுடன் இந்தியா திரும்பும்போது இன்று உதாசீனமாக இருப்பவர்களெல்லாம் தம்மிடம் வருவார்கள். அவர்களின் உதவியைக் கொண்டு இரண்டாவது பிறவிப் பணியும் புரிய வசதி ஏற்படும். மக்கள் சேவைக்காக மாபெரும் தர்ம நிறுவனம் ஒன்றைச் சமைக்க வேண்டும். மக்களின் சமய நம்பிக்கையை வளர்ப்பதோடு அவர்களின் வறுமையை ஒழிக்கவும், நோவு நொடிகளைத் தீர்க்கவும், வெள்ளம் முதலிய இயற்கை உத்பாத இன்னல்களைத் துடைக்கவும் பாடுபடும் நிறுவனமாக அதனை அமைக்க வேண்டும். அதற்குத் திரவியம் மட்டும் போதாது. பணி புரியச் சேவகர்களும் வேண்டும். வீடு — வாசல், பெண்டாட்டி — பிள்ளை என்ற சிந்தனையின்றி மக்கள் சேவையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். தூய்மையில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும்; உயரிய மத அநுபவம் படைத்தவர்களாக இருக்க வேண்டும்; மக்களுக்காகப் பொருள் சேகரித்து அதனை நிர்வாகம் செய்த போதிலும் பொருளாசை தம்மைத் தீண்டாமல் தர்மகர்த்தர்களாக வாழும் பூரணத் துறவு மனப்பான்மை படைத்தவர்களாக இருக்க வேண்டும்.'

சந்நியாசம் — சேவை என்ற இரட்டை லட்சியத்தை வைத்து ஒரு புனித சேனையைத் திரட்ட வேண்டும் என்று கருதினார் ஸ்வாமிஜி. அப்படித் திரட்டுவது சாத்தியமே என்று தெளிந்தார்.

கடல் அலைகள் கொந்தளித்துக் கொண்டே தான் இருந்தன. ஆனால் ஸ்வாமிஜியின் இதயக் கொந்தளிப்பு மெல்ல மெல்ல அடங்கிற்று. கடலின் அடிவாரத்தைவிட ஆழ்ந்த தமது இதய அடிவாரத்துக்குச் சென்ற ஸ்வாமிஜி அங்கே சிந்தனை அலை ஓட்டமேயில்லாத கருணையின் மௌனத்தில் ஆழ்ந்து விட்டார். அந்த மௌனம் கலைந்த பின்னும் அவரது வாயினால் பேச முடியவில்லை. அவரது நயனங்களே கண்ணீரின் மொழியில் பேசின. நேத்திரத்தில் மல்கிய பனியின் வழியே கன்னியாகுமரியின் ஆலயத்தை நோக்கினார் ஸ்வாமிஜி. 'அன்னையே, அலைப்புண்ட என் உள்ளத்துக்கு ஓர் உறுதியும், திட்டவட்டமான காரியக்கிரமம் ஒன்றையும் அளித்தாயே' என்ற நன்றி உணர்வு மாலை மாலையாக வழியும் அவரது கண்ணீராக உருவெடுத்தது. ஆலயத்துக்குள் அன்னைக்குச் சாத்திய மாலைகளுக்கெல்லாம் மேலாகக் கருணை மணமும் கருணையின் மென்மையும் பொருந்திய இந்தக் கண்ணீர் மாலையைக் கன்னியம்மன் அங்கீகரித்துக் கொண்டாள்.

அன்னையை எண்ணியவுடன் அவளிலேயே தம்மை ஒப்புவித்து வாழ்ந்த ஆசாரியர் ராமகிருஷ்ணரின் நினைவு ஸ்வாமிஜியை நெகிழ்த்தது. "என் ஐயா, என்னை இப்பணியில் நீதான் ஈடுபடுத்த வேண்டும். மக்களை ஆண்டவனாகக் கருதிச் சேவை செய்வதே அத்வைதம் என்று உபதேசித்தது நீயே அல்லவா? அப்படி நான் சேவை புரிய அருள்வாய்; சேவா ஸ்தாபனம் அமைக்க அருள்வாய்" என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

தியான சமாதியின் நிறைவு, தம்மையே மக்களுக்காக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும், தம்மைப்போல் இன்னும் பலரையும் சேவை சேனைக்குத் திரட்ட வேண்டும் என்ற தியாக சமாதியாக மாறிற்று. தாம் உலகுக்கெல்லாம் ஓர் அடிமை என்பதில் அரசனுக்கும் கிட்டாத ஆனந்தத்துடன் பாரதத் தாயின் அடிப்பிலைகளிலிருந்து இளம் பினார் ஸ்வாமிஜி. **(தொடரும்)**

அக்கப்போர்

தேசியப் பாதுகாப்பு நிதி வசூலுக்காகக் கொடுக்கப்பட்ட ரசீதுப் புத்தகங்களில் 91ஐத் தவிர மற்றவையாவது திரும்பப் பணத்துடன் வந்து விட்டதற்காகக் கடவுளுக்கு வந்தனம் செலுத்த நாடெங்கும் ஒரு பிரார்த்தனை தினம் கொண்டாடப்படும்.



ஃ ஃ ஃ

மணியார்டர் நமூனாக்களை இனி மூன்று பைசா விலை கொடுத்து வாங்க வேண்டியிருப்பதாலும், அவை சாமான் பொட்டணம் மடிப்பதற்கு ஏற்றதாய் இல்லாமல் தடியாய் இருப்பதாலும் இனி பலர் மெல்லியதாக இருக்கும் தந்தி நமூனாக்களையே வாங்கிப் போட்டு வைக்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

லஞ்சம் வாங்குபவர்களைக் கண்டுபிடிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் புதிய ஸ்தாபனம், அக்மார்க் முறையைப் பின்பற்றப் போகிறது. நல்ல கலப்பற்ற சாமானுக்கு 'அக்மார்க்' முத்திரை போடுவது போல், லஞ்சம் வாங்காத மந்திரிகள், அரசாங்க ஊழியர்கள் இவர்கள் நெற்றியில் ஒரு முத்திரை போடும்.





சிறந்த தரத்துடன் சிக்கனமும்
குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கிறது
COLGATE
All-Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
அபூர்வ மலர்களின் நீடித்திருக்கும் நறுமணங்கொண்டது



பண்டிட்
கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்

ஆயிரத்தில் ஒரு படம்



ஐந்து கோடியே எழுபத்தைந்து லக்ஷத்துப் பத்தாயிரம் சதுர மைல் நிலப் பரப்பளவுள்ள இந்தப் பரந்த உலகத்தில் வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான திரைப்படங்கள் உருவாகின்றன. ஆனால் திரை உலக சரித்திரத்தில் நிரந்தர இடம் பிடித்துக் கொள்ளக் கூடிய திரைப்படங்கள் ஏதோ அபூர்வமாகத்தான் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய 'ஆயிரத்தில் ஒரு படமாக'க் கருதப்படக் கூடிய திரைப்படம் எல்ஸிட்.

ஸாமுவல் பிரான்ஸ்டனால் தயாரிக்கப்பட்டுக் கொலம்பியா பிக்சர்ஸ் வெளியிடும் இப்படம் பன்னிரண்டாயிரம் ஸ்பானிஷ் மக்களின் ஒத்துழைப்புடன் ஸ்பெயின் தேசத்திலேயே எடுக்கப்பட்டது. அந்த நாட்டின் பாழடைந்த கோட்டைகள் பலவற்றுக்கு அடித்தது யோகம்! திரைப்படக் குழுவினர் அவற்றைப் புதுப்பித்துக் கட்டினர்! ஸ்பானிஷ் அரசாங்கம் ஆயிரக்கணக்கான தனது குதிரைப்படை வீரர்களைக் கொடுத்து உதவியது. கணக்கற்ற வியாபாரக் கப்பல்கள் கருப்புப் பாய்மரம் விரித்த முஸ்லிம் கப்பல் படையாக உருமாறின. படத்துக்குத் தேவையான கத்தி கேடயங்கள் ஈட்டிகள் முதலானவற்றைச் செய்து முடிக்க ஸ்பெயின் நாட்டின் முதல்தரமான வார்ப்படச் சாலைக்கே மூன்று மாதங்களாயின. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட உடைகள் தயாரிக்கப்பட்டன.

ஆனால் பல்லாயிரக்கணக்கானோர் நடித்து லட்சக் கணக்கில் செலவழித்து எடுக்கப்பட்ட படம் என்பதால் மட்டும் எல்ஸிட் சிறப்புப் பெற்றுவிடவில்லை; அது முடியவும் முடியாது. இவற்றுடன்கூட லட்சியக் கதை, உன்னதமான நடிப்பு, திறமையான டைரக்ஷன் ஆகியவையும் சேர்ந்துதான் அதனை ஆயிரத்தில் ஒரு படமாக ஆக்கியிருக்கின்றன.

கிறிஸ்துவ அரசர்களுக்கும் மூர்களுக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படுத்தி அந்நியப் படையெடுப்பைச் சமாளித்து வெற்றி கண்டு 'இறவா வரம்' பெற்ற எல்ஸிட் என்ற வீரனின் வரலாறு ஸ்பெயின் நாட்டில் கர்ண பரம்பரைக் கதையாக வழங்கி வருகிறது. மரணத்திலும் அழியாத வீரமும் வெறுப்பிலும் அழியாத அன்பும் கொண்ட அந்த இதிகாச புருஷனின் உண்மையான வாழ்க்கைகூட அக்காலத்தில் இத்தனை சிறப்பாக இருந்திருக்க முடியாது என்று நினைக்கச் செய்து விடுகிறார் டைரக்டர் ஆன்தோனி மான்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஸோபியா லாரென் மற்ற எல்லா நடிகைகளையும் போல அழகி என்ற முறையில்தான் திரை உலகில் புகுந்தார். ஆனால் கவர்ச்சிகரமான உடல் அமைப்பு மட்டும் திரை உலகில் நிலைத்திருக்கப் போதுமானதல்ல என்பதை அந்த ஆரம்ப நாட்களிலேயே உணர்ந்து தமக்கு இயல்பாகவே இருந்த நடிப்புத் திறனையும் ஆர்வத்தையும் வளர்த்துக் கொண்டு இன்று முதல்தரமான நட்சத்திரமாக விளங்குகிறார். ஸோபியா லாரென் இந்தப் படத்தில் எல்ஸிட்டின் காதலியாகத் தோன்றுகிறார்.



கதாநாயகனை நடிக்கும் ஹெஸ்டன் ஏற்கனவே ஒடிந்துவிடுவது போலிருந்த தமது உடலிலிருந்து மேலும் பன்னிரண்டு பவுண்டு எடையை உதறித் தள்ளினாராம் இப்படத்துக்காக. படப்பிடிப்புக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே ஸ்பெயின் தேசத்துக்குப் போயிருந்து பயிற்சி பெறத் தொடங்கினார். எப்படி? தினம் இரண்டு மணி நேரம் குதிரை ஏற்றம்; இரண்டு மணி நேரம் கத்தி, ஈட்டிச் சண்டைகள்; ஒரு மணி நேரம் உடற்பயிற்சி, ஐந்து மைல் நடை. இத்தனையும் நிகழ்ந்தன. ஒரு பட ஒப்பந்தம் கையெழுத்தானதும் ஹெஸ்டனைப் போன்ற சிலர் அப்படம் நல்ல பெயர் எடுக்க வேணும் என்பதற்காக உயிரையே கொடுக்கவும் தயாராகி விடுகிறார்கள்; அத்தகையவர்கள் மகத்தான வெற்றி பெறுவதற்குக் கேட்கவா வேணும்? தாங்களும்உயர்ந்து,படத்தையும்உயர்த்தி, இதுபோன்ற படங்களைத் தயாரிக்கும் அமெரிக்க நாட்டுக்கே பெருமை தேடித் தருகிறார்கள்.

என்றும் நினைவிலிருக்கும் படம் எல்ஸிட்.

உயரே இருந்த இரண்டு வீணைகளையும் பார்த்ததும் பிச்சுமணியின் கலை உள்ளத்தில் உற்சாகம் கரை புரண்டது. ''உமா! இரண்டு வீணைகள் இருக்கின்றனவே, ஏது?'' என்று கேட்டான்.

''ஒன்று என்னுடைய வீணை! இன்னொன்று நீ வாசித்த ராஜியின் வீணைதான்! சுத்தப்படுத்திக் கொடுப்பதற்காக அதை எடுத்து வந்தேன்!''

''நான் வாசித்ததால் அது அழுக்காகி விட்டதா?'' என்றான் பிச்சுமணி! வெகுளித்தனமாக அல்ல, குறும்புத்தனமாகத்தான்!

''இல்லை, பிச்சுமணி! நீ வாசித்ததால் அந்த வீணைக்கே ஒரு தனி நாதம் உண்டாகியிருக்கிறது!''

''நீங்கள் வீணை வாசித்து நான் கேட்க வேண்டும், உமா! நீங்கள் வேலை செய்து அலுத்திருக்கும் இந்த நேரத்தில் வீணையின் இன்னிசை உங்களுக்கும் இதமளிக்கும்! நாம் இருவருமே போட்டி போட்டுக் கொண்டு வீணை இசைத்துப் பார்க்கலாமே!'' என்ற பிச்சுமணி அவளுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல் விட்டத்தில் தூங்கும் இரண்டு வீணைகளையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கீழே இறக்கி ஒன்றை உமாவின் முன் வைத்து விட்டு இன்னொன்றைத் தன் முன் வைத்துக் கொண்டு வீணையை மீட்டலானான்.

உமாவோ ஏதோ மந்திர சக்தியால் கட்டுண்டவள் போல் தன் வீணையை மீட்டி அவனுடைய கருதிக்கேற்றபடி தானும் வாசிக்கலானாள்.

''காத்திருப்பான் கண்ணன் — பிருந்தாவனத்திலே'' என்ற பாடலின் கருத்துக்களையெல்லாம் அவற்றின் ஆத்ம சொரூபமான உணர்ச்சிகளையெல்லாம் பிச்சுமணி தன் வீணையின் தந்திகளிலே இசை வெள்ளமாக வடிக்கலானான். சில விநாடிகளிலேயே உமா அந்த இசை வெள்ளத்திலே தன்னை மறந்து ஒன்றியவளாய், பிச்சுமணி இசைக்கும் வீணாகானத்தின் காந்த அலைகளாலேயே தன் விரல்கள் மாயம் போல் மீட்டப்பட்டுத் தன்னை மறந்து வீணை வாசித்துக் கொண்டிருந்தாள். இந்த உலகம், இந்த வாழ்க்கை, அவற்றின் விவகாரங்கள், கஷ்டங்கள், கட்டுப்பாடுகள், பிரச்னைகள் அனைத்தையும் வெறும் சருகு போல் தூரத் தள்ளி விட்டு இது வரையில் கனவில்கூடக் கண்டிராத ஏதோ ஒரு கண் காணாத புதிய உலகத்துக்குப் பிச்சுமணி தன்னையும் அழைத்துச் செல்வது போலவே இருந்தது அவளுக்கு! அந்த மயக்கத்தில் பிச்சுமணி என்ன பாடலை எந்த ராகத்தில் இசைக்கிறான் என்பது உமாவுக்குத் தெரியா விட்டாலும், அப்பாடலின் அந்தராத்மாவெல்லாம் நன்கு பழகிய அனுராகம் போலவே அவளுக்குத் தெரிந்தது. அவளுடைய இதயத்துக்குப் புரியக் கூடிய இசை மொழியிலேயே பிச்சுமணி, தான் உணருவதையெல்லாம் அவளையும் உணரச் செய்தான்; தான் காண்பதையெல்லாம் அவளையும் காணச் செய்தான்.

ஆனந்தத்தின் பொன் மயமான ஒரு புகைப் படலம் உமாவைச் சூழ்ந்து கொள்ளுகிறது. அதனிடையே ஒரே ஒரு நட்சத்திரம் (பிச்சுமணி வர்ணித்த காதல் நட்சத்திரம்) மிக மெல்லியதாகத் தோன்றி மெல்லக் கண் சிமிட்டுகிறது. வீணாகானத்தின் வழியே உணர்ச்சிகளின் ஸ்தாயி ஏற ஏற, அந்த நட்சத்திரம் அதிவேகமாக வளர்ந்து இந்தப் பிரபஞ்சத்தை விடப் பெரிதாகி அவளை ஆட்கொள்ள அவளருகிலேயே நகர்ந்து வருகிறது. அதிலிருந்து இரண்டு மாயக் கரங்கள் அமுத கலசத்துடன் நீண்டு அவள் மீது அமிர்த தாரையைப் பொழிந்து அதிலே அவளை மிருதுவாகத் தூக்கிக் கொண்டு இசை அலைகளிலேயே மிதந்து சென்று, வானத்துக்கும் அப்பாலுள்ள பிருந்தாவனத்துக்கே அவளைக் கொண்டு போய்ச் சேர்க்கிறது. கண்ணன் யார், தான் யார் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. அதனால் அவள் இக்குமுக்காடி, ''கண்ணா! நீயே வந்து என்னை ஏற்றுக் கொள்!'' என்று கூவியபடி அப்படியே மூர்ச்சித்து விழுகிறாள்: இரண்டு கரங்கள் ஆதரவாக அவளைப் பற்றிக் கொண்டு அள்ளி எடுக்கின்றன.

வீணாகானம் நின்று விட்டது!

உமா தன் வீணையின் மீதே மூர்ச்சித்துத் தலை சாய்ந்து விட்டாள்!

மறுபடியும் உமா கண் விழித்துப் பார்த்த போது கதகதப்பான இரண்டு கரங்கள் தன் கையோடு சேர்த்து ஆதரவாகப் பற்றிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

குண்டு மல்லிகை

அரு.ராமநாதன்

பிச்சுமணி தன் நெஞ்சையே தலையணையாக்கி அவளுடைய முகத்தை நோக்கிக் குனிந்து பரபரப்புடன், ''உமா!...... உமா! பேசுங்கள் உமா! உங்களுக்கு என்ன? சொல்லுங்கள், உமா! உங்களுக்கு ஒன்றுமில்லையே?'' என்று பதறினான்.

''எனக்கென்ன?'' என்று உமா திருதிருவென விழித்தாள்.

அவளுடைய கையைப் பிச்சுமணி பதைபதைப்புடன் இன்னும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டு, ''நான் பயந்தே போய் விட்டேன்! நீங்கள் மூர்ச்சித்து விழுந்து விட்டீர்களோ என்று நினைத்தேன்! உங்களுக்கு மயக்கம் வந்து விட்டது; இல்லையா?'' என்று கேட்டான்.


'இல்லையே? அப்படி யொன்றும் இல்லையே?'' என்று மெல்லச் சொன்ன உமா, ''நீ ஏன் வீணை வாசிப்பதை நிறுத்தி விட்டாய், பிச்சுமணி?''என்றுகேட்டாள்.

''இல்லை; நீங்கள்தான் முதலில் நிறுத்தினீர்கள்!''

''ஓ! உன் வீணகானத்தைக் கேட்டு என்னையே நான் மறந்து விட்டேன்!'' என்றாள் உமா ஒரு மெய்ச் சிலிர்ப்புடன்.

அவளுடைய முகத்தருகில் வெகு நெருக்கமாகப் பிச்சுமணி தன் கண்களைப் படரவிட்டவாறு அவளைக் குறுகுறுவெனப் பார்த்தான்.

அவனுடைய நெருக்கத்திலிருந்து, அவனுடைய கைப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்பது உமாவுக்குத் தெரி



யும். ஆனால் ஏனோ அந்தக் கணம் மட்டும் தன்னை மீறிய ஒரு சக்திக்கு ஆட்பட்டு அதை அவளால் தடுக்க முடியவில்லை. அவள் உள்ளம் அவளையும் மீறி ஏதோ ஒன்றை நினைத்து ஏங்கியது. அதனால் அவளுடைய உடலெங்கும் இலேசாக ஒருவித நடுக்கம் பரவி முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

பிச்சுமணிக்கோ அந்த வியர்வையின் மணத்தோடு உமாவுக்கே இயல்பான ஒரு வித இயற்கையான நறுமணமும் சேர்ந்து கொண்டு அவனை எங்கோ உணர்ச்சி மயமான கனவுலகத்துக்குத் தூக்கிப் போவதுபோல் இருந்தது.

உமாவின் உள்ளுணர்ச்சியில் நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்று ஏதோ ஒன்று உறுத்தவே, அவள் தன் சுய நினைவை வரவழைத்துக் கொண்டு, ''பிச்சுமணி! நீ வீணையில் வாசித்த பாடல் என்ன?'' என்று கேட்டாள்.

'' 'கண்ணன் காத்திருப்பான் — பிருந்தாவனத்தில்' என்ற பாடல்தான். அதை இதற்கு முன்னால் நீங்களும் கேட்டிருப்பீர்களே?'' என்றான் பிச்சுமணி.

உமா திகைத்தாள். ''ஆமாம்! அந்தப் பாடலை நான் கேட்டும் இருக்கிறேன்! நானே பாடியும் இருக்கிறேன். ஆனால் நீ வாசித்ததிலுள்ள அர்த்த புஷ்டியை நான் இதற்கு முன் உணர்ந்ததேயில்லை!'' என்றாள் உமா.

பிச்சுமணியின் முகத்தில் அதிவிசித்திரமான புன்முறுவல் ஒன்று படர்ந்தது. ''உமா! அதன் அர்த்தத்தை உங்களைத் தவிர வேறு யாருமே புரிந்து கொள்ள முடியாது! நீங்கள் அப்படிப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி வாசித்தேன்....!''

அவனுடைய கைப்பிடியிலிருந்து உமா சட்டென்று தன் கையை இழுத்துக் கொண்டாள். அவனுடைய வார்த்தைகளில் உள்ள ஏதோ ஒன்று அவளுக்கு விசித்திரமான ஓர் உணர்ச்சியை உண்டாக்கி அவளுடைய இருதயத்தை நடுக்கமுறச் செய்தது.

''பிச்சுமணி! நீ என்ன சொல்கிறாய்? எனக்குப் புரியவில்லையே.....?''

''புரியவில்லையா? ஆமாம், உமா! அதை உணர்ச்சிகளாலன்றி வார்த்தைகளால் சொல்லுவது கடினம்தான்! நான் அந்தப் பாடலை வாசிக்கும்போது என் இருதயத்திலேயே ஒரு பிருந்தாவனம் உதயமாவதைக் கண்டேன்! இரண்டு மாயக் கரங்கள் ராதையை அந்தப் பிருந்தாவனத்துக்கு அழைத்து வருகின்றன. அங்கே கண்ணன் பலவித ரூபங்களில் ஒரே ரூபமுள்ள ஆயிரக்கணக்கான ராதைகளோடு நர்த்தனமாடிக் கொண்டிருக்கும் காட்சியை ராதை காண்கிறாள். அவர்களில் தனக்குரிய உண்மையான கண்ணன் யார் என்பது ராதைக்குத் தெரியவில்லையே தவிர கண்ணனுக்கு உண்மையான ராதை யார் என்பது தெரிகிறது. ஆகவே, கண்ணன் அவளுடைய திகைப்பை அகற்றித் தன்னைப் புரிந்து கொள்ளச் செய்து அவளைத் தன்னிரு கரங்களாலும் அள்ளியெடுத்துக் கொள்கிறான். இந்தக் காட்சியை நான் கண்டேன். அதே காட்சியை நீங்களும் காண வேண்டும் என்று நினைத்தேன். நீங்களும் கண்டிருப்பீர்கள்!''

உமா இக்பிரமை அடைந்தாள். தன் உள்ளத்திலே கண்ட அதியற்புதக் காட்சி பிச்சுமணி தன் இசையாலே உருவாக்கியதுதானா? இதென்ன மந்திரசக்தியா?

உமாவின் தேகமெல்லாம் புல்லரித்தது. மெல்லிய நீரோடை போல் அமைதியாக ஓடிக் கொண்டிருந்த தன் வாழ்க்கையில், இரு கரைகளையும் உடைத்துக் கொண்டு பரவும்படியான பெரும் வெள்ளம் புகுந்து விட்டது என்பதும் அவளுக்குப் புரிந்தது.

உமா வியப்புடன் பிச்சுமணியை ஏறிட்டு நோக்கினாள்.

அவளுடைய அந்தப் பார்வையே பிச்சுமணிக்குத் துணிவையும் காதலின் போதையையும் ஊட்டி விட்டது!

''உமா! இனிமேலும் என் மனத்திலுள்ளதை உங்களிடம் சொல்லி விடாவிட்டால் என் இருதயம் வெடித்து விடும்! உமா.... நான் உங்களைக் காதலிக்கிறேன்!'' என்றான் பிச்சுமணி.

அத்தியாயம் முப்பத்தாறு


அன்புக்கு ஓர் அர்த்தம்

'காதலிக்கிறேன்' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் உமா இக்பிரமையால் அதிர்ந்து போய் விட்டாள். அவள் உடம்பெல்லாம் வெட வெட வென ஆடியது. கண்ணிமைகள் படபடத்தன.


பிறகு அவள் மிகவும் சிரமப்பட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''இல்லை, இல்லை! அப்படிச் சொல்லாதே, பிச்சுமணி! அது சரியல்ல, முறையல்ல!'' என்று கிரீச்சிட்டாள்.

மக்ளீன்ஸ்

உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!



இவ்விதம் சோதியுங்கள்



1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.



மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த பற்களை வெண்மையாக்குகிறது!

பிச்சுமணி அவள் முன்னால் வேக மாகக் குனிந்து ஆசைப் பரவசம் பொங் கும் குரலில், ''இல்லே, உமா! உங்களை நான் காதலிப்பதில் ஒரு தவறும்இல்லே! வானத்தில் காதல் நட்சத்திரம் என்று ஒன்றைச் சுட்டிக் காட்டினேனே, உங் களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா ? அந்த நட்சத்திரத்தி லிருந்து அழகு தேவதை ஒருத்தி பூவுலகத்துக்கு இறங்கி என்னிடம் வருவதாகச் சிறு வயதுமுதற் கொண்டு நான் கனவு கண்டு வந்தேன் என்று சொன்னேனே, காலமெல்லாம் என் கனவுகளிலே சஞ்சரித்து வந்தஅந்த அழகு தேவதை நீங்கள்தான்! உங்களை நான் முதன் முதலில் சந்தித்த போதே, முதற் பார்வையிலேயே அதை நான் தெரிந்து கொண்டேன். அழகு தேவ தைக்கென்றே அபூர்வமாக அமைந்த நறுமணமென்று நான் கற்பனையில் இவ்வளவு காலமும் அனுபவித்து வந்த இயற்கை நறுமணத்தையும் உங்களிடம் கண்டேன்! அன்றிலிருந்து தங்களைத் தவிர எனக்கு வேறு எந்த நினைவுமே யில்லே. நான் வீட்டிலிருந்தாலும் காரில் சுற்றிக் கொண்டிருந்தாலும் இந்நேரம் நம் உமா என்ன செய்து கொண்டிருப் பார்கள்; என்னென்ன பேசுவார்கள் என்று நினைத்து நினேத்து அந்த நினைப்பி லேயே உள்ளம் பூரித்திருப்பேன்! நான் தூங்கும் போது கனவுகளில்கூட உங் களேயே கண்டு சிரிப்பேன்! உமா ! நீங்கள் இல்லா விட்டால் என் கனவுக ளெல்லாம் அழிந்து போயிருக்கும்! என் வாழ்க்கையே சிதைந்து போயிருக்கும்! இந்த உலகத்தில் எல்லாம் இருந்தும் நான் ஒன்றுமில்லாத ஜடம் போலவே நடமாடுவேன்!'' என்று வெள்ளப் பெருக்கைப் போல் வார்த்தைகளைப் பொழிந்தான்.

அதன் வேகத்தைத் தாங்க முடி யாமல் உமா அந்த உணர்ச்சி வெள் ளத்திலேயே அமிழ்ந்து தத்தளித்தாள்.

பிச்சுமணியோ அவளுடைய காதலுக் காகத் தன் உயிரையே பணயம் வைக்க வும் தயாராக இருந்தான். அவளுடைய காதலில் தன்னையே இழந்து அதிலேயே ஒன்றி விடவும் துடித்தான். உமா மட்டும் அவனை ஏற்றுக் கொள்வாளே யானால் தன் பங்களாவிலே வெகு கால மாக மூடிக் கிடக்கும் ராணி மஹாலே யும் திறந்து அதிலே அவளை ஒரு ராணி போல் கொலு வீற்றிருக்கச் செய்வது மட்டுமல்ல, தன் உள்ளத்திலேயே அவ ளைத் தெய்வமாகவும் வைத்துப் பூஜிப் பான் ! இது அவனுடைய குரலிலும் வார்த்தைகளின் வேகத்திலும் பார்வை களின் தாபத்திலும் தொனித்தது.

அவன் தன் கண்களில் நீர் மல்க, ''உமா! உங்களை நான் காதலிக்கி றேன். அதை அனுமதியுங்கள், உமா; அதை அனுமதியுங்கள்!'' என்று கெஞ் சினான். அவனுடைய தலை உமாவின் கைகளை நோக்கிக் குனிந்தது. அந்த மெல்லிய அன்புக் கைகளுக்குள் தன் னுடைய முகத்தை அப்படியே புதைத் துக் கொண்டு அழ வேண்டும் போலவும் அவனுக்கு இருந்தது.

பிறகு அவன் மௌனமாகி விட் டான். ஆனால் அந்த மௌனத்தி னிடையில் அவன் பெரிதாக மூச்சு விடு வது உமாவுக்குத் தெளிவாகக் கேட் டது! மலை போன்ற தடைகளை எதிர்த் துப் போராடும் ஒரு மனிதனைப் போல் பிச்சுமணி மிகவும் சிரமப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

உமா தன் கண்களை மூடி, பெரும் முயற்சியுடன் தன் பலம் முழுவதை யும் திரட்டிக் கொண்டாள். ஆனாலும் அவளால் பிச்சுமணியிடம் கடுமையாகப் பேசவோ, கோபித்துக் கொள்ளவோ முடிய வில்லே. ஏனெனில், அவளையும் மீறி அவள் உள்ளம் அவன் மீது பரி தாபமே கொண்டது.

உமா வேகமாகத் தன் தலையை ஆட் டியபடி, ''இல்லே, பிச்சுமணி! நீ இப் படியெல்லாம் பேசக் கூடாது! நீ அம் மாதிரி நினைக்கவே கூடாது! நிச்சய மாகக் கூடாது! அதை உடனே மறந்து விடு !'' என்று பதைபதைப்புடன் சொன்னாள்.

''உங்களை மறந்து விட வேண்டும் என்பதைவிட என் இருதயத்தையே அறுத்தெறிந்து விட வேண்டும் என்று நீங்கள் சொல்லியிருக்கலாம், உமா!'' என்று பிச்சுமணி பொருமினான்.

''பிச்சுமணி......!'' என்று கூவிய உமா, ''இனி இப்படியெல்லாம் என் னிடம் பேசக் கூடாது!'' என்று தன் குரலில் கண்டிப்பை ஏற்ற முயன்றாள்.

''ஏன்? உங்களுடைய காதலுக்கு நான் தகுதியற்றவனா?'' என்று பிச்சு மணி துடித்தான்.

உமா பதில் சொல்ல வில்லே. மௌன மாகத் தலையைக் குனிந்து கொண்டாள்.

''சொல்லுங்கள், உமா! உங்க ளுடைய காதலுக்கு நான் கொஞ்சம் கூடத் தகுதியற்றவனா?''

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லா விட்டால் பிச்சுமணி விடவே மாட் டான் போலிருந்தது.

உமா தலை நிமிர்ந்து அவனை ஏறிட் டுப் பார்த்தாள். அவ்வாறு ஒருக்கணம் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டே யிருந்த பிறகு தன் கரு விழிகளில்

வெடிக்கத் துடிக்கும் கண்ணீரை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, ''இல்லே, பிச்சுமணி! நான்தான்.... நான்தான்.... உனக்குத் தகுதியான வள் அல்ல!'' என்று கூறினள் தழு தழுக்கும் குரலில்.

''ஏன்? என்னைப் பெரிய பணக்கார வீட்டுப் பையன் என்று நினைக்கிறீர் களா ? நமக்குள் என்ன ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் அதை என் ஞல் மாற்றிவிட முடியும், உமா!''

''இல்லே, பிச்சுமணி! மாற்றவே முடியாத ஒரு காரணம் இருக்கிறது ! அதை யோசிக்கும் போது நம்மிருவருக் கும் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லே!''

''அதென்ன காரணம்?''

உமா பதில் சொல்லாமல் மறுபடியும் தலே குனிந்து கொண்டாள்.

''சொல்லுங்கள், உமா! அதென்ன காரணம்?''

உமா தயங்கினுள்.

''எதுவாக இருந்தாலும் பரவா யில்லே. தயங்காமல் சொல்லி விடுங்கள், உமா! அந்தக் காரணத்தைத் தெரிந்து கொள்ளா விட்டால் என் இருதயம் வெடித்து விடும்!''

உமா குமும்பியபடி கரகரக்கும் குரலில், ''பிச்சுமணி! உன்னேவிட நான் பெரியவள்! மூன்று வயது மூத்த வள்!'' என்று சொல்லி விட்டு அப் படியே தன் முகத்தைத் தன் இரு கைகளாலும் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழலானுள்.

பிச்சுமணி குண்டடி பட்டவன் போல் ஒரு கணம் அப்படியே அசை வற்று இருந்தான். பிறகு ஒரு முனகலே மூடி மறைப்பது போல் வறட்சியுடன் மெல்லச் சிரித்தான். வயதை மாற்ற முடியாது, வயதளவில் உமாவை அவ ஞல் எட்டிப் பிடிக்க முடியாது என்பது உண்மைதான்! ஆனல் ஆனல்....

''நீங்கள் என் மீது ரொம்பப் பிரியம் வைத்திருப்பதாகச் சொன்னீர் களே......?''

''ஆமாம், பிச்சுமணி! ஆனல்.... ஆனல்.... அது வேறொரு விதமான பிரியம்!''

அதற்கு மேல் விளக்கம் கேட்கப் பிச்சு மணி விரும்பவில்லே. தம்பிக்குச் சமதை யாக நினைத்துப் பிரியம் செலுத்திய தாக அவள் சொல்லி விடக் கூடாதே யென்று அவன் துடிதுடித்தான். அத ஞல் அவன் குறுக்கிட்டு, ''ஓ! எனக்குப் புரிகிறது! புரிகிறது!'' என்று மீண்டு மொரு வறட்சியான சிரிப்பைக் கொட் டினுன். அந்தச் சிரிப்பினடியில் ஓர் எரிமலே குமுறியது.

''பிச்சுமணி! என் அன்பிற்கு நீ வேறு விதமான அர்த்தம் கற்பித்துக் கொள்ளக் கூடாது! இப்போதே இந்த விஷயத்தை மறந்துவிட வேண்டும்! நிச்சயமாக நீ மறந்தே ஆகவேண்டும்!''

''இல்லாவிட்டால்......?''

உமா வெடுக்கென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''உமா.... உமா.... என் மீது உங் களுக்குக் கோபமில்லேயே?''


உமா பதில் சொல்ல வில்லே. திரும் பிப் பார்க்கவுமில்லே.

''சொல்லுங்கள், உமா! என் மீது கோபமில்லே யென்று சொல்லுங்கள்!''

உமா அவனே மறுபடியும் ஏறிட்டுப் பார்த்தாள். அவளுக்குப் பிச்சுமணி யின் மீது கோபம் ஏற்பட வில்லே! அப்படி அவளால் பாசாங்கு செய்யவும் முடியவில்லே !

''இல்லே, பிச்சுமணி! என்னேயே தான் நான் நொந்து கொள்கிறேன். நீ இப்படியும் நினைப்பாய் என்று ஆரம் பத்திலேயே நான் சற்று யோசித்திருந் தால் இப்படி நடந்திருக்காது! அது ஒருவிதத்தில் என் தவறுதான்!''

''இல்லே, உமா! உங்கள் மீது குறைப்பட்டுக் கொள்ளாதீர்கள்! எது நடக்க வேண்டுமோ, அதுதான் ஆரம் பத்திலிருந்து நடந்திருக்கிறது! அது



ங்களுக்குத் தெரியாததால்தான் குழம்புகிறீர்கள்!''

''பிச்சுமணி!'' என்று கூவிய உமா தன் இரு காதுகளையும் தன் இரு கைகளால் மூடிக் கொண்டு, ''இனி இந்த விஷயத்தைப் பற்றி நாம் பேசவே வேண்டாம்!'' என்று படபடத்தாள்.

பிச்சுமணி தலை குனிந்து கொண்டு தன் விசாலமான தோள்களை உற்றுப் பார்த்தான். சற்று முன் உமா மூர்ச்சித்திருந்த போது அவளுடைய தலைக்கு ஆதரவாக விளங்கிய தோள்களும் — கைகளும் இப்போதும் அதே நினைவில் பூரித்தன. உடனே ஒருவித அனல் வேகம் அவனுடைய உடலெங்கும் பரவியது! கைகளைப் பிசைந்தான்.

உமாவின் கூந்தலிலிருந்து உதிர்ந்த மல்லிகைப் பூவின் சில இதழ்கள் இன்னும் சட்டை மீதே கிடந்தன. அவற்றையெல்லாம் பிச்சுமணி ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்துத் தன் இரு கைகளுக்குள்ளும் குவியலாக வைத்துக் கொண்டு ஆசையின் பசி நிரம்பிய தன் உணர்ச்சிகரமான விழிகளால் உமாவின் முகத்தையும் பூவிதழ்களையும் மாறி மாறிப்பார்த்தான். அவனுடைய அதரங்கள் படபடவென்று துடித்தன.

உடனே அவன் தன் கைகளிலுள்ள பூவிதழ்களை யெல்லாம் அப்படியே தன் முகத்தருகில் கொண்டு போய் ஆசையோடு தன் கன்னத்தின் மீதும் கண்களின் மீதும் வைத்து ஒற்றிக் கொண்டு, ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, பூவிதழ்களைத் தன் சட்டைப் பைக்குள்ளேயே பத்திரமாக வைத்துக் கொண்டான்.

அதன் பிறகு அவன் ஒரு வார்த்தை கூடச் சொல்ல வில்லை! ஆனால் அவன் வெளியே செல்லுமுன் உமாவின் கண்களை ஆழ்ந்து உற்றுப் பார்த்தான்! அவனுடைய அந்தப் பார்வையில் ஆண்மையின் ஆழ்ந்த காந்தி தகதக வென மின்னியது!

அந்தப் பார்வையின் முன்னால் உமாவின் உடம்பெல்லாம் ஒடுங்கி, அவளையுமறியாமல் அந்தப் பார்வையை எதிரொலிப்பது போல் அவளுடைய பெண்ணுள்ளம் மெல்ல நடுங்கியது.

அதை ரசித்தபடி பிச்சுமணி அவளையே இன்னும் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான். கனியும் பெண்மையைக் கவர்ந்திழுத்துக் கொள்ளும்படியான புன்முறுவல் எந்த நிமிஷமும் அவனுடைய உதடுகளில் பொங்கிப் புரளத் தயாராக இருந்தது.

உமா சட்டென்று தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

பிச்சுமணி மெல்ல ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து நடந்து உமாவின் வீட்டிலிருந்து மனச்சுமையுடன் வெளியேறிச் சென்றான். (தொடரும்)

ஒப்பற்ற ஓவியக் கலை



ஐரோப்பாவிலேயே நாகரிகத்தில் மேம்பட்ட நாடு பிரான்ஸ். உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் புதிய மோஸ்தர் ஆடை, அணி, முடியலங்காரம் இவைகளை அறிமுகப்படுத்தி வைப்பதில் நெடுங்காலமாகப் பிரெஞ்சுக்காரர்கள்தான் முன்னணியில் நிற்கிறார்கள். இத்தகைய கலை உள்ளம் படைத்த பிரெஞ்சுக்காரர்களின் அற்புத ஓவியங்களைக் கண்டு மகிழும் வாய்ப்பைச் சென்னை மக்களுக்குச் சமீபத்தில் லலித கலா அகாதமியார் செய்து கொடுத்திருந்தனர்.

'டாப்பஸ்ட்ரீஸ்' என்று கூறப்படும் வண்ண நூல்களால் நெய்த திரைச் சீலை ஓவியங்கள்தான் இதில் கண் கவர் வனப்பு மிக்கதாய் நம் உள்ளத்தைக் கவருகின்றன. தூரிகை கொண்டு வரைந்து உணர்ச்சி பாவங்களை வெளிப்படுத்தும் அற்புதங்களை, ஒரு குறிப்பிட்ட அளவு வண்ண நூல்களைக் கொண்டு நெய்தே காட்டியிருக்கின்றனர். பதினைன்காம் நூற்றாண்டிலேயே சிறப்புற்றிருந்த இந்த ஓவியக் கலை பாணியில், இக்காலத்திய நவீன ஓவிய (மாடர்ன் ஆர்ட்) பாணியையும் கலந்து உருவாக்கியுள்ள திரைச் சீலைகளும் உள்ளன. இவை தவிர பீங்கான்தட்டு, கோப்பை, உலோகத் தட்டுகள், பாத்திரங்கள் ஆகியவைகளில் வரைந்த அற்புதமான நுண் கலைச் சித்திரங்களும் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன. 'மாடர்ன் ஆர்ட்' வகை ஓவியங்களும் இக்காட்சியில்விசேஷ இடம் பெற்றுள்ளன. 'கருப்பு வெப்பு நண்டு' படத்தைப் பொருடைக்கப் பகுதியில் காணலாம். பண்டைக் காலத்துப் பிரெஞ்சு ஓவியத்திலிருந்து இக்காலத்துச் சித்திரத்தின வளர்ச்சி வரையில் இக்காட்சி நமக்கு விளக்குகிறது.



கௌரி கல்யாணம்

ந. சிதம்பர சுப்பிரமணியன்

கல்யாண வீடு எதிர்பார்த்தபடி கோலாகலமாகத்தான் இருந்தது. காரிலிருந்து இறங்கி வந்த பெரிய மனிதரைப் பெரியவர்கள், சிறியவர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லாரும் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்றனர். சந்தனப் பேலாவில் நுனி விரலை நனைத்து உள்ளங் கையிலும் புறங்கையிலும் தடவிக்கொண்டார். சர்க்கரையைத் தொட்டும் தொடாமலும் வாயில் போடுவது போல் பாவனை செய்தார். செருப்பை எங்கே போடலாம் என்று நோட்டம் பார்த்தார். ஒரு பக்கத்தில் மலையாகக் குவிந்து கிடந்தன செருப்புகள். ஜோடிகள் எல்லாம் சிதைந்து சின்னாபின்னமாகக் கிடந்தன. சை! காரிலேயே கூடப் போட்டு விட்டுவந்திருக்கலாமே என்று நினைத்துக் கொண்டு திரும்பினார். ஒரு மூலை தட்டுப் பட்டது. அங்கே செருப்பைப் பத்திரப்படுத்தி விட்டு உள் பக்கம் வந்தார்.

புதிதாகக் கட்டப்பட்ட கல்யாண மண்டபம், சுவர்கள், ஜன்னல்கள், கதவுகள் வண்ணப் பொலிவோடு பளபளத்தன. மின் விளக்குகள் மினுக்கின. பாத்திரங்கள் மெருகு குலையாமல் பிரகாசித்தன. 'பேஷ்! இடம் சௌகரியமாயிருக்கும் போல் இருக்கிறதே' என்று எண்ணிக்கொண்டே உள்ளே சென்று கொண்டிருந்தார். இப்பொழுது ஒன்றுக்கும் சிரமப்பட வேண்டியதே யில்லை. இது வாடகை யுகம். எதுவும் வாடகைக்குக் கிடைக்கும். கட்டடம் வாடகை. நாற்காலிகள் வாடகை. பாத்திரங்கள் வாடகை. நமக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்வது அவசியமில்லை. வாடகைக்கு எல்லாம் பொது உடைமை. திருமணத்தையே ஹோட்டலில் செய்து விட்டு, நிம்மதியாக இரண்டு சம்பந்திகளும் வீடு போய்ச் சேர்ந்துவிடலாம்! இது கால தர்மம்.

''வாருங்கள், வாருங்கள்'' என்று கைகூப்பிக் கொண்டு வரவேற்றார் நடுத்தர வயதுள்ள ஒரு மனிதர்.

''அடே, சீனுவாடா!'' என்று வரவேற்றார் ஒரு கிழவர். தன்னை 'அடே' என்று பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூடியவர்கள் வெகு சிலர்தானே என்று யோசித்துக் கொண்டே யார் என்று திரும்பிப் பார்த்தார்.

''அடே, கணேசனு! நீ எப்போ வந்தே?'' என்று கேட்டுக் கொண்டே அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தார்.

கல்யாணத்தை ஏகமாகப் பணத்தைச் செலவழித்துச் செய்து கொடுக்கும் யஜமானர், புது வேஷ்டியும் பஞ்ச கச்சமுமாக ஹோம குண்டத்தின் அருகில் நின்று கொண்டிருந்தார். வந்தவரைப் பார்த்து விட்டு, புன்முறுவலுடன் கைகூப்பி, இருந்த இடத்திலிருந்தே வரவேற்றார்.

''மாமா, நமஸ்காரம் பண்ணுகிறேன்'' என்று ஒரு பெண் வந்து நமஸ்கரித்தாள்.

''இவள் யாரு தெரியுமா? நாகுவின் பெண்'' என்று அறிமுகப்படுத்தினார் ஒருவர். அறிமுகப்படுத்தினவர் யாராயிருக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

''சீனிவாசய்யர் வாள்! கொஞ்சம் உள்ளே வரியளா! இலேசாக டிபன் சாப்பிட்டு வரலாம்'' என்று அழைத்தார் ஒருவர்.

''மன்னிக்கணும். ஆகாரம் ஆகிவிட்டது. ஒன்றும் வேண்டாம்'' என்றார் சீனிவாசய்யர்.

''ஏண்டா, சீனு! வீட்டுக்காரியையும் அழைத்துக் கொண்டு வரக்கூடாதா?'' என்று கேட்டார் கணேசய்யர்.

''அவளுக்கு உடம்பு சரியில்லையப்பா!'' என்ற சீனிவாசய்யர், பெண்ணையும் பிள்ளையையும் கவனித்தார். பொருத்தமான தம்பதிகள்தாம். பாந்தமாக இருந்தது. போகட்டும். திருப்திதான்.

கூரைப் புடவையையும் தாலியையும் தட்டிலே சாஸ்திரிகள் காட்டிக் கொண்டே வந்தார். சீனிவாசய்யரும் அதைத் தொட்டு ஆசீர்வதித்தார்.

பக்கத்திலிருந்த கிழவர் கணேசய்யர் சொன்னார்: ''சீனு! இந்தக் கலியாணமும் திடீர்க் கல்யாணம். உன் கல்யாணத்தைப் போலவே தான் எதிர்பாராதபடி நிச்சயமாயிற்று. என் தங்கை கலியாணத்தின் போது கல்யாணத்துக்கு வந்த உனக்கு எப்படி நிச்சயமாயிற்று என்பது ஞாபகமிருக்கா?''

ஞாபகம் இருக்கா என்று கேட்கிறதா? ஞாபகம் இல்லாமலா போய் விடும்! அதுவும் ஒருவருக்குக் கல்யாணம் செய்து கொண்டதா ஞாபகமில்லாமல் போய் விடும்? ஞாபகம் நன்றாக இருந்தது. இன்று நடப்பது போல் ஞாபகம் இருந்தது.

இந்தப் பக்கத்தில் இருக்கும் கணேசன் தங்கைக்குக் கல்யாணம். அதற்குக் கூப்பிட்டிருந்தார்கள். இந்தக் கணேசய்யருடைய தகப்பனாரிடம், சீனிவாசனுக்கு மிகுந்த பக்தி. அவர் சொன்ன வார்த்தையை இவர் தட்ட மாட்டார். அந்தப் பெரியவருக்கு மிகுந்த வாஞ்சை. இப்பொழுதெல்லாம் சீனிவாசய்யர் வாள் என்று உபசரிக்கிறார்கள். அப்பொழுது இவரை யார் கவனித்தார்கள்? இந்தக் கணேசய்யரின் அப்பா; அவர் பெயர் புருஷோத்தம அய்யர். மனிதருக்குள்ளேயும் மிகவும் உத்தமமானவர். அவர்தான் இவருக்குப் பல விதத்தில் ஒத்தாசை செய்திருக்கிறார். இந்த மாதிரி மங்களகரமான நாட்களில்தான் அவரை நினைக்க வேண்டும்.

கல்யாணத்துக்குப் போயிருந்தார் சீனிவாசன். சம்பந்தி வீட்டாருக்குக் கௌரியின் தாத்தா பந்து. தம் பேத்தியுடன் அவர் வந்திருந்தார். அப்படி இப்படி என்று பேசி, கடைசியில் இவர் மண்டையை உருட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

''டே, சீனு! ஜாதகம் பொருந்தியாச்சு. இந்தப் பெண்ணை நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதுதான்'' என்றார் புருஷோத்தம அய்யர்.

''என்ன, மாமா! நீங்களே இப்படிச் சொல்றியளே'' என்றார் சீனிவாசன் தயக்கத்துடன்.

''நீங்களாவது நானாவதாடா? நீ என்ன பச்சைக் குழந்தையா? உன்னோடொத்த ராமு பெண்ணுக்கு வரன் தேட ஆரம்பித்து விட்டான். ஒன்றும் இந்தத் தடவை குறுக்கே பேசாதே. கல்யாணம் செய்துகொண்டு விடு'' என்று கூறினார் புருஷோத்தம அய்யர். அப்படிச் சொல்ல யார் இருக்கிறார்கள்?

வாஸ்தவம்தான்; இவருடைய நலத்தைக் கோரும் ஜீவன் உலகத்திலே ஒன்றும் இல்லை.

சீனிவாசன் சொன்னார்: ''மாமா! உங்கள் வார்த்தையை நான் தட்டவில்லை; தட்டவும் முடியாது. இருந்தாலும் என் சம்மதத்தைத் தெரியப்படுத்துவதற்கு முன்னால் அந்தப் பெண்ணோடு ஒரு வார்த்தை பேச விரும்புகிறேன். அதற்கு அநுமதி கொடுப்பீர்களா?''

புருஷோத்தம அய்யர் திகைத்துப்போனார். 'இதென்னவிபரீதமாயிருக்கு' என்றுஒருகணம் யோசித்தார். பிறகு மனத்தைச் சமாளித்துக் கொண்டு, ''டே, சீனு! பரவாயில்லை. நீ நல்ல பையன். புத்திசாலியும்கூட. கன்னியக் குறைவாய் ஒன்றும் பேச மாட்டாய் என்பது தெரியும். ஆனால் அந்தப் பெண் பரம சாது. அப்பாவி. அவளை ஒன்றும் பயமுறுத்தி விடாதே. இதுதான் நான் உன்னிடம் கேட்டுக் கொள்வது'' என்று கூறி முடித்தார்.

ஆனால் சீனிவாசன் எதிர்பார்த்தபடி இந்தப் பரீட்சை ரகசியமாக அந்தரங்க அறையில் நடைபெறவில்லை; கூடத்தில், ஆண்களும் பெண்களும் நாலு பக்கமும் இந்த வேடிக்கையைப் பார்க்க உட்கார்ந்திருந்தனர். சீனிவாசனுக்கு இது மிகவும் சங்கோசத்தை உண்டுபண்ணியது. இது என்ன நீதிமன்றத்தில் பொது மக்களுக்கு முன்பு விசாரணை செய்வது போலல்லவா இருக்கிறது! பேச ஆரம்பித்தார் சீனிவாசன். அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்க்கக்கூட சங்கோசம். பந்துக்கள் முகத்தைப் பார்ப்பதிலும் அச்சம்! தலையைக் குனிந்து கொண்டே பேச ஆரம்பித்தார். வார்த்தைகள் வரவில்லை. நாக்குக் குழறியது. கூச்சத்தாலும் குழப்பத்தாலும் வார்த்தைகளை மென்று விழுங்கிக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

''இவர்கள் எல்லோரும் உன்னை எனக்கு மணம் செய்து வைக்க நினைக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் என்னைப் பற்றி அதிகம் தெரிய வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் உனக்கு அவசியம் தெரிய வேண்டும். அதற்குத்தான் முன்கூட்டியே சொல்ல வந்தேன்.

''நான் மிகுந்த முன்கோபக்காரன். கோபத்திலே என்னதான் செய்து விடுவேன் என்பதில்லை. முன்பு ஒரு தரம் என்னுடைய பள்ளித் தோழன் மேல் ஒரு தேங்காயை விட்டெறிந்து விட்டேன். நல்ல வேளை! ஒன்றும் ஆகவில்லை.

''இரண்டாவது எனக்குப் பணத்தின் பெருமையும் தெரியாது. குடும்பத்தின் பொறுப்பும் கிடையாது. என்னை மணப்பவள் வீட்டுக் காரியங்களுடன் வீட்டுக் கவலையையும் தானே தாங்க வேண்டும்'' என்றார்.

அந்தப் பெண் கௌரி வாயைத் திறக்கவேயில்லை. சீனிவாசன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவள் காதில் படும்படி சொல்ல வேண்டியதைச் சொல்லியாகி விட்டது அல்லவா? அதுதானே முக்கியம்.

''இன்னொன்று. எனக்கு அப்பா கிடையாது. அம்மா கிடையாது. அண்ணு கிடையாது. தம்பி கிடையாது. தமக்கை கிடையாது. நான் ஏகாங்கி. ஆதரவு காட்ட ஆள் கிடையாது. ஒரே ஒரு மனிதரைத்தான் நம்பி வாழ வேண்டும். அந்த ஒரே மனிதனுக்கோ குணம் இல்லை; கௌரவம் இல்லை. பணம் இல்லை. பதவி இல்லை. உற்றார் இல்லை. உறவினர் இல்லை'' என்று வேகமாகச் சொல்லி முடித்தார்.

இதைக் கேட்கும் போதே கௌரியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. ''நானும் ஓர் அநாதைதான். என் தாத்தாதான் என்னை வளர்த்து வருகிறார்'' என்றாள். அவ்வளவுதான்; ஆனாலும் அவள் பேசிய பேச்சைவிட அவள் கண்ணீர்த் துளிகள் அதிகமாகப் பேசின. 'பாவம். நல்ல பெண். இதயத்திலே கருணை இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டார் சீனிவாசன்.

அடுத்த முகூர்த்தத்திலேயே, அவருக்கும் கௌரிக்கும் கல்யாணம் நிறைவேறியது. ■


சாஸ்திரிகள் அட்சதையை ஒவ்வொருவர் கையிலும் கொடுத்துக் கொண்டு வந்தார். கைக் கடிகாரத்தைப் பார்த்தார் சீனிவாசய்யர். முகூர்த்த காலம் முடிய இன்னும்


சென்னை: கெயிட்டி, ஸ்ரீமுருகன், ராம் (கோடம்பாக்கம்)
மார்ச்
5உ
முதல்
ராஜேந்திரன் பிக்சர்ஸ்
அல்லி
கதை, வசனம் - நாகர்கோயில் கே. பத்மநாபன்
இசை - கே.வி. மகாதேவன் • கவி • அங்கமுத்து
ஒளிப்பதிவு - சுந்தரபாபு • எடிட்டிங் - தேவன்
ஆர். வெங்கடாச்சாரி
ஸ்டுடியோ - பரணி (ஏ.எல்.எஸ் நிர்வாகம்)
டைரக்‌ஷன் - எஸ். எஸ். ஆர் M.L.A.
ELEGANT

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!





பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பற்று இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, நேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.

எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷக்கணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

பதினைந்து நிமிஷங்கள் இருந்தன. தாலி கட்ட வேண்டிய கட்டம்தான்.

"சார், என்னைத் தெரிகிறதா? நான் பாலுவின் சிநேகிதன்" என்று நடுத்தர வயதுள்ள ஒருவர் வந்தார்.

"நன்றாகத் தெரிகிறது. இப்பொழுது நீ சிந்திரியில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். சரிதானா?"

"ஆமாம். சிந்திரியில்தான் இருக்கிறேன். பாலு எங்கே இருக்கிறான்? கல்கத்தாவிலா?"

"ஆமாம்!"

"சௌக்கியமாயிருக்கிறானா?"

"பராசக்தி கிருபையால் ஒன்றும் குறை வில்லை, அப்பா!"

"குழந்தைகள்?"

"பாலுவுக்கா? ஒரு பெண். ஒரு பிள்ளை."

"போகட்டும். இப்பொழுது குடும்பத்திலே கட்டுப்பட்டு ஒடுங்கியிருப்பான்."

"ஒடுங்காமல் என்ன?"

"இல்லை. கலியாணத்தின்போது அவன் படுத்திய பாடு....?"

"ஓகோ! உனக்குத் தெரியுமா? என்ன பண்ணுகிறது அப்பா? நல்ல பையன்தான். பால்யத்தின் சேஷ்டை. அந்த ஆங்கிலோ பர்மன் பெண்ணைத்தான் மணந்து கொள்வேன் என்று ஒத்தைக் காலால் நின்றான்..."

பழைய நினைவுகள் மனத்தில் சுழன்றன.

"ஏண்டா, பாலு! நாராயணசாமி அய்யர் பெண் பார்க்க வரச் சொல்லி எழுதியிருக்கிறார். எப்பொழுது போகலாம்? உன் சௌகரியம் எப்படி?" என்று ஆரம்பித்தார் சீனிவாசய்யர் தம் புதல்வனிடம்.

"யாருக்கு அப்பா பெண் பார்க்கணும்?" என்று அதிசயத்துடன் கேட்டான் பாலு.

"அடே, மேதாவி! யாருக்கோ பார்க்க நான் ஏண்டா கவலைப்படுகிறேன்? உனக்காகக் கவலைப்படவேண்டியது ஒன்று போதாதோ?"

"உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம் அப்பா. நல்ல பிள்ளைகள் தகப்பனுக்கு ஒரு சிரமத்தையும் கொடுக்கக் கூடாது என்று சொல்வீர்கள் அல்லவா? எனக்கு மனைவியாக வரவேண்டியவளை நானே பார்த்து நிச்சயம் செய்து விட்டேன்."

"அடே, பாவிப் பயலே! யாரடா அவள்?"

"அவளை உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. அவள் ஒரு ஆங்கிலோ பர்மப் பெண். அவள் பெயர் மிஸ் பெக்கி தா."

சீனிவாசய்யரின் நிலை கழன்றது. கோபத்தினால் கண்கள் சிவந்தன.

"ஏண்டா! நீ புத்திசுவாதீனத்துடன்தான் பேசுகிறாயா?"

"புத்தி சுவாதீனத்துடன், சுய உணர்வுடன், நினைவு தடுமாறாமல், மதிமயங்கிப் போகாமல் சொல்கிறேன்."

"குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறாயா? பெரிய தீட்சிதர் பரம்பரை. நான் போகிற கல்யாண வீடுகளிலே, 'தீக்ஷா' தாம்பூலம் எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வமிசத்திலே பெரியவர்களைக் கரையேற்றும் புண்ணிய கைங்கரியத்தைச் செய்யப் பார்க்கிறாயா? போதும். உன் அசட்டு வார்த்தை. புறப்படு. பெண் பார்க்கப் போகலாம்...."



"மணி ஏழாயிடுச்சே! உங்கள் வீட்டுக்காரர் ஆபீஸிலிருந்து இன்னும் வரலியே!"

"பாவம் அவரை எழுப்பி விடாமலேயே, எல்லோரும் ஆபீசை விட்டுப் போய் விட்டார்கள் போலிருக்கு!"

"இல்லை, அப்பா. நீங்கள் இதில் தலையிடாதீர்கள். என் முடிவை மாற்ற முடியாது."

"அடே, அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டதா? நான் இதில் வற்புறுத்தத்தான் செய்வேன். நான் சொன்னபடியே கேட்க வில்லையானால், நான் உனக்குத் தகப்பனும் இல்லை; நீ எனக்குப் பிள்ளையும் இல்லை!" என்று கூறினார் சீனிவாசய்யர்.

"அப்படியே இருக்கட்டும். நீங்கள் நான் சொல்வதற்கு ஒத்துக் கொள்ளவில்லையானால், உங்களுக்குப் பின்னே இந்த லோகத்தில் இல்லை என்பது என்னவோ ஊர்ஜிதப்பட்டு விடும். டாக்டருக்கு உயிரைக் காக்கவும் முடியும்; போக்கவும் முடியும்!"

வாக்குவாதம் விபரீதமாய்ப் போய்க் கொண்டிருந்தது. நல்ல வேளை. கௌரி குறுக்கிட்டாள்: "இந்தா, பாலு! கல்யாணம் காட்சி யெல்லாம் இப்போ ஒன்றும் வேண்டாம். ஒரு மாதம் லீவு எடுத்துக் கொள். எனக்கு நம்ப பக்கமெல்லாம் போய்ப் பார்க்கணும் என்று ஆசையாயிருக்கு."

ஒன்றரை மாதம், எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டிருந்தார்கள் தாயும் பிள்ளையும். ஒரு நாள் கௌரியிடமிருந்து கடிதம் வந்தது. 'நாராயணசாமி அய்யர் பெண்ணைப் பார்த்து விட்டான். பாலுவுக்குப் பெண்ணும் பிடித்துப் போய் விட்டது. ஆவணி மாதம் 12ந் தேதி முகூர்த்தம்' என்று எழுதியிருந்தாள். கௌரி கெட்டிக்காரி. எப்படியோ நாசூக்காக காரியத்தைச் சமாளித்துச் சாதித்து விட்டாள். பகவத் அநுக்கிரகத்தால் எல்லாம் நல்லபடியாகத்தான் முடிந்தன.

"**கெ**ட்டி மேளம், கெட்டி மேளம்" என்று இரைந்தார் சாஸ்திரிகள். தவுலும், நாயனமும், மேளமும் இடிமுழக்கம் முழங்கின. சபையிலிருந்த பெண்களும் புருஷர்களும் அட்சதையையும் புஷ்பத்தையும் மணமக்களின்மேல் போட்டு, ஆசீர்வதித்தனர். நாதஸ்வரக்காரர் 'ஆனந்தம், ஆனந்தம்'— என்று ஆனந்தத்தைப் பொழிந்து கொண்டிருந்தார்.

"ஏன், மாமா! சீதா எப்பொழுது திரும்பி வருவாள்?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் ஒரு பெண்.

"அநேகமாக அடுத்த மார்ச், ஏப்ரல் மாதத்திலே வருவாள் என்று நினைக்கிறேன். நீ யாரு? எனக்குத் தெரியவில்லையே!"

''நான் இந்தக் கலியாண மாப்பிள்ளைக்கு அத்தங்கா! நானும் ஸீதாவும் ஹாஸ்டலிலே இரண்டு வருஷங்கள் சேர்ந்தாற்போல் இருந்தோம். நாங்க ரொம்ப டியர் பிரண்ட்ஸ்!''

''அப்படியா!''

''என்கிட்டே ஒன்றுகூடச் சொல்லாமல் இருக்க மாட்டா. நான்தான் அவளுக்கு உயிர்ச் சிநேகிதள்.''

''பலே! பலே! அவ்வளவு சிநேகிதமா?''

''நீங்கள் அவளுக்குக் கலியாணம் செய்து வைக்க முயன்றதெல்லாம் எனக்குத் தெரியும்.''

''சரிதான். எல்லாவற்றையும் மூட்டை அளந்து விடுவாளாக்கும்.''

அசட்டுப் பெண். கபடு சூதே தெரியாது. ஆனால் முரட்டுப் பிடிவாதம் மாத்திரம் மிகவும் உண்டு. பி. எஸ்ஸி. பரீட்சை தேறிப் பட்டம் வாங்கி விட்டாள். கலியாணம் செய்து வைக்க வேண்டும் என்று திட்டம் போட்டார் சீனிவாசய்யர். கௌரி அம்மாளும் அதையே விரும்பினாள். ஆனால் அந்தப் பெண், அமெரிக்க மான்யத்திலே, அமெரிக்கா போய் மேல் படிப்பு படிக்க வேண்டும் என்று ஒரே வீம்பாக இருந்தாள். ஸீதாவின் தாயார் தகப்பனார், அதாவது சீனிவாசய்யரின் பெண்ணும் மாப்பிள்ளையும் இந்த விஷயத்தில் பட்டும் படாமலும் இருந்தார்கள். கல்யாணம் ஆன போதிலும் திருப்திதான்; படிக்கப் போனாலும் திருப்திதான். கௌரிக்கு மாத்திரம் உள்ளூற பயம். 'நல்லபடியாகப் படிப்பை முடித்துக் கொண்டு வர வேணுமே? கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளாமல் வந்து சேர வேணுமே? குடும்பத்துக்கு அபக்கியாதி ஏற்படாமல் இருக்க வேண்டுமே? அவளை ஒருவன் கையில் ஒப்படைக்கும்வரையில் பகவானே! அவளைக் காப்பாற்று' என்று அநுதினமும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பாள். சீனிவாசய்யருக்குப் பேத்தி தங்கள் பேச்சைத் தட்டி விட்டுப் போனதில் ஆத்திரம்தான்.

''கௌரி! நீ ஒன்றும் கவலைப்படாதே. உன் பிள்ளை காரியத்தில் எப்படியோ உன் சாமர்த்தியம் பலித்து விட்டது. பேத்தி விஷயத்தில் உன் ஜம்பம் சாயவில்லை. உன் பேத்தி வாட்டசாட்டமான, நாவல் பழம் போலக் கறுப்பான நீக்ரோவைக் கல்யாணம் செய்துகொண்டு வந்துவிடுவாள். நாம் இருவரும் புண்ணியசாலிகள்தாம்'' என்று குத்தலாகப் பேசியபொழுதுகூட, இப்படி அபத்தமாக ஏதாவது நடக்காமல் இருக்க வேண்டுமே என்கிற பயம்தான் அவளுக்கு.

''ஆசீர்வாதம் ஆகப் போகிறது. ஆசீர்வாதம் ஆகப் போகிறது என்று வெளியிலே இருக்கிறவாளிடமும் சொல்விடறது'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் வாத்தியார்.

சீனிவாசய்யர் தாம் கொண்டு வந்திருந்த அன்பளிப்பை எடுத்து வைத்துக் கொண்டார்.

''ஏண்டா, சீனு! உனக்கு அறுபதுக்கு அறுபது ஆக இன்னும் எவ்வளவு வருஷம் இருக்கு?'' என்று கேட்டார் கணேசய்யர்.

''அது கிடக்கு அப்பா! இன்னும் நாலு வருஷங்களுக்கு மேல் இருக்கு'' என்றார் சீனிவாசய்யர்.

''ஏய், சீனு! உன் ஷஷ்டி அப்தபூர்த்தியை விமரிசையாகச் செய்ய வேணும். மகாராஜன் கடவுள் புண்ணியத்திலே ஒன்றும் குறையில்லை. அது இரண்டாம் கலியாணம். என்ன நான் சொல்றது சரிதானா?'' என்றார் கணேசய்யர்.

சீனிவாசய்யர் பதில் சொல்லவில்லை. 'இன்னும் நாலு வருஷங்கள் கிடக்கு. நாலு வருஷத்தைக் கண்டது யார்? கௌரிக்கு அடுத்த வருஷம் ஒரு கண்டம் இருப்பதாக மௌனி கட்டி ஜோசியர் சொல்லியிருக்கிறார். அவளுக்கு இருக்கும் வியாதிக் கதம்பம் என்னவிதமான கண்டத்தைக் கொண்டு வருமோ, யார் கண்டார்கள்?' சீனிவாசய்யர் பெருமூச்செறிந்தார். ''ஏதோ பகவான் அநுக்கிரகத்தினால் அவள் உடம்பும் நல்லபடியாக ஆகி, அறுபது சாந்தி வரையில் திடமாக இருக்கக் கூடாதா? ஷண்முகா! ராமா!'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

''சார், பானகம் சாப்பிடுங்கள்'' என்று ஒரு தம்ளரை நீட்டினான் பையன். அதைக் கையில் வாங்கிக் கொண்டார். பழங் கதையைக் கலைத்துக் கொண்டிருந்தவர், பானகத்தைக் கலைத்தார். ''நேற்று நடந்ததெல்லாம் பழங் கதையாகி விடுகின்றன. இன்று நடப்பவைகளின் கவடுகள் பழங்கால ஏட்டுக்குள் மறைந்து செல்ல விரைகின்றன. நாளை என்பதை யார் கண்டார்கள்? 'நாளும் நாளைக்கும்' சேரும் பொழுதுதான் நமக்கு வருங்காலம். இல்லா விட்டால் யாருக்கோ வருங்காலம். அந்த நாளை யார் காணப் போகிறார்கள்? பித்தன் கண்ட கனவு என்று சொன்னானே, அதைப் போலத்தானே இருக்கிறது இவ்வாழ்க்கை. இருந்த போதிலும், வாழ்க்கை இந்தப் பானகத்தைப்போல இனிப்பாகத்தான் இருக்கிறது. இந்த ருசியை மாயை என்றாலும் சரி. ரசனை என்றாலும் சரி'' என்று நினைத்துக் கொண்டே பானகத்தை உறிஞ்சினார்.

''ஆரத்தி எடுங்கோ. கௌரி கல்யாணம் பாடுங்கோ. இக்காலத்துப் பெண்களுக்குச் சினிமாப் பாட்டுத்தான் தெரியும். கௌரி கல்யாணம் பாடத் தெரியாது'' என்று கேலி செய்தார் புரோகிதர்.

இரண்டு முதிர்ந்த சுமங்கலிகள், ''கௌரி கல்யாணம் வைபோகமே'' என்று ஆரத்தி சுற்றினர்.

''கௌரி கல்யாணம்!'' ஆமாம். எல்லாத் திருமணங்களும் கௌரியின் திருமணங்கள் தாம். திருமணங்கள் தெய்வ சம்மதத்தால் ஏற்படுகின்றன என்று நாம் சொல்கிறோம். அது போலவே எல்லாத் திருமணங்களும் வேதாம்சம் பெற்றுத்தான் விளங்குகின்றன; அநித்தியமானதும், ஆனந்தமானதும், சகல ஜீவராசிகளுக்கும் பொதுப்படையானதுமான ஒரு மகத்தான தத்துவத்தின் சின்னமாக அமைவதுதான் கல்யாணம் என்று எண்ணினார் சீனிவாசய்யர்.

மாறுதலும் விரைவும் மிக நெருங்கிய உறவினர்கள் போல் இருக்கிறது. அதனால்தான் சந்தர்ப்பங்கள் மாறும்போது வாழ்க்கையே மிகவும் வேகமாக ஓடிவிடுவதுபோல் தோன்றுகிறது.

''என்னதான் விரோதம் வந்து விட்டாலும் அவரிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் நீ இதைச் செய்யலாமா? என்னமோ போ; வீட்டோடு ஒட்டாமல் போயாச்சு'' என்று அம்மா கண் கலங்கி விடை கொடுத்த போதும், தங்கைகள் ஏறக் குறைய அழுகிற நிலைக்கு மனம் வருந்தி



மணிவண்ணன்

யதையும் கண்டும் காணாதவனாகப் புறப்பட்டு விட்டான் சத்தியமூர்த்தி.

கலெக்டர் இரயில் நிலையத்துக்கு வந்து வாழ்த்துக் கூறி அவனை வழியனுப்பினார்.

மல்லிகைப்பந்தல் ரோடு நிலையத்தில் அந்த எக்ஸ்பிரஸ் வண்டி மூன்று நிமிடங்கள் நின்றன. குமரப்பன் மலைக்குப் பஸ் ஏறுவதற்காக அங்கே இறங்கிக் கொண்டான். மறுநாள் காலை சத்தியமூர்த்தி சென்னையை அடையும்போது இரயில் இரண்டரை மணி நேரத் தாமதத்தோடு ஒன்பதே முக்கால் மணிக்கு எழும்பூருக்குப் போய்ச் சேர்ந்திருந்ததனால் நிலையத்திலேயே குளித்து உடை மாற்றிக் கொண்டு அவசரம் அவசரமாகச் சென்டிரல் நிலையத்துக்குப் போய் கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸைப் பிடிப்பதற்குத்தான் நேரம் சரியாயிருந்தது. கலெக்டர் கடிதம் கொடுத்துச் சொல்லியனுப்பியிருந்த சென்னைப் பிரமுகர்களை டில்லியிலிருந்து திரும்பும் போதுதான் பார்க்க முடியுமென்று தோன்றியது. பாரதத்தின் தலைநகருக்குத் தமிழ் நாட்டின் தலைநகரிலிருந்து புறப்படும் கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ் தனக்குரிய சகலவிதமான கம்பீரங்களுடனும் ஒன்றே முக்கால் நாள் ஓடி அலுத்த களைப்போடு டெல்லி மாநகரை அடைந்த போது — டெல்லியிலுள்ள மதராஸி ஓட்டல் ஆட்கள் ஸ்டேஷன் பிளாட்பாரத்தை முற்றுகையிட்டுச் சிறாய்க்கிப் பிடிப்பதற்குப் பறந்தார்கள். மறுநாள் காலையில் இண்டர்வ்யூ. களைப்பாக இருந்ததனால் ஓய்வுகொள்ள விரும்பிய சத்தியமூர்த்தி ஸ்டேஷனுக்கு வந்திருந்த ஹோட்டல் ஏஜண்டுகளில் யாரோஒருவரோடு புறப்பட்டுப் போய் மலிவான ஏதோ ஒரு ஹோட்டலில் தங்கினான். கையில் பணம் குறைவாகக் கொண்டு வந்திருந்ததனால் இண்டர்வ்யூ முடிந்ததும் அடுத்த இரயிலில் திரும்பத் திட்டம் போட்டு ஸ்டேஷனில் இறங்கியதும் முன்னேற்பாடாகத் திரும்புவதற்கு டிக்கட்கூட எடுத்தாயிற்று.

ஜெர்மன் தூதராலயத்தில் மறுநாள் காலையில் நிகழ்ந்த இண்டர்வ்யூ

வுக்கு மொத்தம் ஏழு பேர்கள் வந்திருந்தார்கள். அதில் சத்தியமூர்த்தி உள்பட மூவர் முதல் வகுப்பில் தேறிய ஆனர்ஸ் பட்டதாரிகள். இருவர் வெறும் எம். ஏ. க்கள். இன்னும் இருவர் வெறும் பி. ஓ. எல். தகுதி மட்டுமே உடையவர்கள். இண்டர்வ்யூவில் தூதராலயத்தைச் சேர்ந்தவர்கள் உலக அரசியல், நிலவியல் பற்றிச் சில கேள்விகள் கேட்டனர். மற்றவர்கள் மொழியியல் பற்றிச் சில கேள்விகள் கேட்டார்கள். சத்தியமூர்த்தி திருப்திகரமாகவும் நன்றாகவும் மறுமொழிகளைக் கூறினான். இண்டர்வ்யூ முடிந்ததும் கலெக்டரின் அறிமுகக் கடிதங்களுக்குரியவர்கள் சிலரைச் சந்தித்தான். எல்லாரும் 'நீங்கள் தேர்ந்தெடுக்கப் பெறுவது உறுதி. அதில் சந்தேகமே பட வேண்டாம்' என்ற தோரணையில் அவனிடம் நம்பிக்கையளித்துப் பேசினார்கள். அங்கிருந்தே கலெக்டருக்கும் நண்பன் குமரப்பனுக்கும் கடிதங்கள் எழுதினான் சத்தியமூர்த்தி. திரும்பும் போது மதுரையைச் சேர்ந்த பார்லிமெண்ட் உறுப்பினர் ஒருவரை நிலையத்தில் இரயிலேறுகையில் தற்செயலாக அவன் சந்திக்க நேர்ந்தது. அவரை அவனுக்கு நன்றாகத் தெரியும். அவரோடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தான் அவன். அவரும் அவன் வந்த காரியத்தை அறிந்து அவனை மனப் பூர்வமாகப் பாராட்டினார்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்! இரண்டாவது உலகப் போருக்குப் பின் அமெரிக்க ஐரோப்பிய உதவிகளும், தன் சொந்தத் திறமையும் சேர்ந்து மேற்கு ஜெர்மனியை இணையிலா வளர்ச்சியடையச் செய்து விட்டன. அப்படி வளர்ந்த நாடுகளுக்கு உங்களைப் போன்ற இளைஞர்கள் சென்று திரும்புவது பல துறைகளில் வளராத இந்த நாட்டுக்கு எவ்வளவோ பயன்படும். நாம் இன்னும் எவ்வளவோ வளர வேண்டும். வளர வேண்டும் என்னும் உணர்வு வருவதற்கு முதலில் வளர்ந்திருப்பவர்களைக் கண் திறந்து பார்க்க வேண்டும்'' என்று அவனை உற்சாகமூட்டுவதற்காக மேற்கு ஜெர்மனியைப் பற்றிய புதுமைகளைப் புகழ்ந்து கூறத் தொடங்கியிருந்தார் அந்தப் பார்லிமெண்ட் உறுப்பினர். அவர் முதல் வகுப்பிலும் அவன் மூன்றும் வகுப்பிலுமாகப் பயணம் செய்தாலும் பயணத்தினிடையில் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். சென்னையில் ஒருநாள் தங்கி மாக்ஸ் மூல்லர் பவனிலும் ஜெர்மன் கான்ஸல் ஜெனரல் அலுவலகத்திலும் பார்க்க வேண்டியவர்களைப் பார்த்தான் அவன்.

சத்தியமூர்த்தி மதுரை திரும்பிய தினத்தன்று கலெக்டர் ஊரில் இல்லை. எங்கோ முகாமில் இருந்தார். மதுரையிலிருந்தே கடிதம் மூலம் மல்லிகைப் பந்தல் கல்லூரிக்கு லீவை இன்னும் இரண்டு நாட்கள் வளர்த்து எழுதினான் சத்தியமூர்த்தி. மறுநாள் கலெக்டர் 'காம்ப்'பிலிருந்து திரும்பவே அவரைப் பார்த்து எல்லா விவரமும் கூறியபின் தன் வீட்டுக்கும் ஒரு நடை சென்றிருந்தான். சத்தியமூர்த்தி டெல்லியிலிருந்து திரும்பிய தினத்தன்று அவனுடைய தந்தை மதுரையில்தான் இருந்தார். ஆனால் அவன் அம்மாவைப் பார்த்துச் சொல்லிக் கொள்ளப் போயிருந்த போது அவர் வீட்டில் இல்லை. அம்மா எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் திரும்பி வருகிறவரை வீட்டில் காத்திரர்மல், அம்மாவிடமும், தங்கைகளிடமும் மட்டும் சொல்லிக் கொண்டு புறப்பட்டு விட்டான் சத்தியமூர்த்தி. அவன் புறப்படும்போது வாசல் வரை கூட வந்த தங்கை ஆண்டாள், ''அண்ணா! நீ ஊரில் இல்லாதபோது உன் பெயருக்கு நேற்றோ முந்தாநாளோ மல்லிகைப்பந்தல் தபால் முத்திரையோடு ஒரு ரிஜிஸ்தர் கவர் வந்தது. போஸ்ட் மேன் அப்பாவிடமே கையெழுத்து வாங்கிக் கொண்டு அதைக் கொடுத்து விட்டான். அதிலே என்ன தான் இருந்துதோ? தெரியலை! அப்பா அதை வாங்கிப் பிரித்துப் படித்துவிட்டு ரொம்பக் கோபமா அப்படியே கிழிச்சு அடுப்பிலே கொண்டு போய்ப் போட்டிட்டாரு'' என்று காதருகே சொல்லி விட்டுப் போனாள்.

''குமரப்பனை அவருக்குப் பிடிக்காது. அவன் எனக்கு ஏதாவது கடிதம் எழுதியிருப்பான். அதைக் கிழித்து அடுப்பில் போட்டிருப்பார்'' என்று முதலில் நினைத்துக் கொண்டான் சத்தியமூர்த்தி. ஆனால் அதே சமயத்தில் நண்பன் தனக்குப் பதிவுத் தபாலில் என்ன கடிதம் எழுதியிருக்க முடியுமென்ற சந்தேகமும் உண்டாகியது. அப்போதிருந்த பரபரப்பில் அதைப் பற்றி அதிகம் சிந்திக்க நேரமில்லை அவனுக்கு. மோகினி எழுதிய கடிதமொன்றைப் பாரதி வாங்கிப் பதிவுத் தபால் மூலம் தன்னுடைய மதுரை முகவரிக்கு அனுப்பியிருக்க முடியும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லையாதலால் அந்த நினைவே அப்போது அவனுக்கு வரவில்லை. மூன்றாவது நாள் காலை மல்லிகைப் பந்தலுக்குப் பஸ்ஸில் வந்து இறங்கியபோது, இன்னும் சில நாட்களில் டில்லியிலிருந்து விவரம் தெரிந்த பின் பிரின்ஸிபாலிடம் தனது

பாருங்கள்

எப்படி யெல்லாம் பயன்படுகிறது

டாடாவின்
ஓ டி கோலான்!



TELY-30 TAM



வாசனைப் பொருளாக



முக சவரத்திற்குப் பின்
ஆரோக்கியம் தரும் லோஷனாக




சோர்வுற்ற வேளையில் உங்களுக்குப்
புத்துணர்ச்சி கொடுக்க



புதுமலர்ச்சியூட்டும்
நறுமண ஸ்நானத்திற்கு



'ஜில்'லெனப் பயணம்செய்து,
மலர்ச்சியுடன் வந்துசேர



பாங்கான பரிசுப்பொருளாக

இவை மட்டுமா? இன்னும் பல வழிகளில் உபயோகிக்கலாம். உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஒரு சீசா கைவசம் வைத்திருங்கள். டாடாவின் ஓ டி கோலான் வாகான நாலுவித சைஸ்களில், நல்ல கடைகளில் கிடைக்கின்றன. ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் பின் 'இது இல்லாமல் எப்படி இதுவரை இருக்கமுடிந்தது' என்று வியப்படைவீர்கள்.

டாடா தயாரிப்பு

ராஜிநாமாக் கடிதத்தைக் கொடுப்பதென்ற உறுதியான முடிவுக்கு வந்திருந்தான் அவன்.

சத்தியமூர்த்தி மதுரைக்கும், சென்னைக்கும், டில்லிக்கும் போய் விட்டுத் திரும்புவதற்குள் மல்லிகைப்பந்தலில் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்திருந்தன. ஜமீன்தார் உடல் நிலை தேறி எழுந்திருந்திருந்தார். பாரதி தலைக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டு இரண்டு நாள் ஆகியிருந்தது. மல்லிகைப்பந்தல் நகரின் மற்றொரு பகுதியில் மாபெரும் தோட்டத்துக்கிடையே இருந்த மஞ்சள் பட்டி ஜமீன் மாளிகை சில இடங்களில் புதுப்பித்துக் கட்டப் பெற்றுக் கவர்ச்சிகரமான டிஸ்டெம்பர் பூச்சுடன் செப்பனிடப்பட்டிருந்தது. நவீன மின்விளக்கு அழகுகளும், புதுப் புது மேஜை நாற்காலிகளும், சோபாக்களும், கட்டில்களும் மெத்தைகளும் வாங்கிப் போட்டு அழகு மாளிகையினை அரண்மனையாக்கியிருந்தார் கண்ணாயிரம். இதற்காகப் பட்டினத்திலிருந்து இரண்டு லாரிகள் நிறைய சோபா, நாற்காலிகள் முதலிய மரச் சாமான்களும் சுவரில் பதிப்பதற்கான பெல்ஜியம் கண்ணாடிகளும் வந்திருந்தன. சௌகரியமுள்ளவர்களுக்குக் கிராமமும் பட்டினம்தான். சௌகரியம் இல்லாதவர்களுக்குப் பட்டினமும் கிராமம்தான். ஏனென்றால் சௌகரியமில்லாதவர்கள் பட்டினத்திலும் கிராமத்தின் அசௌகரியங்களை அடைகிறார்கள். சௌகரியமுள்ளவர்கள் கிராமத்திலும் பட்டினத்தின் வசதிகளை அடைய முடிகிறது. இறைக்க இறைக்க ஊறும் பேய் ஊற்றைப் போல் ஜமீன் ஒழிப்புக்குப் பின்னும் ஜமீன்தாரிடம் பணம் ஊறிக் கொண்டிருந்தது. அவர் விரும்பிய சௌகரியங்கள் எல்லாம் இருக்குமிடத்தைத் தேடி வந்தன. ஒவ்வொரு பெரிய ஊரிலும் அந்தத் தனி மனிதருக்கு மாபெரும் தியேட்டர்களைப் போல் பெரிய வீடுகள் இருந்தன.

'பல பங்களாக்களிலிருக்கும் கார் ஷெட்டுகளை விடச் சிறிய மோசமான குடிசைகளில் இந்தத் தேசத்து ஏழைகள் குழந்தை குட்டிகளோடு மூச்சுத் திணறிச் சாகிறார்கள். அதே சமயத்தில் இரண்டொரு மனிதர்களே வசிக்கும் சில பங்களாக்களில் மனிதர்களுக்காக வெளியே இருக்கும் குடியிருப்புக்களைவிட அழகான கார் ஷெட்டுகள் இருக்கின்றன. வர வர இது ஒரு வேடிக்கையான இரண்டுங் கெட்டான் தேசமாகி விட்டது! எளிமையிலும் முழுமையாக நம்பிக்கை இல்லை. ஆடம்பரத்திலும் முழுமையாக நம்பிக்கை இல்லை. குணத்தையும், ஒழுக்கத்தையும் பேச்சில், எழுத்தில், கொண்டாடுகிறார்கள். பணத்தையும் பதவியையும் செல்வாக்கையுமே வாழ்க்கையில் நடைமுறையில் மதித்துப் பயப்படுகிறார்கள். புராதனமான ஆன்மீகப் பாரம்பரியத்தைத் தங்களுடையதாகச் சொல்லி மற்ற நாட்டாரிடம் பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள். சொந்த நாட்டிலோ அன்றாட வாழ்வில் வெறும் காரியவாதிகளாக — லோகாயதவாதிகளாக வாழ்கிறார்கள். இலட்சியத்தில் — நினைப்பளவில் கடவுளைப் பக்தி செய்கிறார்கள். நடைமுறையில் கண் முன்னால் சௌகரியமுள்ள மனிதனைப் பக்தி செய்து மடிகிறார்கள். இந்தத் தேசத்தின் இன்றைய வாழ்க்கையில் வாழ வேண்டும் என்கின்ற ஆசைகள் ஒருபுறமும், வாழ்வதற்குரிய சௌகரியங்கள் வேறு ஒரு புறமுமாக முரண்பட்டு நிற்கின்றன' என்று நவநீத கவி ஒரு கூட்டத்தில் சொற்பொழிவாற்றி யிருந்தார். இரண்டு

பொன் விலங்கு

> **இந்தத் தேசத்தின் இன்றைய வாழ்க்கையில் வாழ வேண்டும் என்கின்ற ஆசைகள் ஒருபுறமும், வாழ்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் வேறு ஒரு புறமுமாக முரண்பட்டு நிற்கின்றன.**

ஆண்டுகளுக்கு முன் நியூயார்க்கில் நடைபெற்ற அகில உலகக் கவி சம்மேளனத்தில் இந்தியாவிலிருந்து தமிழ் நாட்டின் பிரதிநிதியாகப் போய்க் கலந்துகொண்டு உலக சமாதானப் பண்ணிசைத்து விட்டுத் திரும்பியபின் தமிழகத்தின் முக்கியமான ஊர்களில் எல்லாம் — அந்தக் கவிஞர் பெருமானுக்கு வரவேற்பளித்தார்கள். அந்தச் சமயத்தில் மதுரையிலும் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது துன்பப் படுவோர்களின் ஊமைத் துன்பங்களையெல்லாம் சொல்லாய்க் கவிதையாய் உருவாக்கும் அந்தக் கவிஞர் திலகர் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் 'உலக அரங்கில் இந்தியாவின் சமூக வாழ்வு எப்படி ஒப்பிடப்பட முடியும்?' என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு இந்தக் கருத்துக்களையெல்லாம் தெரிவித்தார். அன்று அந்தக் கூட்டத்துக்குக் குமரப்பனும், சத்தியமூர்த்தியும் மற்ற நண்பர்களும் போயிருந்தார்கள். அன்று அவர் பேசிய கருத்துக்கள் எல்லாம் சத்தியமூர்த்தி

யின் மனத்தில் சிந்தனையைத் தூண்டி யிருந்தன. அந்தக் கருத்துக்களை மைய மாகக் கொண்டு பல நாள் பல சந்தர்ப் பங்களில் அவன் தன்னுடைய சொந்தச் சிந்தனைகளை வளர்த்திருக்கிறான். டில்லியி லிருந்து திரும்பும்போது பாராளுமன்ற உறுப்பினராகிய மதுரைப் பெரிய மனி தர் 'வளராத நாடுகளில் ஒன்றாகிய பாரதம் வளர்ந்த நாடுகளைக் கண்டறிவ தனால் மட்டுமே வளர முடியும்' என்று அடிக்கடி சொல்லி வந்த வேளையில்கூட நவநீத கவியின் இந்தப் பழைய சொற் பொழிவைத்தான் சத்தியமூர்த்தியால் நினைக்க முடிந்தது. பொது வாழ்வில் தனி மனிதனுடைய சமுதாய அந்தஸ்து உயராத வரை இந்தியா வளரவும் வாழ வும் வழியில்லை என்று எண்ணினான் அவன். இந்த விநாடி வரையில் பணத் தோடும் செல்வாக்கோடும், பதவியோ டும் சேர்ந்திருக்கிற மனிதனைத் தவிரக் குணத்தோடும், ஒழுக்கத்தோடும், நியாய நேர்மைகளோடும் சேர்ந்திருக் கிற மனிதனுக்குச் சமுதாய அந்தஸ்து என்பதே இல்லை. இந்த நிலை மாற வேண்டும் என்று சத்தியமூர்த்தி ஆசைப் பட்டான். எனவே பலவிதத்திலும் வளர்ச்சியடைந்த நாடு ஒன்றின் புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களில் போய் இரண்டாண்டுகள் இருக்கப் போகிறோம் என்ற வாய்ப்பை அவன் மனம் ஒவ் வொரு விநாடியும் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால் இத்தனை எண்ணங்களுக்கும் நடுவே 'மோகினி தன்னை ஏமாற்றி விட்டாள்' என்ற வேதனையும் ஆறாத தோர் பச்சைப் பசும் புண்ணாக அவன் மனத்தில் ஊறிப் போயிருந்தது. முன்பு ஒருநாள் நண்பன் குமரப்பனிடம் பேசும் போது, 'ஐ கேன் டை வித் ஹெர் — பட் நாட் லிவ் வித்அவுட் ஹெர்' என்று அவன் மோகினியைப் பற்றி உணர்ச்சி வசப்பட்டுக் கூறி யிருந்தான். அன்று தான் இப்படிக் கூறியதைக் கேட்டு, 'உண்மையான அன்பு — அதாவது காதல் கூடப் பல சமயங்களில் மனிதன் தனக் குப் பூட்டிக் கொள்ளும் விலைமதிப்பற்ற விலங்காகத்தான் இருக்கிறது. உண்மை யான அன்புதான் கயலை லைலாவுக் காகப் பைத்தியம் பிடித்து அலைய வைத் தது. தேவதாஸைப் பாருவுக்காக இரத் தம் கக்கிச் சாக வைத்தது. அம்பிகா பதியைக் கழுவேற்றியது. உன்னுடைய காதலுக்கு முன்பாக வந்து நிற்கும் பிரச்னைகளையும் எதிர்ப்புக்களையும் பார்க் கும் போது என் உயிர் நண்பனாகிய நீ இன்னும் முகத்தில் ஒளியிழந்து கண் களில் சிந்தனை தேங்கிக் கால்கள் நடை சோர்ந்து வாழ்க்கை வீதியில் அலைய நேரி டுமே என்றுதான் பரிதாபமாக இருக் கிறது' என்று குமரப்பன் சிரித்துக் கொண்டே பதில் சொல்லியிருந்ததைச் சத்தியமூர்த்தி இப்போது நினைவுகூர்ந் தான். 'பெண்ணின் அன்பு என்பது மனிதனுடைய மனத்தைப் பிணிக்கும் உறுத்தாத விலங்குகளில் ஒன்றாகத் தான் இருக்கும் போலும்' என்று இந்த விநாடியில் அவனும் தனக்குத் தானே உணர்ந்தாக வேண்டியிருந்தது. 'ஆண் பிள்ளைகளின் வீரத்தையும், தன்மானத் தையும் அழிக்கிற அழகுகள் உலகத் துக்கு எந்த லாபத்தைத் தரமுடியும்? கிரேக்க நாட்டு ஹெலனின் அழகிலே ஆயிரம் கப்பல்கள் பாய் விரித்துப் பறக்கத் தூண்டும் கட்டழகுக் கவர்ச்சி இருந்ததாம். எகிப்திய அழகி கிளியோ பாத்ரா சீஸரைச் சீரழித்தாள். ஹெலன் கிளியோபாத்ரா, சீதை, நூர்ஜஹான், மும்தாஜ், அகல்யை, அனார்க்கலி ஆகிய வர்களின் இணையிலா அழகினால், ஆண் பிள்ளைகள் பலர் பிரச்னைக்குரியவர்க ளாகவும் பிரச்னைகளை எதிர்கொள்கிற வர்களாகவும் ஆகி அவஸ்தைப்பட்டிருக் கிறார்கள்' என்றே நினைத்தான் அவன். அந்த நினைப்பு நீங்குவதற்குள்ளாகவே, 'மோகினியின் உடலழகைக் காட்டிலும் மனத்தின் அழகைத்தான் நான் அதிக மாக விரும்பினேன். அந்த மன அழகே பொய்யாய்ப் போன பின் நான் அவளை நினைத்துத் தான் என்ன பயன்?' என்ற கழிவிரக்க ஞாபகமும் அவனுக்கு உண் டாயிற்று. அவளை இப்போது நம்பிக் கைத் துரோகியாகப் புரிந்துகொண்டு விட்டான் அவன். ஒரு காலத்தில் அவன் அவளுடைய உயிரைக் காப்பாற்றினான். அவளோ 'தன்னுடைய நம்பிக்கையைக் கூடக் காப்பாற்றாமல் துரோகம் செய்து விட்டாளென்று இன்று அவனுக்குத் தெரிந்தது. இப்படித் தனக்கு உள்ளே குமுறும் மனக் குமுறல்களை யெல்லாம் அடக்கிக் கொண்டு புறத்தே அமைதி யாக இருப்பது போலவும் இயல்பாக இருப்பது போலவும் நடமாடிக் கொண் டிருந்தான் சத்தியமூர்த்தி. ஏமாற்றத் தையும் துரோகத்தையும் அருகருகே சந்திக்கும்போது அவற்றை விட்டு விலகி ஓடிவிட வேண்டும்போலத் தவிக்கும் இயற்கையான மனத்தவிப்புக்கு ஏற்றாற் போல வெளிநாட்டுப் பயணமும் வந்து வாய்த்திருந்தது. தன்னுடைய உண் மைத் திறனையும், நேர்மை இலட்சியங் களையும் மதிக்கத் தெரியாத ஒரு கல் லூரி நிர்வாகத்தையும், சௌகரியமுள் ளவர்களுக்கு எப்படியாவது அடங்கி ஒடுங்கிப் பணிவதுதான் சொகுசான வாழ்க்கை என்று நினைக்கும் ஒரு தகப்பனையும், செய்த சத்தியங்களையும்,

சர்க்கரைக்குப் பதில்



க்ளூகோவிடா

ஏன்?

காலை ஆகாரமாக
சுரேஷ் சாப்பிடுவது
ஒரு ஆப்பிள்,
வெண்ணெ பூசிய
ரொட்டித்துண்டு,
பால், தவிர ...
க்ளூகோவிடா!

விஷயமறிந்தவள் சுரேஷின் அன்னை. க்ளூகோவிடா இனிப்பூட்டுவதன்றி உடனடி சக்தி தரும் உணவுமாகும் என அவள் அறிவாள். வைடமின் டியும், கால்ஷியமும் செறிந்த தூய க்ளூகோஸ் பவுடர்தான் க்ளூகோவிடா. சுரேஷுக்குத் தேவையான சக்தியை அது தருகிறது—அதி விரைவாக! தேநீரோ, காப்பியோ, சூடான பானமோ, குளிர்ந்த பானமோ, எதுவாயினும் க்ளூகோவிடா அதற்கு இனிப்பூட்டுவதுடன் எலும்புகள், நரம்புகள், உடல் திசுக்கள் ஆகியவற்றுக்கு வலுவூட்டவும் செய்கிறது.

க்ளூகோவிடா

இனிப்புக்கும் உடனடிச் சக்திக்கும்!



கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ., (இந்தியா) பிரைவேட் லிட்.
'ப்ரௌஸன்ட்' உணவுப் பொருள்களுக்கு பாரதத்தில் தலைமை வகிப்பவர்கள். 81-CP-36

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன் — கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்தது



SP/1/P/7/64

சொல்லிய காதல் மொழிகளையும் மறந்து, பணத்துக்கும் பகட்டுக்கும் பயந்து கோழையாகி விட்ட ஒரு காதலியையும் மறந்து, விலகி எங்காவது போய்விட வேண்டும்போல் அவனுடைய கால்கள் ஒவ்வொரு கணமும் துடித்துக் கொண்டுதான் இருந்தன.

'ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மனப் பூர்வமாகச் செலுத்துகிற அன்பு வெற்றி பெறுகிறதா அல்லது தோற்றுப் போகிறதா என்பதைப் பொறுத்து உலகத்தில் பல காவியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தக் காவியங்களில் பெரும்பாலானவற்றிலிருந்து இருவரில் யாரோ ஒருவருடைய அழுகைக் குரல்தான் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருக்கிறது' என்று முன்பு ஒருநாள் தான் அவளிடம் கூறியது இப்போது அவனுக்கு நினைவு வந்தது. அந்த அழுகுரல் வெளிப்படாத அழுகுரலாகத் தன் மனத்தின் மோனமான துக்கமாய் வந்து நிறைந்து விட்டதை இன்று அவன் உணர்ந்தான்.




இதே வேளையில் பேதை மோகினியோ பாரதி தன்னிடமிருந்து வாங்கிப் பதிவுத் தபாலில் மதுரைக்கு அனுப்பிய கடிதம் கிடைத்து அதைப் படித்ததனால் தன் தெய்வத்தின் மனத்தில் தன்னைப் பற்றி ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் தீர்ந்திருக்கும் என்று நம்பத் தொடங்கியிருந்தாள். ஜமீன்தாரோ அவள் மனம் வெறுக்கிற காரியங்களை ஒவ்வொன்றாகச் செய்யத் தொடங்கியிருந்தார். புதுப்பித்துக் கட்டிய மல்லிகைப்பந்தல் ஜமீன் மாளிகையைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று ஒரு நாள் சாயங்காலம் பாரதியையும் மோகினியையும் காரில் அழைத்துக் கொண்டு போனார். பாரதி கூட வருகிறாள் என்ற நம்பிக்கையில் மோகினி மறுக்காமல் புறப்பட்டிருந்தாள். அந்தக் கட்டிடத்தைச் சுற்றிக் காட்டும்போது, ''பாரதி! இன்னும் கொஞ்ச நாளில் நாங்கள் எல்லாரும் இங்கே வந்து விடுவோம். அப்புறம் மல்லிகைப்பந்தல் கல்லூரி நிர்வாகியின் அலுவலகமும் — பிரபல நடனராணி மோகினியின் பங்களாவும்— மஞ்சள்பட்டி ஜமீன் அரண்மனையும்— எல்லாம் இதுதான்'' — என்று ஜமீன்தார் சிரித்தபடி கூறிய வேளையில் மோகினி தீயை மிதித்தவள் போல் திகைத்தாள். ஜமீன்தாரின் நினைவுகளும், எதிர்கால நோக்கமும் எப்படி எப்படி ஓடுகின்றன என்பதை எண்ணிய போது அவளுக்குப் பாதாதிகேச பரியந்தம் நடுங்கியது. பாரதியோ ''கவலைப் படாதீர்கள் அக்கா! என் உடம்பில் உயிர் உள்ளவரை நான் உங்களைத் தனியாகவோ, நிராதரவாகவோ விட்டுவிட மாட்டேன். யார் என்ன வேண்டுமானாலும் கனவு காணட்டும். நீங்கள் தைரியமாக இருந்தால் போதும்'' என்று தைரியம் சொல்லிக் கொண்டிருந்தாள். கணக்குப் பிள்ளைக் கிழவரோடு காரில் மஞ்சள்பட்டி, மதுரை, எல்லாம் போய் அந்தக் கிழவரை மதுரையிலேயே விட்டு விட்டுத் திரும்பியிருந்த கண்ணாயிரம் திடீரென்று ஒரு நாள் மாலை வைரமும், தங்கமுமாக நகைப் பெட்டிகளைக் கொண்டு வந்து, மோகினியிடம் காண்பித்து, ''இதெல்லாம் உனக்குப் பிடிச்சிருக்கான்னு ஜமீன்தார் கேட்கச் சொன்னார்'' என்று வினவியபோது ''எனக்கு நீங்க செய்யறது எதுவுமே பிடிக்கவில்லை...'' என்று அழுது கொண்டே உள்ளே எழுந்து சென்று விட்டாள் அவள். தன்னை ஏமாற்றி விட்டு அங்கு ஏதோ மர்மமாக ஏற்பாடுகள் நடப்பதைக் கண்டு மோகினி பதறினாள். ஆனால் பாரதி மட்டும் துணிவோடு தைரியமாக இருந்தாள். ஜமீன்தாரும் மோகினியும் சேர்ந்து எடுத்துக்கொண்டாற்போல் தந்திரமாகச் செய்து மாட்டியிருந்த அந்தப் போலிப் படத்தை அவளே துணிந்து கழற்றி எறிந்தபோது கண்ணாயிரம் வந்து ஏதோ இரைந்தார். ''மிஸ்டர் கண்ணாயிரம்! இது யாருடைய வீடு தெரியுமா? அதிகம் பேசினீரோ உமக்கு நடக்கிற மரியாதை வேறே...'' என்று பாரதி ஒரு அதட்டு அதட்டியதும்

வாலேச் சுருட்டிக் கொண்டு பேசாமல் போய்ச் சேர்ந்தார் கண்ணுயிரம்.

டில்லியில் இண்டர்வ்யூ முடிந்து, மதுரை வந்து ஒரிரு நாள் தங்கி விட்டுச் சத்தியமூர்த்தி மல்லிகைப் பந்தலுக்குத் திரும்பிய சில தினங் களிலேயே 'அவர் வெளிநாட்டுச் சர்வ கலாசாலேக்கு இரண்டு வருட ஒப் பந்தத்தோடு மொழியியல் துறை ஆராய்ச்சிக்காகப் போனுலும் போக லாம்' என்ற செய்தி பராபரியாகப் பாரதியின் காதிலும் விழுந்திருந்தது. வேண்டுமென்றே இதை அவள் மோகினி யிடம் சொல்லவில்லே. ஏற்கெனவே மனம் உடைந்து போயிருக்கிறவள் இதைக் கேட்டு இன்னும் மனம் உடைந்து போவாள் என்ற தயக்கத்தோடுதான் மோகினியிடம் இதைச் சொல்லாமல் இருந்து விட்டாள் பாரதி. தான் மகேசு வரி தங்கரத்தினத்திடம் கொடுத்துப் பதிவுத் தபாலில் மதுரைக்கு அனுப் பிய மோகினியின் கடிதம் சத்திய மூர்த்திக்குக் கிடைத்ததா இல்லேயா என்று தெரிந்து கொள்ள முடியாமல் மனம் குழம்பி யிருந்தாள் அவள். 'அந்தக் கடிதம் அவர் கைக்குக் கிடைத் திருந்தால் மோகினியைப் பற்றிய அவ ருடைய சந்தேகங்கள் தீர்ந்து தம் முடைய கோபத்துக்காக மனம் வருந்தி அவர் உடனே மோகினியைப் பார்ப்ப தற்கு இங்கே வந்திருக்க வேண்டும். அவரோ வந்து இரண்டு மூன்று நாளாகி யும் இன்றுவரை இந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவே இல்லே. இந்தப் பெண்ணுே, அவரை நினேத்து நினேத்து உருகி ஓடா கப் போய்க் கொண்டிருக்கிருள். இவ ளுடைய மனம் புரியாமல் ஜமீன்தா ரும், கண்ணுயிரமும், பங்களாவையும், வைர நகைகளேயும் பட்டுப் புடவைகளே யும் இவளிடம் காண்பித்துக் கொண்டு திரிகிருர்கள். என்ன பாவம் இது?' என்று நினேத்துத் தவித்துக் கொண்டிருந்தாள் பாரதி. அவளுடைய நினேப்பிலும் செய லிலும் இப்போது மோகினியின் மேல் சிறிதும் பொருமை இல்லே. எல்லே யற்ற பெருந்தன்மையோடு மோகினி யையும் சத்தியமூர்த்தியையும் மதித்து அவர்களேப் போன்றவர்கள் ஒன்று சேர முடியாத இந்தச் சமுதாய வாழ் வில் அவர்களே எப்படியாவது ஒன்று சேர்த்துவிட்டு அதற்காக மகிழ்வது மட்டுமே இப்போது அவளுடைய நோக்கமாக இருந்தது. சத்தியமூர்த்தி யின் பாதங்கள் இன்னும் அவளுடைய நினேவில் இருந்தன.' அவற்றைப் பாவனே யிஞல் அவளும் தொழுதாள். ஆனுல் மோகினியோடு போட்டி போட்டு அவற்றை ஆண்டு மகிழ முடியாமல் போனதற்காகக் கவலேப்படாது விட்டுக் கொடுக்கிற பெருந்தன்மை அவளுக்கு இப்போது வந்து விட்டது. பெருந் தன்மை அவளுடைய குடும்பச் சொத்து. அப்பா பல சமயங்களில் பொதுக் காரி யங்களுக்காகப் பணத்தையும் செல் வாக்கையும் செலவழித்து வாழ்வில் பெருந்தன்மையாக நடந்திருக்கிருர். மகளோ இப்போது தான் ஆசைப்பட்ட விருப்பத்தையும் அந்த விருப்பத்துக்கு அப்பால் காத்துக் கிடக்கும் வாழ்வை யுமே இன்னெருத்திக்குப் பெருந்தன்மை யாக விட்டுக் கொடுத்துவிட்டு அவ ளுக்கு உதவியாகவும், காவலாகவும் வாழ்வது பற்றிச் சிந்தித்துக் கொண் டிருந்தாள்.

''மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹிடல் பர்க் பல்கலேக் கழகத்திலும் மற்றும் சில ஜெர்மானியப் பல்கலேக் கழகங் களிலுமாக மொழியியல் ஆராய்ச்சித் துறையில் பணி புரிவதற்காகச் சத்திய மூர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டா ராம். இன்னும் பத்துப் பதினேந்து நாளில் அவர் பம்பாயிலிருந்து புறப்பட வேண்டு மாம். நாளே அல்லது நாளன்றைக்கு இங்கே நம் கல்லூரியில் அவர் தம் முடைய இராஜிநாமாவைக் கொடுத்து விடுவாரென்று தெரிகிறது. மாண வர்கள் ரொம்ப வருத்தத்தோடிருக் கிருர்கள். அவர் போவது உறுதிதானும். வருகிற ஞாயிற்றுக் கிழமை யன்று—மாணவ மாணவிகள் அவருக்கு ஒரு பிரிவுபசார விருந்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர்கள். அந்த விருந்தைக்கூடக் கல்லூரி எல்லேக்குள் வைத்து நடத்திஞல் அவர் விரும்பு வாரோ விரும்ப மாட்டாரோ என் றெண்ணி லேக்வியூ ஹோட்டலில்நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர்கள்'' என்று மறுநாள் மகேசுவரி தங்கரத்தினம் உறுதியாக வந்து தெரிவித்த செய்தி யைக் கேட்டு ஏதோ வாய் விட்டுச் சொல்ல முடியாத ஊமைத்துயரத்தை உணர்ந்து பாரதி தவித்தாள். மோகி னிக்கு இது தெரிந்தால் அவள் எங்கே மூர்ச்சையாகி விழுந்து விடுவாளோ என்று பயந்தாள் பாரதி. படிப்படி யாக மோகினியின் மனத்தை மாற்றி அவளேத் தன்னுடையவ ளாக்கிக் கொண்டுவிடலாமென்ற ஆசையால், ஜமீன்தார் அவளோடு புதுப் பங்களா வில் குடியேறி வாழ்வதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார். பாரதி இவற்றை எல்லாம் மனத்தளவில் கடு மையாக வெறுத்தாலும் வெளிப்படை யாக ஜமீன்தாரைக் கோபித்துக் கொள் ளவோ பகைத்துக்கொள்ளவோ கண்டிக் கவோ முடியாமல் இருந்தது. (தொடரும்)

எக்கோணத்திலும் சரி



இதோ உங்களுக்குக்

கூடுதலான பாதுகாப்பு

அளிக்கக்கூடிய டயர்

இந்த டிரெட் அமைப்பு, மோட்டாரோட்டிகளுக்கு மிகவும் அதிகமான பாதுகாப்பளிப்பதற்கெனப் பல வருடங்களாக சோதனைத்தளங்களிலும் ஓட்டப் பந்தயப் பாதைகளிலும் ஆராய்ந்து சோதிக்கப் பட்டதாகும். ஆயிரக்கணக்கான கோணங்கள் ரஸ்தாவைக் கவ்விப் பிடிப்பதால், சுலபமாக வண்டியை ஓட்டுவதற்கு உதவுவதுடன் நீங்கள் ஓட்டத் தொடங்கும்போதும் நிறுத்தும்போதும் இவை சிறந்த இழுப்புத் தன்மையை அளிக்கின்றன. பயர்ஸ்டோனை வாங்கும்போது நீங்கள் எதைப் பெறுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்

பயர்ஸ்டோன் தரத்துக்கும் உழைப்புக்கும் உங்கள் சின்னம்

நாடாண்ட நங்கையர்

ராணி மங்கம்மா

மதுரை மாநகரத்துக்குச் செல்கின்றவர்கள் யாரும், மீனாட்சியம்மன் கோவிலையும், திருமலை நாயக்கர் மகாலையும் பார்க்காமல் இருக்க முடியாது. ரயில் நிலையத்தை எதிர்நோக்கி நிற்பது மங்கம்மாள் சத்திரந்தானல்லவா?

இந்த மங்கம்மாள் கி. பி. பதினாறாவது நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து பதினெட்டாவது நூற்றாண்டின் முற்பகுதி வரை சுமார் இருநூறு வருஷ காலம் மதுரையம்பதியில் தனியரசு செலுத்திய நாயக்க வமிசத்தினரின் வழி வந்த ஒரு பேரரசி; தனது அரச் செயல்களினாலும், நீதி வழுவா ஆட்சியாலும் தமிழகத்து வரலாற்றில் நிலையான இடம் பெற்றுக் கொண்டு விட்டவள்.

விஜயநகரப் பேரரசுக்குப் பெருவாழ்வு அளித்த கிருஷ்ண தேவராயருடைய ஆட்சியின் கடைசிக் காலத்தில், அதாவது 1529ம் வருஷம், அவருடைய விருப்பப்படி, விசுவநாத நாயக்கர் என்பவர் மதுரைப் பகுதிக்குப் போந்து, அங்கு நடைபெற்று வந்த பாண்டியர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தாமே விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாயிருந்து ஆளத் தொடங்கினார். இவருக்குப் பின் வந்தவர்கள், அந்த விஜயநகரப் பேரரசு, 1565ம் வருஷம் தலைக்கோட்டையில் நடைபெற்ற யுத்தத்துக்குப் பிறகு அஸ்தமித்து வந்த காலத்தில்கூட, அதன் பிரதிநிதிகள் என்று பெயரளவுக்கேனும் சொல்லிக் கொண்டு ஆண்டார்கள். இவர்களில் சொக்கநாத நாயக்கர் என்பவர் (1659 – 1682) தமது பதினாறாவது வயதில் பட்டத்துக்கு வந்தார்.

தலைக்கோட்டை யுத்தத்துக்குப் பிறகு விஜயநகர சாம்ராஜ்யம் படிப்படியாக மங்கிக் கொண்டு வந்ததல்லவா? இந்தக் காலத்தில் அந்த விஜயநகர மன்னர்களிடம் சேனைத் தலைவராகவும் அமைச்சராகவும் பணியாற்றி வந்த லிங்கம நாயக்கர் என்பவர், சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரகிரியில் குடியேறி வசித்துக் கொண்டிருந்தார். இவருக்கு ஒரே பெண் குழந்தை. மங்கம்மாள் என்று பெயர். அரசியாயிருந்து ஆளக் கூடிய எல்லாத் தகுதிகளும், இளமையிலேயே இவளிடம் குடிகொண்டிருந்தன. இவளுக்கும் சொக்கநாதருக்கும் 1674-ம் வருஷம் திருமணம் நடைபெற்றது.

இதற்கு ஒரு வருஷத்துக்கு முன்னால் சொக்கநாதர் தஞ்சை விஜயராகவ நாயக்கரை வெற்றி கொண்டு, அங்கு தம் பிரதிநிதியாக இருந்து ஆளும்படி அளகிரி நாயக்கர் என்பவரை நியமித்திருந்தார். ஆனால் அவரைத் தன் ஆதிக்கத்துக்குட்பட்டவராக வைத்துக் கொள்ளவில்லை; அவர் விருப்பத்துக்கே ஆளும்படி விட்டார். தவிர, மகாராஷ்டிரர்கள் தஞ்சையின் மீது படையெடுத்து வந்தபோது அளகிரி நாயக்கருக்கு உதவியாக ஒரு படையையும் அனுப்பவில்லை. இதன் விளைவாக, தஞ்சைப் பகுதி மகாராஷ்டிரர்கள் வசம் போய்விட்டது. இதேபிரகாரம், இவருடைய ஆளுகைக்குட்பட்டிருந்த வேறொரு பகுதி மைசூர் ராஜ்யத்துக்குப் போய்ச் சேர்ந்தது.

இவையெல்லாம் போக இவருடைய இளைய சகோதரர் முத்துலிங்க நாயகர் என்பவர் 1678ம் வருஷம் இவரை – சொக்கநாதரை – அரச பீடத்திலிருந்தும் அப்புறப்படுத்திவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் சில நாட்களுக்குள் ரஸ்டம் கான் என்ற ஒருவன், முத்துலிங்க நாயக்கரை அப்புறப்படுத்திவிட்டுச் சொக்கநாதரை மீண்டும் அரச பீடத்தில் அமர்வித்தான். ஆனால் எல்லா அதிகாரங்களையும் தானே செலுத்தி வந்தான். சொக்கநாதரும் சுமார் இரண்டு வருஷ காலம் அவன் ஆட்டுவித்தபடி ஆடிவந்தார். வேறு ஒன்றையும் செய்ய இவரால் இயலவில்லை.

ரஸ்டம்கான் நிருவாகம் செய்து வந்த காலத்தில் ஜனங்கள் பல கொடுமைகளுக்குட்பட்டனர். நாட்டில் குழப்பம் ஏற்படும் போல் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் சேதுபதி மன்னரும் வேறு சில பாளையக்காரர்களும் ஒன்று சேர்ந்து தங்கள் படை பலத்தால் ரஸ்டம்கானையும் அவன் கூட்டத்தவரையும் இவ்வுலகத்தினின்றே அப்புறப்படுத்திவிட்டனர். சொக்கநாதர் பழையபடி அரச பீடத்தில் அமர்ந்தார். ஆயினும் என்ன? இவருடைய ஆட்சியின் பலவீனத்தைக் கண்ட மைசூர் மன்னர், ஒரு படை அனுப்பித் திருச்சியை முற்றுகையிட்டார். இதனை எதிர்த்து நிற்கும் பொருட்டு, சொக்கநாதருக்கு உதவியாகத் தஞ்சைச் சிற்றரசரும், செஞ்சி மலைச் சிற்றரசரும், சேதுபதி மன்னரும் ஒரு கூட்டுச் சேர்ந்துகொண்டு மைசூர் படையைத் தாக்கித் திருச்சி முற்றுகையை வி[illegible] இந்த விடுதலைக்கு முக்கிய கார[illegible] இருந்தவர் செஞ்சிப் படைப்



பகுதியின் தலைவரா யிருந்த அரக மலை என்பவர். தாம் கண்ட வெற்றியினால் கர்வம் கொண்டு விட்ட இவர் திருச்சிக் கோட்டையைத் தம் வசப்படுத்திக் கொள்ள முனைந்தார். இந்தத் துரோகச் செயலைச் சொக்க நாதர் எதிர்பார்க்கவில்லை. பெரிய அதிர்ச்சியே அடைந்தார். இதன் விளைவாக 1682ம் வருஷம் இறைவன் திருவடியைச் சேர்ந்தார். மங்கம் மாள் அடைந்த துக்கத்துக்கு எல்லை சொல்ல வேண்டுமோ?

சொக்கநாதருக்குப் பிறகு ரங்க கிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கர் பட்டத்துக்கு வந்தார். (1682-1689) இளமையில் பட்டம் ஏற்றாலும் மங்கம் மாளின் உதவி பெற்றுத் திறமையாக அரசு செலுத்தினார். சொக்கநாதர் காலத்தில் இடிந்து போன தம் ராஜ்யத்தின் அநேக பகுதிகளை மீண்டும் பெற்றார். ஆனால் 1689ம் ஆண்டு அம்மை வார்த்து இறந்து போனார்.


ரங்ககிருஷ்ண முத்துவீரப்பர் இறந்த பொழுது அவர் மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தாள். சில மாதங்கள் கழித்து ஓர் ஆண் மகவு பிறந்தது. இது பிறந்த வுடன் முத்தம்மாள் இதனை மங்கம்மாள் வசம் ஒப்புவித்து விட்டு உடன்கட்டை ஏறுதல் என்ற சம்பிரதாயப்படி உயிரை மாய்த்துக் கொண்டாள்.

முத்தம்மாளின் வயிற்றிலே பிறந்த இந்தக் குழந்தைக்கு விஜயரங்க சொக்க நாதர் என்று பெயர் சூட்டினாள் மங்கம்மாள். இது பிறந்த மூன்றா வது மாதத்திலேயே இதற்குப் பட்ட மும் சூட்டி வைத்தாள். இது யுக்த வயது அடையும் வரையில் தானே ரீஜண்டாயிருந்து ஆண்டு வந்தாள். இவள் ஆண் டது 1689 முதல் 1706ம் வருஷம் வரையில்.


மங்கம்மாள் ஆளத் தொடங்கிய காலத்தில் நாயக்க அரசருக்கு விரோதமான சூழ்நிலையே இருந்தது. அப் போது ஏறக் குறைய தக்கா ணம் முழுதும்



மொகலாய சக்கரவர்த்தியான அவுரங்க சீப்பின் (1658-1707) ஆதிக்கத்துக்கு ஒரு வாறு உட்பட்டிருந்தது. இதனை நிலைப் படுத்திக் கொள்ள அவர் அவ்வப்பொழுது ஒரு சிறு படையைத் தெற்குச் சீமைக்கு அனுப்பித் திறைப் பணம் வசூலித்து வரும்படி செய்தார். மொகலாய அரசின் படை பலத்தை நன்கு அறிந்திருந்த தஞ்சை, திருச்சி, மைசூர் ராஜ்யங்கள் மொகலாய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள் கின்ற முறையில் கப்பம் செலுத்த உடன் பட்டன. தானும் அப்படியே இசைந்து போவது நல்லது என்று கருதினள் மங்கம் மாள். மொகலாயப் படைத்தலைவனான ஜுல்பிகர் கான் என்பவன் 1693ம் வருஷம் செஞ்சிக்கோட்டையை முற்றுகையிட்டு வந் தான். இது தெரிந்த மங்கம்மாள் முன் கூட்டியே அவனுக்கு ஏராளமான பரிசுப் பொருள்களை வழங்கி, அவனைத் தன் ராஜ்ய எல்லைக்குள் வராதபடி தடுத்து விட்டாள்; மீண்டும் ஜுல்பிகர் கான் 1697ம் வருஷம் ஒரு படையுடன் தெற்கு நோக்கி வந்தான். முன்பு போலவே மங்கம்மாளிடம் பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு திரும்பி விட்டான். மறுபடியும் 1702ஆம் வருஷம் தாவுத்கான் என்ற மற்றொரு படைத் தலைவன் வந்தபோது ஔரங்கசீப் சக்கர வர்த்தியிடம் சேர்க்கும்படி அவனிடம் மொத்தமாக இருபதினாயிரம் ரூபாயும், ஓர் அளவு நவரத்தினங்களும் கொடுத்து விட்டு அவனுக்குச் சொந்தமாக உபயோகித் துக்கொள்ளும்படி பெருவாரிப் பொருள்களை



கூந்தலின் எழிலை எடுத்துக் காட்டுகிறது



ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயில்

கூந்தலை மழமழப்பாகவும் கவர்ச்சியாகவும் ஆக்குகிறது



ஸ்வஸ்திக் ஹேர் ஸ்டைல் 'மயூர்'

சிறிதளவு ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயிலைத் தடவி, கூந்தலை வாரி மூன்று கால்களாக்கிக்கொண்டு நடுப்பாகத்தைச் சுழற்றி ஒரு பக்கமாகச் சாய்த்துக் கொண்டை போடவும். இரு பகுதிகளையும், எதிரும் புதிருமாகக் கொண்டையைச் சுற்றிச் சொருகிவிடவும். பொருத்தமான அணிகலினால் கொண்டையை அலங்கரித்துக்கொள்ளவும்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.



அளித்துத் தன் ராஜ்ய எல்லைக்குள் வராத படி செய்து விட்டாள் மங்கம்மாள். இங்ஙனமே மகாராஷ்டிரர்களுக்கும் ஏராளமான பொருள்களைக் கொடுத்து அவர்களுடைய படையெடுப்பினின்று தன் ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொண்டாள்.

இங்ஙனம் தன் வலிமையையும் மாற்றான் வலிமையையும் நன்கு தெரிந்து கொண்டு அரச தந்திரத்துடன் மங்கம்மாள் நடந்துகொண்டாளாயினும் இவளுக்குச் சத்துருக்கள் இல்லாமற் போகவில்லை. அவர்களை அடக்கி ஒடுக்கவே முனைந்தாள். மொகலாய அரசுக்குப் பணிந்து போன மைசூர் மன்னர், நாயக்க அரசுக்கு உட்பட்ட சேலம், கோயம்புத்தூர் வட்டங்களின் மீது படையெடுத்து வந்தார். ஆனால் அந்தச் சமயத்தில் அவருடைய ராஜ்யத்தின் மீது மகாராஷ்டிரர் படையெடுத்து வந்ததனால் அவர் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் திரும்பிவிட்டார். இதையடுத்துத் தஞ்சை மன்னர் மதுரை அரசுக்கு உட்பட்ட சில பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டிருந்தார். மங்கம்மாள் அவர் மீது ஒரு படையனுப்பி வெற்றி கண்டாள். திருவாங்கூர் அரசு நாயக்க அரசுக்கு வெகு காலமாகக் கப்பஞ் செலுத்தி வந்த ஒரு சிற்றரசாக இருந்து வந்தது. ஆனால் சொக்கநாதர் காலத்திலிருந்து அது கப்பம் செலுத்தவில்லை. பல தடவைகள் சொல்லி அனுப்பியும் அது வாளாவிருந்து விட்டது. அது மட்டுமன்று; தான் சுய அரசு என்று பிரகடனமும் செய்து கொண்டது. இனியும் சும்மா இருக்கக் கூடாது என்று கருதி மங்கம்மாள் அஞ்சா நெஞ்சம் படைத்த தன் தளவாய் நரசப்பையா என்பவரை ஒரு படையுடன் அனுப்பிப் பழைய பாக்கியோடு கப்பத் தொகை முழுவதையும் வசூலிக்கச் செய்தாள்.

திருவாங்கூர் மன்னரைப் போலவே ராமநாதபுரம் சேதுபதிகளும், மதுரை அரசுக்கு நீண்ட காலமாகக் கப்பம் செலுத்தி வந்தார்கள். ஆனால் மங்கம்மாள் காலத்தில் ஆண்டு வந்த கிழவன் சேதுபதி என்பவர் கப்பம் செலுத்த மறுத்து விட்டார். தாம், சுதந்திர மன்னர் என்று பிரகடனம் செய்து விட்டுத் தம் ராஜ்யத்துக் கோட்டை கொத்தளங்களை யெல்லாம் வலுப்படுத்தி வந்தார். பார்த்தாள் மங்கம்மாள். தளவாய் நரசப்பையாவின் தலைமையில் ஒரு படையை அனுப்பினாள். ராமநாதபுரத்துப் படைகளும் எதிர்த்து நின்றன. கடும் போர் நடந்தது. துரதிர்ஷ்டவசமாக இந்தப் போரில் நரசப்பையா கொல்லப்பட்டுவிட்டார். மதுரைப் படை பலத்த சேதத்துடன் பின்வாங்கிக் கொண்டது. கிழவன் சேதுபதி தாம் சுதந்திர மன்னர் என்று பிரகடனம் செய்து கொண்டார். நரசப்பையா மரித்தது மங்கம்மாளுக்கு ஒரு கை ஒடிந்து விட்டது போல் ஆயிற்று.


பொதுவாகவே மங்கம்மாள் தன் ராஜ்யத்தின் கட்டுக் கோப்புக்குக் கூடிய மட்டில் பங்கம் ஏற்படாத வகையில் பணிய வேண்டிய இடத்தில் பணிந்தும் எதிர்த்து நிற்கவேண்டிய இடத்தில் எதிர்த்தும் நின்று, மிருந்த அரச தந்திரத்துடன் நடந்து கொண்டதனால்தான் அவளுக்குப் பிறகு சிறிது காலமேனும் நாயக்க அரசு உயிர் வைத்துக் கொண்டிருந்தது.

மங்கம்மாள் போர்கள் பல நடத்த வேண்டிய அவசியத்துக்குட்பட்டாளெனினும், சமாதானத்திலேயே நாட்டமுடையவளாயிருந்தாள். இதனால் தன் பிரஜைகளின் பூரண விசுவாசத்தையும் பெறுவது இவளுக்குச் சுலபமாக இருந்தது. இவள் செய்த நற்பணிகள் பல. போக்குவரத்துக்கு வசதியான நெடுஞ் சாலைகள் பல அமைத்து அவற்றின் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்கள் வளர்வதற்கு ஏற்பாடு செய்ததோடு, ஆங்காங்கு சத்திரம் சாவடிகளையும், நீர் நிலைகளையும் அமைத்துக் கொடுத்தாள். விவசாயிகளுக்கு மிகவும் தேவையான பாசன வசதிகளைச் செய்து கொடுத்து உணவுப் பொருள்களின் விளைவை அதிகரிக்கச் செய்தாள். இதன் விளைவாக வியாபார விருத்தியும் ஏற்பட்டது. அறிஞர்கள் பலரை வெளி இடங்களிலிருந்து வரவழைத்து அவர்களுக்கு வீடுகள் முதலியன கட்டிக் கொடுத்து அவர்களுடைய அறிவு சமுதாயத்துக்குப் பயன்படும் வகையில் அவர்களை ஆதரித்தாள். கோயில் திருப்பணிகள் பல செய்தாள். பெரிய கட்டடங்களை எழுப்பினாள். மதுரையில் தமுக்கம் மைதானத்தில் உள்ள கட்டடம் கோடைக்கால வாசஸ்தலமாக இவளால் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது.

மங்கம்மாள் கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்கு அவர்கள் மதத்தைப் பிரசாரம் செய்யும் விஷயத்தில் அதிக சலுகை காட்டினாள். இங்ஙனமே மற்ற மதத்தினருக்கும் எல்லா உரிமைகளையும், சலுகைகளையும் அளித்து வந்தாள்.

மங்கம்மாள் காலத்தில் அரசாங்க நிருவாகம், தளவாய், பிரதானி, ராயசம், கணக்கன், ஸ்தானாதிபதி ஆகிய ஐவர் மூலமாகவே நடைபெற்று வந்தது. தளவாய் என்பவர், பிரதம மந்திரியாகவும், பிரதம படைத் தலைவராகவும் இருந்தார். பிரதானி என்பவர் நிதி மந்திரி. அரசாங்கத்தின் வரவு செலவுகளுக்கு இவரே பொறுப்பாளி. ராயசம் என்பவர் அரசாங்கத்தின் பிரதம காரியதரிசி. கணக்கன் என்பவர் தற்காலத்து அக்கௌண்டெண்ட் ஜெனரல் என்று சொல்லலாம். ஸ்தானாதிபதி என்பவர் அயல் நாட்டு மந்திரி. இந்த ஐவரின் கீழ் ஏராளமான உத்தியோகஸ்தர்கள் இருந்து அரசாங்க அலுவல்களைக் கவனித்து வந்தனர்.

மங்கம்மாள் 1689ஆம் ஆண்டில் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். சுமார் பதினேழு வருஷ காலம் திறமையாக ஆட்சி செய்தாள். தன் பேரன் விஜயரங்க சொக்கநாதர் யுக்த வயதடைந்ததும் அவரிடம் சம்பிரதாயமாக ஆளும் பொறுப்பை ஒப்புவித்தாள். ஏறக்குறைய ஐம்பத்தைந்தாவது வயதில் 1706 ஆம் வருஷம் இறைவன் திருவடிகளைச் சேர்ந்தாள். கடைசி மூச்சு இருக்கிற வரையில் ஆண்டவன் நினைவாகவே இருந்தாள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.



கார்ட்டூன் காட்சிகள்: 10
சினிமா தியேட்டரில்

'பாதும் கசந்ததடி சகியே!
ப... ரீட்சை... வந்ததடி!

அன்பார்ந்த குமாரிக்கு,

சௌபாக்கியம் என்று நம்புகிறேன். உன்னிடமிருந்து வெகு நாட்களாகக் கடிதம் கிடையாது...... 'அடிக்கடி என்ன எழுதுகிறது, இங்கே எல்லோரும் க்ஷேமம். அங்கே எல்லோரது உடலும் நலந்தானே?' என்று மட்டும் கேட்டா எழுதிக்கொண்டிருக்கிறது என்று நீ பரிகாசம் செய்வது வழக்கம். ஆகையால் உனக்கு இதுவரை விபத்து, ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை என்றுதான் எணித்துக் கொண்டிருக்கிறேன். இப்போது உன் சம்பந்தமான ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொல்வதற்காக இதை எழுதுகிறேன்.



ஆயிற்று; இன்னும் சில நாட்களில் உனக்குக் கல்லூரிப் பரீட்சை ஆரம்பித்துவிடும். நீயும், உன் போன்ற பெண்களும், என்

ணமோ சொல்வார்களே அது மாதிரி விழுந்து விழுந்தும், வாயில் ஈ முதலிய பிராணிகள் புகுந்தது தெரியாமலும் படித்துக் கொண்டிருப்பீர்கள்.

பரீட்சை என்று எதற்காகத்தான் ஏற்படுத்தியிருக்கிறார்களோ என்று நீங்கள் நினைக்கிறீர்கள். பெரிய, பெரிய கல்வி நிபுணர்கள் கூட அப்படித்தான் சொல்கிறார்கள்.

ஆனால், நீங்கள் என்னதான் படித்தீர்கள், என்னதான் தெரிந்து கொண்டீர்கள் என்று கண்டுபிடிக்க வேண்டாமா? அதற்கு அந்தக் கர்நாடகமான பரீட்சை முறையைத் தவிர வேறு எதுவும் கண்டுபிடிக்கப்பட வில்லை. ஆகையினால் அந்தப் பரீட்சைச் சனியன் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

பரீட்சை ஹாலில் வினாத் தாள்கள் கொடுக்கப்பட்டதும், உடனே சம்பந்தப்பட்ட புத்தகங்களை ஒரு தரம் புரட்டிப் பார்த்து விட்டு விடைகளை எழுத அனுமதித்தாலென்ன? இப்படி ஓர் ஏற்பாடு செய்வதைப் பற்றிக்கூடக் குஜராத் சர்வகலாசாலையினர் யோசனை செய்து கொண்டிருந்தார்கள்.

இன்னும் நீங்கள் ஒருவர் விடைகளை மற்றொருவர் காப்பி அடிக்காதிருப்பதற்காக, உபாத்தியாயர் வி. ஐ. டி.களை நியமிக்கக் கூடாது. மேற்பார்வையின்றிப் பரீட்சையை எழுதும்படி விட்டு விட வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். இதற்குக் 'கௌரவ முறை' என்று பெயர் கொடுத்தார்கள். ஒன்றிரண்டு சர்வகலாசாலைகளில் இந்த முறைப்படி பரீட்சைகள் நடந்து கொண்டு வருகின்றன என்று நினைக்கிறேன்.

உலகத்தில், இந்தியாவின் மற்றப் பாகங்களில் எது எப்படியிருந்தால் என்ன? இங்கே, சென்னை மா நகரில் நீதிபதி முத்துசாமி ஐயர் காலத்தில் எப்படிப் பரீட்சை நடந்ததோ, அப்படியேதான் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு வித்தியாசம்! அந்த மேதை தெருவில் உள்ள நகரசபை லாந்தர் வெளிச்சத்தில் படித்ததாகச் சொல்வார்கள். நீங்கள் ப்ளோரஸெண்ட் மின்சார விளக்கு வெளிச்சத்தில் படிக்கிறீர்கள்.

மொத்தத்தில் பரீட்சையினின்றும் நீங்கள் தப்புவதற்கில்லை. ஆகையால் அதற்கென்று படித்துத்தானாக வேண்டும்.

பரீட்சை என்பது உங்களுக்குப் புதிதல்ல. நீங்கள் கௌன் போட்டுக் கொண்டிருந்த காலத்திலிருந்து இப்போது நாலே முக்காலே அரைக்கால் கஜ நீளச் சிற்றாடை கட்டிக் கொண்டு கல்லூரிக்குப் போகும் வரை ஒவ்வொரு வருடமும் குறைந்தது நாலைந்து பரீட்சைகளாவது எழுதி வந்திருப்பீர்கள். ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி போன்றவற்றில் படிப்பவர்களாயிருந்தால் உங்களுக்குப் பரீட்சைக்குப் பஞ்சமே ஏற்பட்டிராது. வருஷத்தில் கிட்டத்தட்ட நாற்பது பரீட்சைகள் எழுதியிருப்பீர்கள், வாரத்துக்கு ஒன்று வீதம். பாக்கி வாரங்கள்தான் விடுமுறையாயிற்றே. இப்படியெல்லாம் நீங்கள் நிறையப் பரீட்சைகள் எழுதி வந்து பழக்கமாயிருந்தாலும் கூட ஒவ்வொரு வருஷமும் இறுதிப் பரீட்சை வரும் போது உங்களைப் பயம் பிடித்துக் கொள்கிறது. உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் பாடங்கள்கூடத் திடீரென்று அடியோடு மறந்து போய் விட்டவை போலப் பிரமை ஏற்படுகிறது!

இந்தப் பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் நீங்கள் பைத்தியம் பிடித்தவர்கள் போலப் படித்துக் கொண்டிருப்பீர்கள். தாயார் கொஞ்சம் 'பாலைப் பார்த்துக் கொள்' என்றால் அடுப்பில் உள்ள பாலை ஒரு கையால் கிளறிக் கொண்டே இன்னொரு கையால் புத்தகத்தை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்களுக்குப் பரீட்சை வரும் சந்தர்ப்பம் பார்த்து உங்கள் வீட்டில் விசேஷங்கள் ஏதாவது வந்து கொண்டிருக்கும். உறவினர்கள், விருந்தாளிகள் வரலாம். அவர்களது செல்வக் குழந்தை நீ வைத்திருக்கும் மிக முக்கியமான 'நோட்ஸை' உனக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு போய்க் காகிதத்தைக் கலபமாகக்

விழிக்க முடிகிறதா என்று பரீட்சை பார்க்கலாம். பையன்களாயிருந்தால் நான் என் சிநேகிதன் வீட்டுக்குப் போய்ப் படிக்கிறேன், சமுத்திரக் கரையிலோ, பூங்காவிலோ உட்கார்ந்து படிக்கிறேன் என்று போய் விடுவார்கள். நீங்கள் அப்படிச் செய்வதற்கில்லை. இதற்காகவெல்லாம் நீ ஆத்திரப்படாமல், கண்ணைக் கசக்கிக் கொள்ளாமல் நிதானமாகப் படிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

பரீட்சைக்குத் தயார் செய்து கொள்வதைப் பற்றிச் சில 'யுக்தி'கள் சொல்கிறேன்.

முந்தைய வருஷத்திய வினாத்தாள்களைப் புரட்டிப் பாருங்கள். பரீட்சையில் என்னென்ன கேள்விகள் வரக்கூடும் என்பதைப் பற்றித்தானே உங்கள் ஆசிரியைகள் அதிகம் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்! போதாதற்கு 'நோட்ஸ்' புத்தகங்களில் உதாரணக் கேள்விகள் நிறையத் தந்திருப்பார்கள். நீங்கள் உங்களை வினாத்தாள் தயாரிப்பாளர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். ஒரு பரீட்சை எழுதச் சராசரி இரண்டரை மணி நேரம் தருகிறார்கள். அந்த நேரத்துக்குள் பதில் எழுதக்கூடியபடி ஒரு வினாத்தாளை நீங்களாகவே தயாரித்துக் கொள்ளுங்கள். பிறகு இரண்டரை மணி நேரம் உட்கார்ந்து நீங்களாகவே விடைகளை எழுதிப் பாருங்கள். ஒரு விஷயத்தைப் பற்றி நூறு முறை வாயால் படித்து, மனத்திலிருத்திக் கொண்டிருப்பதை விட, இரண்டு மூன்றுமுறை எழுதிப் பார்த்தால் நன்றாக ஞாபகத்தில் இருக்கும். இப்படி ஒத்திகை செய்து பார்ப்பதால் அவசியமான விஷயங்கள் மனத்தில் பதிவதோடு, பரீட்சை பற்றிய பயமும், கூச்சமும் கூடக் குறையும்.



பரீட்சை வந்ததடி!

அனுசுயா

நீங்கள் பரீட்சை மண்டபச் சூழ்நிலையைக் கூட ஏற்படுத்திக் கொள்ளலாம். ஒரு கட்டிலின் மீதோ, பெஞ்சியின் மீதோ ஒரு நாற்காலியைப் போடுங்கள். உங்கள் தாயாரை ஒரு மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொள்ளச் சொல்லி அதில் உட்காரச் செய்யுங்கள். அவர் அடிக்கடி உங்களைத் திருட்டுத்தனமாகக் கவனித்துக் கொண்டிருக்கட்டும். நடுவே உங்கள் பக்கத்தில் வந்து புடவை பார்டரில் ஏதாவது எழுதிக் கொண்டிருக்கிறீர்களா என்று பார்த்து விட்டுப் போகட்டும்.

நீங்கள் ஓயாமல் படித்துக் கொண்டே போய் மூளைக்குள் விஷயங்களை நிரப்பிக் கொள்ள முயற்சி செய்கிறீர்கள். அதற்கு முழுபலனும் ஏற்படாது. மூளைக்கும் உடலுக்கும் ஓய்வு கொடுத்தால்தான் மூளை குழம்பாமல் உடல் சோர்வடையாமல் படித்தது ஞாபகத்தில் இருக்கும்.

பரீட்சைக்கு மும்முரமாகப் படிக்கும்போது பால், பழங்கள் முதலியவை நிறையச் சேர்த்துக் கொள்ள வேண்டும். நிறையத் தண்ணீர் சாப்பிடலாம். மாலை வேளையில் ஒரு பத்து நிமிஷ நேரமாவது வெளியே போய் உலவி வந்தால் பிறகு மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யும்.

பரீட்சை மண்டபத்துக்குள் நுழையும் வரை படித்துக் கொண்டே இருந்தால் மனம் குழம்பித்தான் போகும். வினாத் தாளை அமைதியாக, நிதானத்துடன் படிக்கத்தோன்றாது. ஒரு சமயம் ஒரு பெண் படித்துக் கொண்டே போய் எதிரில் வந்த பிரின்ஸிபால் மீது முட்டிக்கொண்டு விட்டாள். அப்புறம் அவளுக்குப் பரீட்சை எழுதவே ஓடவில்லை.

குமாரி! உங்களில் பலர் நிறையப் படித்திருப்பீர்கள், நன்றாகப் படித்திருப்பீர்கள். ஆனால் உங்கள் சிநேகிதைகளிடம் எல்லாம் ''நான் ஒன்றுமே படிக்கவில்லை. எப்படி எழுதப் போகிறேனோ? கோட்தான் அடிக்கப் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டிருப்பீர்கள். சில சமயம் இது உண்மையாக முடிந்து விடும், ஜாக்கிரதை! ஏனென்றால், மனம் என்ன எண்ணி என்ன பேசுகிறதோ அப்படியேதான் வேலை செய்யும். ஆகையால் நீங்கள் 'எனக்குப்படித்ததெல்லாம் ஞாபகமிருக்கிறது. நன்றாகப் பதில் எழுதுவேன்' என்று சொல்லிக் கொண்டு தன்னம்பிக்கை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

உனது
அனுசுயா

குழந்தைப் பந்தயம்

★ அரச குலத்தில் குழந்தைகள் பிறப்பதென்றாலும் இப்படியல்லவா பிறக்கவேண்டும் என்று மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயப்படுமாறு இன்றைய தேதியிலிருந்து மே மாதத்துக்குள்ளாக அடுத்தடுத்து பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரில் நால்வருக்குக் குழந்தைகள் பிறக்கப் போகின்றன! மகாராணி எலிஸபெத், இளவரசி மார்கரெட், இளவரசி அலெக்ஸாண்டிரா, டச்சஸ் ஆப் கென்ட் ஆகியோரில் யார் யாருக்கு ஆண் குழந்தைகள், யார் யாருக்குப் பெண் குழந்தைகள் பிறக்கப் போகின்றன, அவற்றின் பெயர்கள் என்னவாயிருக்கும் என்பதெல்லாம் பற்றி விவாதங்கள் மட்டுமல்ல; கிண்டி குதிரைப் பந்தயத்தில் 'பெட்' வைப்பது போல் பல ஆயிரம் பவுன்கள் பணயம் வைக்கப்படுகின்றன பிரிட்டனிலே!

நீரோட்டம்

எஸ்.ரங்கநாயகி

நான்காம் அத்தியாயம்

ரமா பயந்து விட்டாள். இவ்வளவு நேரம் குழையக் குழையப் பேசிக்கொண்டிருந்த சுசீலாவுக்கு இப்பொழுது திடீரென என்ன வந்து விட்டது? ''மன்னித்துக் கொள், சுசீலா! நீயே உன் அம்மாவைப்பற்றி அடிக்கடி சொல்லுவாயாகையால் அப்படிக் கூறி விட்டேன்.''

''இறந்தவர்களைப் பற்றி இப்பொழுது கெடுதலாகப் பேசுவது நல்லதில்லை. என்னதான் பொல்லாதவளாக இருந்தாலும் 'அம்மா' என்ற சொல்லுக்கு என்றுமே மரியாதை உண்டு'' என்று யசோதை கூறினாள்.

ரமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''என்ன சுசீலா! உன் அம்மா காலமாகி விட்டாளா? எனக்குத் தெரியவே தெரியாது. நான் கூறியதற்கு நீ என்னை மன்னித்துக் கொள். அம்மாவுக்குப் பதிலாக அவளுடைய தங்கை உன்னை அன்புடன் பார்த்துக் கொள்வது பற்றி எனக்குச் சற்று ஆறுதலாக இருக்கிறது..... இப்பொழுது நீ சித்தி வீட்டிலா இருக்கிறாய்?'' என்று ரமா தன் தோழியின் தோள் மீது கை போட்டபடி கேட்டாள்.

சுசீலா வெடுக்கென அவள் கையை எடுத்துக் கீழே போட்டாள். ''வா சித்தி, போகலாம்.''

யசோதை சுசீலாவின் போக்கைக் கண்டு ஆச்சரியம் கொண்டு விட்டாள். ரமாவின் முகம் அவமானத்தால் சிவந்தது.

''சுசீலா! நீ ஏன் இன்று இப்படி நடந்து கொள்கிறாய்?'' என்று கூறிய யசோதை, பிறகு ரமாவின் பக்கம் திரும்பி, ''ரமா! நான் அவள் அம்மாவுக்குத் தங்கையல்ல. அவள் வீட்டில் அவளது தாயின் ஸ்தானத்தை நிரப்ப வந்து விட்டவள்...நீ நாளைக்கு உன் கணவருடன் எங்கள் வீட்டுக்கு வா. இன்னும் பழைய வீட்டில்தான் நாங்கள் இருக்கிறோம்'' என்று கூறிவிட்டுச் சுசீலாவைப் பின்தொடர்ந்தாள்.

வியப்பால் கண்களை அகல விரித்தபடி அவர்களை நோக்கினாள் ரமா. பிறகு தன் கணவரின் அருகே சென்று, ''கேட்டீர்களா, சேதியை! பெண் விவாகத்துக்கு நிற்கிறபோது அந்தப் பெரியவர் ஒரு பெண்ணுக்குத் தாலி கட்டி இழுத்து வந்து விட்டார். என்ன அநியாயம் இது? சமூகத்தின் கொடுமைகளைக் கார சாரமாக விவாதித்துப் பேசுவாளே இந்தச் சுசீலா, அவளாவது இந்த அட்டூழியத்தைத் தடுத்திருக்கக் கூடாது?'' என்றாள் உரத்த குரலில்.

இவ்வார்த்தைகள் சுசீலா, யசோதையின் செவிகளில் விழத்தான் செய்தன.

சுசீலா யசோதையை நோக்கினாள். ''பார்த்தாயா? நீ கூறியதால் வந்த வினையை? உன்னை யார் அவளிடம் போய் உண்மையைக் கூறச் சொன்னது? அவமானம்! அவமானம்!'' முகம் கோபத்தால் சிவக்க, சனி பகவானை வலம் வந்தபடி கூறினாள்.

''இதில் என்ன அவமானம் சுசீலா? யாருக்கு அவமானம்? நானல்லவோ அவள் அவ்விதம் கூறியதற்கு மனத்தில் வெட்கப்பட வேண்டும்? அவமானம் காரணமாகப் பொறுமை கொள்ள வேண்டும்? எனக்கு இதெல்லாம் மனத்தில் தோன்றவே யில்லை. ஒருவருக்காகப் பயந்து என் உண்மை நிலையை மறைக்க நான் ஒரு நாளும் விரும்பவே மாட்டேன். பிறர் எடுத்துச் சொல்லும் பழிக்காக நான் உன் தந்தையையும் ஒரு நாளும் எதிர்க்கவோ, வெறுக்கவோ செய்யவும் மாட்டேன். உன் மீதுள்ள அன்பும் எனக்கு எள்ளளவும் குறையாது...... என்ன சுசி, நான் சொல்வது புரிகிறதா?'' யசோதையின் வார்த்தைகள் பிரமாண ரூபத்தில் அழுத்தமாகவும், உறுதியுடனும் வந்து விழுந்தன.

''விவாகம் என்று முடிந்த பிறகு உலகம், சமூகம் என்று சொல்லிக் கொள்கிறார்களே, அவர்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்தால் வாழ்வை நாசமாக்கிக் கொள்ள வேண்டியதுதான். வயது கழிந்தவரை விவாகம் செய்து கொண்டதைவிட, சமூகத்துக்கு மதிப்புக் கொடுத்து விவாகத் தளையை நாசமாக்கிக் கொள்வது பெரும் முட்டாள்தனம்'' என்று யசோதை தன் கொள்கையை விவரித்தாள்.


சுசீலா பதில் ஒன்றும் கூறவில்லை. வசந்த மண்டபத்தின் ஜோடனையில் ஈடு

பட்டுச் சிறிது நேரம் கோவில் மணலில் உட்கார்ந்து விட்டுப் போக வேண்டும் என்றுதான் கஸீலா தன் சித்தியை அங்கு அழைத்து வந்திருந்தாள். ஆனால் ரமாவைச் சந்தித்த பிறகு அவள் மேலும் ஒரு நிமிடமும் அங்கு இருக்க விரும்பவில்லை. புலியைக் கண்டு பயந்தோடும் மான் நிலையில் அவள் இருந்தாள். அவளை வேறு எந்தத் தோழி சந்தித்து விடுவாளோ, என்ன கேட்டு விடுவாளோ, பழிகளைச் சுமத்திக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவாளோ என்ற அச்சம் அவளை நான்கு புறமும் நின்று தாக்கியது. தன்னைச் சுற்றி நோக்கவே அவள் அஞ்சினாள். சித்தியோடு ஒட்டிக் கொண்டு செல்லுகையில், 'இவள் யார்' என யாரேனும் அம்பை எய்து விடுவார்களோ என நடுங்கி, யசோதையை விட்டு இரண்டடி முன்னேறி வேகமாக நடந்தாள்.

கோவிலை விட்டு வெளிவந்து மாடவீதியிலும் காலடி வைத்து விட்டாள் கஸீலா. பின்னே நோக்கினாள். யசோதை விறுவிறுக்க அவளைப் பின்பற்றி வந்து கொண்டிருந்தாள். முகத்தில் வியர்வை வழிந்தது.

"கஸீலா......!" என்று கூறிய யசோதை அவளை நோக்கிவிட்டுத் தலை குனிந்தாள். ஏதோ சொல்ல வந்தவள் வாயடக்கி நின்று விட்டதுபோல் கஸீலா உணர்ந்தாள்.

கஸீலா யசோதையை நோக்கி மாடவீதிமுனையில் சற்று நின்றாள். யசோதையின் நிலை, அவள் மனத்தில் சுரந்த இரக்க நீரைச் கண்டியிருந்தது. தன் செய்கையில் அவள் சற்று வருத்தம் அடைந்தாள். பாவம் சித்தி! அவள் மீது என்ன தவறு! வாழ்க்கையில் திருப்பம் காண முடியாமல் நடந்து விட்ட ஒரு நிகழ்ச்சியைச் சித்தி சரணமாக எடுத்துக் கொண்டு விட்டிருக்கும் போது. அதை அண்டித் துருவித் தான் துளைப்பது எந்த விதத்தில் நேர்மையாகும்? அப்பாவாவது அவளிடம் நேராக நடந்து கொள்கிறாரா? அதுவும் இல்லை. அப்படிப்பட்டவளிடம்



தான் இரக்கம் காட்டுவதற்குப் பதில் ஏன் இவ்விதம் கடினமான சொற்களை உபயோகிக்க வேண்டும்?

''சித்தி!.... என் மீது கோபமா?'' சித்தியின் தோள் மீது மீண்டும் சிநேக பாவத்துடன் கைகளைப் போட்டு விட்டாள் சுசிலா.

''ஒரு அம்மாவுக்குத் தன் குழந்தை மீது என்றாவது கோபம் வருமா?.... குழந்தை தான் நினைத்துக் கொண்டால் 'டூ' விடும். பிறகு சேர்ந்து கொள்ளும்.''— யசோதை உதட்டில் மென்னகையுடன் கூறினாள்.

''என்ன சித்தியோ நீ! உனக்குக் கோபம் என்பதே வராதா? உன் மீது எனக்கு இரக்கமாக இருக்கிறது.''

''சுசிலா! இரக்கம் எந்த நிலையில் ஏற்படும் தெரியுமா? ஒருவர் கஷ்டம் அநுபவித்தால் மற்றவர்களின் இரக்க உணர்ச்சி அவர்களுக்கு அவசியம்..... ஆனால் நான் ஒரு கஷ்டமும் அனுபவிப்பதாகவே அறிய வில்லையே! எனக்கு எதற்கு இரக்கப் பொருள்?''

''சித்தி, நீ மனம் என்னும் களஞ்சியத்தை மூடிவிட்டு வாய் என்னும் சிறு பாண்டத்திலிருந்து வார்த்தைகளை வீசுகிறாய் என்பதை நான் அறிவேன்...''

''தவறு சுசிலா. நான் வாழ்க்கையைச் சுகமாக வைத்துக் கொள்ளத்தான் விரும்புகிறேன்.''

இருவரும் பஸ் ஸ்டாண்டைத் தாண்டி விட்டனர். சுசிலா சிந்தனைச் சுழலில் தவித்துக்கொண்டே வந்தாள். யசோதை நினைப்பது போல் எல்லாமே முடிந்து விட்ட காரியம். அதை அவள் பாங்காக அமைத்துக் கொள்ள விரும்புகிறாள். அப்பா செய்து விட்டது பெரும் தவறுதான். அதற்கு மாற்றுவழியே கிடையாதுதான். ஆனால் ஒடிந்துவிட்ட மரத்தைப் பல சாதனங்கள் மூலம் சேர்ப்பது போல் அப்பா சித்தியுடன் பேசிப் பழகலாமல்லவா? அதை அவர் விரும்ப வில்லை. சித்தி இதைப் பற்றி வாய் திறவாமல் இருப்பது உண்மை தான். ஆயின் அவள் பெண். உணர்ச்சிகளை இவ்வளவு கட்டுப்பாட்டுடன் அவள் அடக்கி வைத்து விட முடியுமா? தனக்கோ வெளியே தலை காட்ட முடியாத சந்தர்ப்பம். 'பெண் கலியாணத்துக்கு இருக்கும்போது தனக்கு ஒரு மனைவியைத் தேடி வந்து விட்டான்' என்று' அனைவரும் கூறும் இழிச்சொல் அப்பாவை மட்டுமல்ல, அவளையும் பாதிக்கத்தான் செய்தது. எங்கு சென்றாலும், 'உன் வீட்டில் சித்தி வந்து விட்டாளாமே? இதென்ன அநியாயம்?' என்ற கேள்வி. இதற்கெல்லாம் முடிவு தேடவேண்டும் என்றால் அவளுக்கு விவாகம் உடனே ஆகவேண்டும். அவளுக்குக்கூட ஆச்சரியமாகத் தான் இருந்தது. அம்மா போன பிறகு ஒரு கழிசடையனுக்காவது விவாகம் செய்து வைத்து விட வேண்டும் என்று தவித்த அப்பா இப்பொழுது அவள் விவாகத்தைப் பற்றின பேச்சை ஏன் எடுக்கவே இல்லை?

. வேங்கடேச அக்கிரஹாரத்தில் காலடி வைத்த போதுதான் அவளுக்கு உமாபதியின் நினைவு வந்தது. அவர் அங்கு தான் குடியிருந்தார்.

''சித்தி! நீ வீட்டுக்குப் போ. நான் உமாபதி மாமாவைப் பார்த்து விட்டு வருகிறேன்.''

''சீக்கிரம் திரும்பி விடு, சுசிலா. நேரமாகி விட்டால் எனக்குக் கவலையாகி விடும்.....''

''ஆகட்டும், சித்தி! ரொம்ப நேரமாகிவிட்டால், மாமாவையே துணைக்கு அழைத்து வந்து விடுகிறேன்.''

யசோதை வீட்டை நோக்கி நடந்தாள். சுசிலா உமாபதியின் வீட்டை நோக்கிச் சென்றாள்.

பாலம்தான் சுசிலாவை வரவேற்றாள். ''வாம்மா, சுசிலா! உன்னைப் பார்க்கிறதே, அபூர்வமாப் போச்சு. இனிமே இப்படித்தான் இருக்கும்....''

''பாட்டி, மாமா இல்லையா?'' என்று சுசிலா கேட்டாள்.

''இல்லையேம்மா! இப்ப வந்துடுவான். நீ உக்காந்துக்கோ.... நீ உமாபதியைத் தேடிக்கிட்டு வருவேன்னு எனக்குத் தெரியும்.....'' வாசலில் இருந்த திண்ணையில் காலை நீட்டி உட்கார்ந்து விட்டாள் பாலம்.

அருகில் சுசிலா உட்கார்ந்தாள்.

''தேவலையே பாட்டி! நான் வருவேன்னு உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுதாம்?'' என்று கேட்டாள் சுசிலா.

''தெரியாமல் என்னடியம்மா? வீட்டுக்குக் காலங் கழித்து ஒரு மனைவி வந்தால் அந்த வீடு இந்த நிலைக்குத்தான் வரும். மூத்தவ குழந்தைங்க இப்படித் தான் அலையும். ம்.....'' பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தியபடி பாலம் கூறியதும் சுசிலா திடுக்கிட்டு விட்டாள்.

''என்ன பாட்டி சொல்றீங்க நீங்க?''

''நான் புதுசா ஒண்ணும் சொல்லலையேம்மா. அடிக்கடி வரவ, நீ இப்ப இந்தப் பக்கம் எட்டிப் பார்க்காமல் இருந்தபோதே, எனக்குச் சந்தேகம் தான். சரி, நீ இப்ப எதுக்கு உமாபதியைத் தேடிக்கிட்டு வந்திருக்கே, அதைச் சொல்லு.''

''மனசு ரோதனையை அவிழ்த்துக் கொட்டத்தான் வந்து விட்டேன்.''

தலைவலியிலிருந்து

நல்ல, நிச்சயமான நிவாரணம்



அனாஸின் இவ்வளவு சக்திவாய்ந்ததாக இருப்பதற்குக் காரணம் அது ஒரு டாக்டரின் குறிப்பைப்போன்று மருந்துகளின் சேர்க்கையாகும்—துரிதமாகவும் நிவாரணமளிக்கிறது.

- அனாஸினில் வலியிலிருந்து நிவாரணம்பெறுவதற்கென உபரியாக ஒரு வலி நிவாரணி கலந்திருக்கிறது.
- அனாஸின் சாதாரணமாகத் தலைவலிக்குக் காரணமான நரம்புகளின் படபடப்பைப் போக்குகிறது.
- அனாஸின் ஜுரத்தைத் தணிக்க உதவுகிறது.
- அனாஸின் உபயோகிப்பதால் வலி மற்றும் ஜுரத்தினால் ஏற்படும் சோர்வு நீங்குகிறது.

Registered Users: GEOFFREY MANNERS & CO. LTD.

அனாஸின்

சிறந்தது ஏனெனில் அது
4 வழிகளில்
வேலை செய்கிறது

2 வில்லைகளுக்கு 13 ந. பைசேதான்

TAM

அவளையும் மீறி அவ்வார்த்தைகள் அவள் வாயினின்று வெளி வந்தன.

''பாத்தியா? நான்தான் அப்பவே சொல்லிவிட்டேனே. இளையாள்னு அவள் குணமே இப்படித்தான் இருக்கும். மூத்தவ விட்டுட்டுப் போன குழந்தையை அவள் வேலைக்காரி மாதிரிதான் நடத்துவாள். உன்னுடைய அப்பனுக்கு ஏன்தான் இப்படிப் புத்தி போச்சோ ? நான் உமாபதிகிட்டே தினமும் இதைத்தான் அடிச்சுக்கிட்டிருக்கேன். 'இனி சுசிலா, பாவம், வேலைக்காரி கணக்கிலே தான் நிற்கணும். அந்தப் பெண்ணுக்கு இனிமே கஷ்டம்தான்'னு. நான் மாஞ்சு போறேன்..... உம், உன் தலையெழுத்து இப்படி இருக்கணுமா?''

''பாட்டி!'' — கர்ஜித்தாள் சுசிலா. ''என்ன பேச்சுப் பேசறீங்க நீங்க? என்னுடைய சித்தியைப் பத்திப் பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும். என்னுடைய அம்மா இருந்த போது வீட்டு வேலை முழுவதும்நானே செய்துக்கிட்டிருந்தேன் என்பது நினைவிருக்கட்டும். சித்தியோ என்னை ஒரு துரும்பு எடுத்துப் போட விடுவதில்லை. பாவம், அவளைப் பார்த்தால் எனக்கு எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது, தெரியுமா?''

சுசிலா படபடத்துக் கொண்டிருந்த போதே உமாபதி உள்ளே நுழைந்தார்.

''யாரு, சுசிலாவா? வாம்மா, வா. ஏதோ பலமா சர்ச்சை நடந்துகொண்டிருக்கிறது போலும்....''

''இந்தச் சுசிலா இன்னும் குழந்தையாகவே இருக்கிறாள். நான் சொல்றது இப்ப புரியாது. இன்னும் கொஞ்ச நாள் போனால் புரியும்......'' என்று பாலம் இடைமறித்தாள்.

''மாமா! என்னோடு வீட்டு வரை வர முடியுமா? அப்பாவையும் பார்த்து விட்டு வரலாம்.'' சுசிலா பாலத்தை லட்சியம் செய்யாமலே கேட்டாள்.

உமாபதி அவளுடன் கிளம்பி விட்டார். ''பாட்டி, நான் வர்றேன்'' என்று திரும்பிப் பாராமலே கூறிவிட்டுப் படி இறங்கி விட்டாள் சுசிலா.

''மாமா! நீங்கள் இவ்வளவு பெரிய குற்றம் செய்து விடுவீர்கள் என்று நான் நினைக்கவே யில்லை.'' போகும் நேரத்தில் சுசிலா அவருடன் பேச்சுக் கொடுத்தாள். பாலத்தின் எதிரில் அவள் ஒன்றும் பேச விரும்பவில்லை.

திடுக்கிட்டு விட்டார் உமாபதி. ''என்னம்மா, சொல்கிறாய் நீ?''

''அப்பாவுடன் போனவர் நீங்கள் தானே? இந்தக் கலியாணம் வேண்டாம் என்று நீங்கள் அவரைத் தடுத்திருக்கக் கூடாதா?''

''ஏன் சுசிலா! யசோதை அவ்வளவு பொல்லாதவளாகவா இருக்கிறாள்? அவ்வூரில் அவளைப் பற்றி எல்லோரும் நல்ல அபிப்பிராயம் கொடுத்தார்களே!''

''சித்தி நல்லவளாக இருப்பதால் தான் மேலும் கஷ்டமாக இருக்கிறது. மாமா! உங்களுக்குத் தெரியுமா, அப்பா ஓர் இளம் பெண்ணின் வாழ்வைப் பாழடித்து விட்டதோடு நில்லாமல் அவளுக்கு மனைவி என்ற நிலைக்குரிய மரியாதைகூட வைக்கவில்லை. அவளுடன் நேர்முகமாகப் பேசுவதுகூடக் கிடையாது அவர்.''

''அப்படியானால் ராஜு தன் எண்ணத்தை நிறைவேற்றுகிறான்" என்கிறாயா?'' என்று கேட்டார் உமாபதி.

''என்னமா? அது என்ன?''

''விவாகத்தின் போதே பெண் வீட்டாரிடம் அவன் தன் எண்ணத்தைத் தெரிவித்து விட்டான். யசோதையின் சம்மதத்தையும் கேட்டு விட்டான்;

'தாயற்ற என் மகளிடம் அன்பு காட்டிச் சேவை செய்யக்கூடிய மனைவியையே நான் இரண்டாம்தாரமாக அடைய விரும்புகிறேன். என்னிடம் வேறு ஒன்றும் எதிர்நோக்கக் கூடாது' என்றான்.''

ஒருகணம் சுசீலாவின் மனம் விம்மி நின்றது. அப்பா தன்மீது எவ்வளவு அன்பு செலுத்துகிறார்!

''ஆனால் மாமா....?''

''என்ன சுசீலா?''

''அப்பாவின் இந்தச் செய்கை காரணமாக என்னால் வெளியே தலை காட்ட முடியவில்லை. 'பெண் விவாகத்துக்கு இருக்கும்போது இவன் தாலியைக் கட்டிக் கொண்டு வந்து விட்டான்' என்கிறார்கள்.''

''அதற்கு நாம் என்ன செய்ய? முன்பு தாயற்ற மகளை விவாகம் செய்து கொள்ள மறுத்தனர். இப்பொழுது உன் அப்பாவை ஏசுகின்றனர்.''

''ஆனால் இந்தப் பேச்சுக்கு முடிவு கட்ட ஒரு வழி இருக்கிறதே!''

''அது என்ன வழி?''

''பழைய வழிதான் மாமா. எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. எப்படியாவது என் விவாகத்தை முடிக்கத் துடித்த அப்பா, இப்பொழுது சித்தி வந்ததும் தனக்கு விவாகத்துக்கு ஒரு பெண் இருக்கிறாள் என்பதையே மறந்து விட்டார்... மாமா! அப்பாவிடம் நான் விவாகம் வேண்டாம் என்று சண்டையிட்டது உங்களுக்குத் தெரியும். ஆனால் இப்போது பிச்சைக்காரனானாலும் விவாகம் செய்து கொள்ள விரும்புகிறேன். என்னை விவாகம் செய்து கொடுத்து விட்டால் அப்பாவுக்கு ஏற்பட்டிருக்கும் பழிச் சொல் நீங்கி விடுமல்லவா?.....''

உமாபதி ஏதும் கூறும் முன், ''ஸார்!'' என்ற குரல் பின்புறத்திலிருந்து வந்தது. இருவரும் திரும்பி நோக்கினர்.

''ஸார், ராஜூ என்பவருடைய வீடு உங்களுக்குத் தெரியுமா? சாயி பாபா கோவிலருகில் சாரதாபுரமாமே!''

சுசீலா அவனை ஒருமுறை ஏற இறங்க நோக்கினாள். வாட்ட சாட்டமான உடல். காண்போர் மயங்கும் அழகு. மடிப்புக் கலையாத பாண்டும் ஷர்ட்டும். கையிலே ஒரு பெட்டி. சுசீலா அவனை நோக்கிய போது அவனது பார்வையும் அவள் மீது படிந்தது. சுசீலா தலை குனிந்து கொண்டாள். அவனோ புன்னகை பூத்தான்.

''வீட்டு நம்பர் தெரியாதாப்பா?''

''அதைத்தான் மறந்து விட்டேன், ஸார். அவருக்கு விவாகத்துக்கு ஒரு மகள் இருக்கிறாளாம்.... அவர் இப்பொழுது இரண்டாம் விவாகம் செய்து கொண்டாராம்.''



''என்னது இது! பையனை உட்கார வைத்து மந்திரிக்கிறாரே!''

''அதை ஏன் கேட்கிறீர்கள்? பரீட்சைக்காக நம்ப பயல் ராவும் பகலும் கண் முழிச்சுப் படிக்கிறதைப் பார்த்து யாரோ கண் போட்டு விட்டார்கள். புத்தகத்தைக் கையிலெடுத்தாலே தூக்கம் வரதுன்னு சொல்றான்...!''

வெடுக்கெனச் சுசீலா தலையைத் தூக்கி அவனை நோக்கினாள். அவனும் அப்பா மீது பழி சுமத்த வந்து விட்டவனோ?

''இவங்களோடு பேச நமக்கு நேரமில்லை. நீங்க வாங்க, மாமா!'' என்று கூறினாள் சுசீலா கோபத்தோடு.

''நீ சும்மா இரம்மா'' என்று சுசீலாவைச் சினந்து கொண்ட உமாபதி அந்த இளைஞனை நோக்கி, ''நானும் ராஜூவைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். பின்னோடு வாயேன், போகலாம்'' என்றார்.

மூவரும் மௌனமாகவே நடந்தார்கள். வீட்டை நெருங்கிய சமயம், ''அதோ, யசோதையே வாசலில் நிற்கிறாளே!'' என்று கூறினான் தியாகு. ஓடிப் போய் யசோதைக்குப் பின்னால் மறைந்தும் மறையாமலும் நின்று கொண்டு அவனை ஓரக் கண்களால் பார்த்தாள் சுசீலா. யசோதை தியாகுவைக் கண்டதும் வியப்படைந்தாள். ''அடேடே, தியாகுவா? வா!... சுசீலா, நீ இவனை எப்படிச் சந்திச்சே?'' என்று கூறியவள், உமாபதியின் பக்கம் திரும்பி, ''வாங்க. சுசீலாவோட அப்பா மாடியிலே இருக்கார்'' என்றாள்.


உமாபதி மாடிக்குப் போகவில்லை. அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

''என்ன, தியாகு, சுகமாக இருக்கிறாயா? இந்தப் பக்கம் எங்கே இப்படி? சுசீலா, இது யார் தெரியுமா? இவன் என்னோட அத்தை மகன். கல்கத்தாவிலே ஒரு கம்பெனியிலே வேலையாக இருக்கிறான்'' என்று அறிமுகம் செய்து வைத்தாள் யசோதை. சுசீலாவின் கண்கள் அலைபாய்ந்து...

(தொடரும்)

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சியை அட்டைப் படமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் வினு.

அவர்கள் அழகுபற்றி அவனுக்குப் பெருமை.
அவ்வழகின் ரகசியம் அவர்களுக்குப் போது.



போகி மேளம்

கோவி. மணிசேகரன்

பொழுது விடிந்தால் போகிப் பண்டிகை.

"பீசாத்.... ஒரு சின்ன மோளம்.... பதினஞ்சிப் பைசா மோளம் வாங்கிக் கொடுக்க முடியாத எனக்குப் பண்டிகை ஏன்? பாழ் ஏன்?" — ஒரு மூலையில் முடங்கி, ஒடுங்கி, அடங்கிக் குத்தங்காலிட்டு அதன் மேல் கைச் சப்பணமிட்டுத் தொங்கிய தலையுடன் அமர்ந்திருந்த பிச்சாண்டி இப்படி எத்தனை முறை தான் முனகிக் கொள்வான்! அவனுக்கு எதிரே அவனுடைய 'அருமந்தப் புதல்வன்' ஒரே புதல்வன் துரை அழுகையும், அடமுமாகக் குரலெழுப்பிக் கொண்டிருந்தான்.... எல்லா வீட்டுப் பிள்ளைகளும் போகி மேளம் வாங்கி வைத்துக் கொண்டு அடிக்கின்றனவாம்; இவனுக்கும் ஒன்று தேவையாம்; இருக்காதா? இவனும் சிறுவன்தானே?

"தொரை! என் பேச்சைக் கேளடா, கண்ணு! எப்படியும் சாயங்காலத்துக்குள்ளே மோளம் வாங்கியாந்து தர்றேன்!" மகனைப் புகையோடிய குரலோடு சமாதானம் செய்தான் பிச்சாண்டி. பகல் உணவு பூரணமாக இருந்தால்தானே குரலில் தெளிவு என்று ஒன்றிருக்க முடியும்?

சிறுவன் துரை கேட்கவில்லை. தகப்பனின் நிலையும், குடும்பத்தின் வறட்சியும் அவனுக்கு எப்படித் தெரியும்? தெரியவும் நியாயமில்லை. அவன் பெயர்தான் துரையாயிற்றே! அப்பா பிச்சாண்டியாக இருந்தாலும் மகனாவது துரையாக இருக்கட்டுமே என்று நினைத்துப் பெயரிட்டது போலும் அந்தப் பெற்ற மனம்!

தெருக் குழாயில் நீர் பிடித்துக்கொண்டு வந்த சங்கடத்துடன் குடிசையுள் நுழைந்தாள் கண்ணுத்தாள். மகனுக்கும் தகப்பனுக்கும் இடையே நடக்கும் அந்த மேளப் போராட்டத்தைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அது பெருமூச்சாகவும் வெளியேறியது. குழாயடியில் ஒரு பானைத் தண்ணீருக்கு ஒரு மணி நேரமா நடத்தி விட்டுத் திரும்பிய போராட்டம் போதாதென்று இது வேறு ஒரு குட்டிப் போராட்டமா?

"இன்னாவிது? கய்தை கெக்கலுரு ரெண்டு பரக்கப் பரக்க இசுத்தா வயிக்கு வந்துடுது! இதுக்கோசரம் அப்பா, கண்ணுன்னு அதைக் கொஞ்சிறியே!"

"கண்ணு! இதோ, நான் போயி மோளம் வாங்கியாந்து தர்றேன்!" என்றான். எப்படி வாங்குவான்? எங்கு சென்று பதினைந்து நயா பைசாக்களைப் புரட்டுவான்? அவனுக்கு— அவனுடைய மானமுள்ள நெஞ்சுக்கு அது பெரிய தொகையாக இருந்தது. அப்போதைய வாழ்க்கை நிலைக்கு! மனைவியைக் கேட்டான். அவளிடமிருக்கலாம் ஒரு வேளை.... ஆனால் அவள்.....

பத்திரகாளியாக உருவெடுத்துச் சீறினாள்!

சென்னை. சிந்தாதிரிப் பேட்டையை அணைத்து ஆனந்தமாகச் செல்லும் கூவம் ஆறு வளர்த்து வரும் ஆதிவாசிகளுள் பிச்சாண்டியும் ஒருவன். அந்த ஆற்றங்கரையோரத்தில் வீடு என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு வரிசை கட்டி நிற்கும் கூரைகளுக்குச் சொந்தமானவர்களுள் அவனும் ஒருவன்! வெயிலோ, மழையோ, புயலோ, வெள்ளமோ அத்தனைக்கும் தங்களை ஈடு கொடுத்துத்தான் அவர்களும் வாழ்கிறார்கள்! பிச்சாண்டியின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றி மேலும் சொல்லத் தேவையில்லையென்றாலும் ஒரு சில செய்திகளைச் சொல்லித்தான் தீர வேண்டும். அவன் செய்து வரும் தொழில்..... சிரிப்புத்தான் வருகிறது..... மேளம் அடிப்பதுதான்! அதாவது சற்றுப் புரியும்படி சொன்னால் 'பறை'யடிப்பது. வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அவன்தான் முன்னின்று பறையடித்துக் கௌரவிக்க வேண்டும். ஏன்? கோயில் திருவிழாக் காலங்களில் தெய்வம் எழுந்தருளி வீதி உலா வருவதற்கும் அவன் தயவுதான் முன்னதாகத் தேவைப்படும்! அப்பேர்ப்பட்ட வாழ்க்கையில் அவனுக்குக் கிடைக்கும் அந்தச் 'சில ரூபாய்'கள் தாம் வருடத்தை வரவேற்க வேண்டும்; ஓட்டவும் வேண்டும்! இப்போது போட்டியாக அவனுக்கு அந்த வட்டாரத்தில் மூன்று பேர்கள் முளைத்து விட்டார்கள். அது முதல் அவனுடைய பிழைப்பில் சற்றே மண் விழுந்தது. என்றாலும், எப்படியோ இருந்தும் இல்லாமலுமாக வாழ்ந்து வருகிறான்.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே சென்றான் பிச்சாண்டி. யாரிடம் சென்று பதினைந்து நயா பைசாக்களைக் கேட்பது? அப்படிக் கேட்டால் மற்றவர்தாம் என்ன நினைப்பார்கள்? போயும் போயும் பதினைந்து நயா பைசாக்களையா கடனாகக் கேட்பது! பின்? ஒரு ரூபாய் கேட்பதா? அவ்வளவு பெரிய நீண்ட கைகள் இந்த வரிசையில் இருக்கின்றனவா?

அவன் கொஞ்சம் புத்திசாலி; மானஸ்தனும்கூட. சிந்தனையில் ஒரு பொறி தட்டியது. ஏன் இல்லை? செங்கேணி இருக்கிறானே.....

அந்தப் பகுதி மக்களுள் கொஞ்சம் பசையுள்ளவன் செங்கேணி. எப்படியோ, எந்த விதத்திலோ அவன் கொஞ்சம் பணத்தைச் சேர்த்து வட்டிக்கு விட்டிருந்தான். அவன் எப்படிப் பணத்தைச் சேர்க்கிறான் என்பது பிச்சாண்டிக்குத் தெரியாத ரகசியமல்ல! காட்டன் மார்க்கெட்.... சினிமா டிக்கெட்..... இராச் சுற்றுதல்.... இத்தியாதி இத்தியாதி! எத்தனையோ......

செங்கேணி அந்த வகையில் — வழியில் ஒரு விதமான குறுக்குவழிப் புத்திசாலி. அவனிடம் ஒரு ரூபாய் கேட்டால் இல்லையென்று சொல்லி விடப் போகிறான்?

செங்கேணியின் குடிசை சற்று அழகாக இருந்தது. பசையுள்ளவன் பங்களா என்றே அந்தப் பகுதியின் மக்கள் வேடிக்கையாகக் கூறுவார்கள்.

பிச்சாண்டியின் தலையைக் கண்டதும் செங்கேணிக்கு வியப்பாகவே இருந்தது. இவன் ஏன் தன்னை நாடி வரவேண்டும்? ஒரு வேளை தன்னுடைய 'பிஸினஸ்'ஸில் இவனும் அங்கம் வகிக்க ஒப்புக் கொள்ள வருகிறானோ? வரமாட்-

டானே! இவன் ஒரு மாதிரியாயிற்றே! இந்த வட்டாரத்திலேயே இவன்தான் ஒழுக்கமுள்ளவன் — நேர்மையுள்ளவன் — 'மனிதன்' என்று தன்னை நினைத்துக் கொண்டு வாழ்பவனாயிற்றே!

''வாடா, பிச்சாண்டி......! ஏது இம் மாந்தூரம்! சொர்க்கத்துக்கு மோளம் அடிப்பவன் காது, இந்த நரகத்துக்கும் வரச் சம்மதிச்சுட்டதா?'' என்று குரலில் இளக்காரம் குழைய அலட்சியச் சிரிப்புடன் வரவேற்றான் செங்கேணி.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேப்பா, செங்கேணி! உன் ஒத்தாசையை நாடித்தான் வந்தேன்!'' — பிச்சாண்டி கூனிக் குறுகிப் பதில் சொன்னான்.

''இன்னாடா, ஒத்தாசை?..... காட்டன் மார்க்கட்டு ஆட்றியா? இல்லே, சினிமாக் கியூவிலே நிக்கிறியா? அதுவுமில்லாட்டா, சென்ட்ரல் ஸ்டேஷன்லே புக் பண்றதுக்கு ரெடியாகிறியா?''

இவன் என்ன தன்னை இப்படிப் புரிந்து கொண்டு கேட்கிறான்! ''அதுக்கெல்லாம் இல்லேப்பா..... வந்து....'' அவன் பேச்சை முடிக்கவில்லை. ''அதுதானே கேட்டேன்! நீ எலெக்ஷன் காலத்து நந்தனாராயிற்றே! இந்தத் திருப்பங்கூர் உனக்குப் புடிக்காதே!'' என்று இடைமறித்துக் கூறிப் பகபக வென்று சிரித்தான் செங்கேணி.

''செங்கேணி! பண்டிகையதுவுமா கையில் காசு இல்லே! ஒரு ரூபாய் கடனாகக் கொடு. இருபது தேதிக்குள்ளே குடுத்துடறேன்!''

''கைமாத்தாவா?''

பிச்சாண்டி தலையசைத்தான். ''வட்டி வேண்டும்னாலும் கொடுத்துடறேன் செங்கேணி!'' என்றான்.

செங்கேணி கெக்கலி கொட்டிச் சிரித்தான். பிறகு சொன்னான்: ''டேய், பிச்சே! நீயே ஒரு பிச்சாண்டி. ஒன்னை நம்பி எவன்டா கடன் குடுப்பான்? போ, போ! போய், ஏதனாச்சும் சொம்பு சொட்டதலேயிருந்தா கொண்டா! அதுக்கு மேலே தர்றேன்!''

பிச்சாண்டியின் கண்கள் கலங்கி விட்டன. எந்தச் செம்பு, குவளையை அவன் கொண்டுவருவான்? அவனுடைய வீட்டில் இருப்பனவெல்லாம் வெறும் சட்டிகளும், பானைகளும்தாமே?

''செங்கேணி! என் வீட்டுலே நீ சொல்ற எதுவுமில்லேப்பா! நான் ஒரு ரூபாய்க்குப் பொற மாட்டேனா?''

செங்கேணி மீண்டும் பேயாகச் சிரித்தான். ''நீ ஒத்தை நயாபைசாவுக்கு லாயக்கில்லாதவன்னு எங்களுக்கு நல்லாத் தெரியும். நீ எப்போ ஞாயம், அநியாயம் பேசத் தொடங்கிட்டியோ அப்பவே நீ ஒரு முட்டாள்..... கையாலாகாதவன்னு தெரிஞ்சு போச்சு! ஏன்? நீ அடிக்கிற பறை இருக்குதோ இல்லியோ...... அதைக் கொண்டாந்து அடகு வையேன்....!''

பிச்சாண்டி வாயடைத்து வழி நடந்தான். வேலங்காட்டுள் நுழைந்தால் காலில் முள் குத்தத்தானே செய்யும்? ஆமாம்..... இதில் வேலங்காடு எதைக் குறிக்கிறது? செங்கேணி போன்றோர் வாழும் பகுதியா? இல்லை, ஒழுக்கம், நேர்மை என்று சொல்லக்கூடிய தத்துவப் பகுதியா?

அந்த நிலையிலும் பிச்சாண்டி சிரித்துக் கொண்டான்.

தனக்கென்று தன்னுடைய நீண்ட வாழ்வுக்கென்று உயிருக்குயிராக வைத்திருந்த பறையை மேல் துண்டால் மூடி மறைத்து, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் குழந்தையைப் போல் அதை எடுத்துக் கொண்டு செங்கேணியின் வீட்டை நோக்கி நடந்தான்.

''நீ மனுஷன்டா......!'' என்று குத்தலாகக் கூறி வரவேற்றுப் பறையைப் பெற்றுக் கொண்ட செங்கேணி, கொஞ்சமும் இரக்கமில்லாமல் அதன் பேரில் ஒரு ரூபாயைக் கொடுத்தான். அப்படிக் கொடுக்கும் போது இரண்டணா வட்டி என்று குறிப்பிடவும் அவன் தவறவில்லை.

புழுங்கிய மனத்துடன் அந்த ஒற்றை ரூபாய் நோட்டுடன் நேரே கடை வீதிக்குச் சென்றான் பிச்சாண்டி. கண்ணுக்குக் கண்ணாய்க் காத்து வந்த அந்தப் பறைக்கு ஏற்பட்ட கதியைக் கண்டு அவனுடைய குழி விழுந்த கண்கள் குளமாயின.

மகன் துரையை நினைத்துப் பார்த்தான். அவனுக்காகத்தானே இந்நிலை ஏற்பட்டது? பதினைந்து நயா பைசாக்களுக்கு வக்கில்லாதவனுக்கு மகனாகப் பிறந்து விட்டானே! அவனை எப்படி முன்னுக்குக் கொண்டு வர முடியும்? மனிதனாக்க முடியும்? கண்ட கனவுகளெல்லாம் அந்த ஒரு நொடியில் பொடிந்து சிதிலமாகி விட்டன!

பிச்சாண்டி தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டான். கடை வீதியும் அவனுடைய பரந்த கண்களில் பட்டது. நேரே சென்று ஒரு சிறிய போலி மேளத்தை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

வழி நெடுகச் சிறுவர்களும், சிறுமிகளும் மேளம் கொட்டி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தனர். மேளத்தில் சிறு கயிறு கட்டி, அதன்



துவியில் தாருருண்டையைப் பொருத்தி 'டம டம டம' வென்று எழுப்பிய சத்தம் செவிகளைப் பிய்த்தது.

கொஞ்ச தூரம் நடந்து வந்த பிச்சாண்டி எதிரே ஒரு வீட்டு வாசற்படியில் நடந்த காட்சியைக் கண்டு அப்படியே அசையாது நின்று விட்டான். அவனுடைய பரந்த கண்களில் அந்தச் சின்னஞ் சிறுவனுடைய துடிப்பு பரிதாபத்தை உண்டு பண்ணி விட்டது. வெறும் கோவணம் கூடச் சரியாகக் கட்டாமல் பரட்டைத் தலையுடன் தன் தாயிடம் அந்தச் சிறுவன் அழுது அடம் பிடித்து அடிவாங்கிக்கொண்டிருந்தான். அந்த ஏழை அன்னையோ தான் பெற்ற மகன் என்றும் பாராமல் 'திப்பு திப்பு' வென்று ஆவேசம் கொண்டவளாய் இரு கரங்களாலும் அவனுடைய இளம் முதுகில் சாத்திக் கொண்டிருந்தாள். அடி தாளாத அந்தப் பாலகன், ''அம்மா! மோளம், மோளம்!'' என்று கேவிக் கேவிச் சொல்லிக் கொண்டிருந்தான். தாய் தன் முதுகை மேளமாக்கி அடித்து ஐந்து விரல்கள் பதிந்ததுகூட அந்தச் சிறுவனுக்குப் பொருட்டாக இல்லை. அவன் மேளம் வேண்டுமென்றே அழுதான். அந்தக் காட்சி பிச்சாண்டியை உலுக்கிவிட்டது. ''ஏம்மா! பச்சைப் புள்ளே. அதை இப்படியாம்மா அடிக்கிறது?''


''பின்னே இன்னய்யா? கையிலே துட்டு இல்லே! இந்தக் கசமாலம் மோளம் வாங்கித் தான்னு என் மானத்தை வாங்குது!''

ஓகோ! இதுவும் நம்ம 'கேஸ்'தான் என்று நினைத்தானோ, இல்லையோ, இதயம் நெக்குருகி விட்டது. உடனே தன் மகனுக்காக வாங்கி வைத்திருந்த மேளத்தை எடுத்து அந்தச் சிறுவனிடம் நீட்டினான் பிச்சாண்டி. சிறுவன் திருதிரு வென்று விழித்தான். ''வாங்கிக் கோடா, கண்ணு!'' — பிச்சாண்டி புன்னகையுடன் கூறினான். அந்தச் சிறுவனும் தாயை நோக்கியவாறு மேளத்தை வாங்கிக் கொண்டு, வாங்கிய உதையையும் மறந்து, மகிழ்ச்சி துள்ளத் தன் சகாக்களுடன் மேளம் கொட்டி விளையாடச் சிட்டாகப் பறந்தான்.

உலகப்ப மேஸ்திரி வீதியும், அருணாசல நாயக்கன் தெருவும் சந்திக்கும் இடத்தைத் தாண்டிக் கொண்டிருந்தான் பிச்சாண்டி.

எதிரே மகனைத் தோளில் கிடத்திக் கொண்டு அரக்கப் பரக்கக் கண்ணாத்தாள் ஓடி வரும் காட்சியைக் கண்டு கதிகலங்கி நின்று விட்டான் பிச்சாண்டி. எங்கே இவள் இந்தப் பக்கம் போய் வருகிறாள்? குழந்தை வேறு தோளில் துவண்டு படுத்திருக்கிறானே!

கண்ணாத்தாள் எதிரே நின்ற புருஷனைக் கண்டுவிட்டாள். ''தே.....! நீ எங்கே போயிட்டே? புள்ளே நெருப்பிலே கையைச் சுட்டுக்கிட்டுது. ஆசுபத்திரிக்குக் கொண்டு போயிட்டு வர்றேன்!''



மாமியார் : இன்னும் அந்தப் பயங்கர சீன் வரலையே! அதற்குள் ஏன் இப்படிப் பயந்து நடுங்குகிறாய்?

மருமகள் : உங்களுக்குப் பக்கத்தில் இந்த இருட்டில் உட்கார்ந்திருக்கிறேனே!

கண்ணாத்தாள் கூறியதைக் கேட்டுப் பிச்சாண்டிக்கு ஒன்றும் புரியவில்லை. நெருப்பில் கையைச் சுட்டுக் கொண்டானா? ''எப்படிக் கண்ணாத்தா சுட்டுக்கிட்டான்? நீ என்ன செய்துக்கிட்டு இருந்தே ?''

''இந்தா பெரிய ஆம்புளே! எந்தா பெரிய கேள்வியைக் கேட்டுப்பிட்டாரு பாரு! அட சே! நீ ஒன்னு. காட விளக்கு வைச்சிருக்கிற, அட்டைப் பெட்டியை எடுத்து இது மோளம் அடிக்கத் தொடங்கிடுச்சு! பொறவு...அதைச் சூடேத்தறேன்னு அடுப்பிலே காட்டியிருக்கு! கிருஷ்ணு விளு பொட்டியாச்சே.... சுருப்புன்னு தீப்பிடிச்சிக்கிட்டுது. அவ்வளவுதான். கைவெந்து இந்தக் கய்தை துடியாய்த் துடிச்சிப்பிட்டான். உடனே தோள்லே போட்டுக்கிட்டு ஆசுபத்திரிக்கு ஓடினேன்!''

பிச்சாண்டி எதை நினைத்து எதற்காக வருந்துவான்?

கண்ணாத்தாள் கேட்டாள்:

''ஆமாம்.... நீ எங்கே இப்படி...... போறே?''


''பையனுக்கு மோளம் வாங்கலாம்னு கடைக்குப் போறேன் கண்ணாத்தா!'' என்று அழாக்குறையாகப் பதிலளித்தான் பிச்சாண்டி.

''ஆமாம்! இது மோளம் அடிச்சக் கிழிச்சுது. இதுதான் கையைப் பொசுக்கிக்கிட்டுக் கட்டுப் போட்டுக்கிட்டு இருக்கே! மேளம் தானா ஒரு கேடு? அந்தத் துட்டை என்கிட்டே கொடு. கடையிலே நெத்திலிப் பொடி நயமா வந்து விழுந்து கெடக்குதாம். வாங்கியாந்து காரம் போட்டுச் கண்டினா, 'பஸ்டா' இருக்கும்!'' என்றாள் கண்ணாத்தாள். இப்போது பிச்சாண்டி மனைவியை எண்ணி வருந்தினான்.

''ஆமாந்தே.....! இன்னொரு விசயம் தெரியுமா? பால்கார குப்புசாமி பிள்ளையா மாட்டுப் பொங்கலுக்கு மாட்டையெல்லாம் சிங்காரிச்சு ஊர்வலமா கூட்டிக்கிட்டுப் போகப் போறாராம். உன்னையே மோளம் அடிக்க வந்துடச் சொன்னாரு! அச்சாரம் கொடுத்துட்டுப் போனாரு. நாளைய பண்டிகைக்கு அதுலே அரிசி பருப்பு வாங்கியாந்து வச்சிருக்கேன். இந்தா குழந்தையைத் தூக்கிக்கிட்டு வூட்டுக்குப் போ! அந்த மோளம் வாங்கற துட்டை இப்படிக் கொடு. நான் கவுச்சிக் கடைக்குப் போயிட்டு ஒரு நொடியிலே வந்துடறேன் !''

இப்போது அவன் தன்னைப் படைத்த ஆண்டவனையே எண்ணி வருந்தினான்

"கொஞ்ச நேரம் வேலை செய்வதற்குள் இத்தனை களைப்பா?"



இல்லை, இல்லவே இல்லை!

நான் போர்ன்-விடா சாப்பிடுகிறேன்.
தினசரி இரண்டு கப் சாப்பிடுகிறேன்.
போர்ன்-விடா அளிக்கும் சக்தியினால்
நான் முழுவதும் களைப்பின்றி
வேலை செய்கிறேன்.

BOURN-VITA

சக்திக்கும் வலிமைக்கும்





தயாரிப்பாளர்கள்,

Cadbury's

தெரு முனையில் 'பியட்' கார் தனக்கே உரித்தான சத்தத்தைப் போட்டுக் கொண்டு வந்தது. பங்களாக் கதவுகளைக் கார் நுழைய வசதியாகத் திறந்து வைத்தாள் வனஜா. வீட்டு வராந்தாவில் நின்று கொண்டாள். காரை ஓட்டி வந்த விஜயன் கண்கள் தன் வீட்டு வாசல் மின்சார விளக்கடியில் ஒரு பெரிய படகுபோன்ற 'ஸ்டுடி' கார் நிற்பதைக் கவனிக்கத் தவறவில்லை. அவன் கூட வந்த நண்பர் முதலில் இறங்கினார். அவர் தான் ஆசிரியர் ஆத்மநாதன், விஜயனுடைய பம்பாய் நண்பன் கலியாண ராமனுக்கு ஆத்ம சிநேகிதர். சென்னைக்கு வரும் ஆசிரியரை வரவேற்று உபசரிக்கும்படி விஜயனை வேண்டிக் கொண்டிருந்தான் நண்பன். அவர் வருகைக்குத்தான் குடும்பமும் காத்துக் கிடந்தது. கார் பின்பகுதி 'டிக்'கியைத் திறந்து விருந்தாளியின் பெட்டி, படுக்கையை எடுத்துக் கூடத்தில் கொண்டு வைத்தான் விஜயன். அருமை மனைவி கணவருக்கு உதவியாக ஒவ்வொரு சாமானாக மாடியில் ஆசிரியருக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் கொண்டு போய் வைத்தாள். கடைசியாக ஒரு சிறு தோல் பெட்டி ஒன்றைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தான் விஜயன். அதைக் கையில் வாங்கிக் கொண்ட வனஜாவின் பூப்போன்ற கைகள் சிவந்து விட்டன. 'என்ன கனம்' என்று முணுமுணுத்தாள் அவள். ஆசிரியர் மரியாதைக்காகக் கூட உதவிக்கு வராமல் வானை நோக்கி ஏதோ யோசனையில் சிறு நடை போட்டுக் கொண்டிருந்தார். ஒரு வழியாகச் சாமான்களை ஒழுங்காக வைத்த விஜயன் விருந்தாளியை மனைவிக்கு அறிமுகம் செய்ய வேண்டி, ''சார்! உள்ளே வாருங்கள்'' என்று கூப்பிட்டான். அவன் கூப்பிட்டானே தவிர ஆள் உள்ளே வருவதாகக் காணோம். சங்கோசப் பேர்வழி என்று எண்ணி வெளியே வந்து பார்த்தான்.



என்ன ஆச்சரியம். அவரை அங்கு காண வில்லை. கொஞ்சம் கலவரமடைந்த விஜயன், ''வனஜா! மனுஷன் உள்ளே வந்தவரைக் காணவில்லையே !'' என்றான்.

''காணவில்லையா? சரியாகப் பார்த்தீர் களா?'' மனைவியின் கவலை மிகுந்த கேள்வி. ''பார்த்தேன் வனஜா. நாம் உள்ளே போய் விட்டு வெளியே வருவதற்குள் எங்கு போய் விட்டிருப்பார்? அது சரி, நம் வீட்டு வாசல் மின்சாரக் கம்பத்தின் கீழ் ஒரு பெரிய 'ஸ்டுடி' கார் நின்று கொண்டிருந்ததைக் கவனித் தாயா வனஜா? அது இப்பொழுது காணோம்.''

''சரிதான். ஊரிலே ஆயிரம் கார்கள் வரு கின்றன, போகின்றன, நிற்கின்றன. அதற்கும் இந்த மாய மனிதனுக்கும் என்ன சம்பந்தம்?''

''.....வனஜா, போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணட்டுமா?''

''பைத்தியம் மாதிரி ஒன்றும் அவசரப் படாதீர்கள். ஏன் கலவரப்படுகிறீர்கள்? என்ன நடக்கிறது என்பதைக் கவனிப் போமே'' என்று வனஜா கூறி முடிப்பதற்கும், ஹாலில் உள்ள டெலிபோன் மணி 'கண கண' வென்று ஒலிப்பதற்கும் சரி யாக இருந்தது. ''ஹலோ! விஜயன் பேசுகிறேன்.''

''மிஸ்டர், விஜயன்! ஆத்ம நாதன் பேசறது. மன்னிக்க வேண்டும். தலை போகிற காரி யம். உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட் டேன். என்னைப் பற்றிக் கவ லைப்பட வேண்டாம். ஹலோ! சாமான்களெல்லாம் பத்திர மாகப் பார்த்துக் கொள்ளவும். முக்கியமாக என் தோல் கைப் பெட்டி மிகவும் பத்திரம். அதில் தங்கம்....''

''என்ன சொல்கிறீர்கள், ஆத்மநாதன்!''

''ஒன்றுமில்லை. அந்தப் பெட்டியில் தங்கச் சுரங்கமே இருக்கிறது என்றேன்.'' டெலி போன் டக்கென்று நின்று விட்டது.

விஜயன் அவசரமாக மேலே சென்றான். அறைக் கதவைத் திறந்தான். அங்கு ஆத்ம நாதனின் பெட்டி, படுக்கைகள் இருந்தன. ஆனால், அந்தத் தோல் பெட்டி எங்கே? தேடினான், தேடினான். ஐயோ! தங்கச் சுரங் கம்! அது காணவில்லை! ''வனஜா!'' அடி வயிற்றிலிருந்து வந்தது அந்த அலறல். ''ஏன், என்ன?'' என்று ஓடினாள் வனஜா.

''வனஜா, வனஜா! அந்தத் தோல் பெட் டியை எங்கே கொண்டு வைத்தாய்? அது காணவில்லையே !''

''காணவில்லையா? நான் இங்குதானே வைத்தேன். நம்மை அறியாமல் அது எங்கே போய்விடும்?''

''அதுதானே நானும் கேட்கிறேன்'' என் றதும், கீழே இருந்து ''அப்பா! நோக்கு டெலி போன்'' என்று குரல் கொடுத்தாள் கீதா? கீழே பரபரப்புடன் இறங்கி வந்து ரிஸீ வரைக் காதில் வைத்துக் கொண்டான்.

''ஹலோ, விஜயன்! ஆத்மநாதனின் தோல் பெட்டி பத்திரமாக இருக்கிறதா? நாளைக் காலை அதை எடுத்து வந்து நான் கூறப் போகும் இடத்தில் மரியாதையாக வைத்து விடவேண்டும்.''

''ஐயா! நீங்கள் யார் பேசுவது? ஆத்ம நாதன் இங்கு இல்லை. அவர் தோல் பெட்டி யும் இங்கே இல்லை.''

''என்ன உளறுகிறீர்? அதில் இருப்பதைத் தெரிந்து கொண்டு அமுக்கப் பார்க்காதீர். பெரும் ஆபத்து வந்துவிடும்!''

''இல்லை, ஐயா! உண்மை யைத்தான் கூறுகிறேன். அது காணாமற் போய்விட்டது.''

''ஹஹ்ஹா..'' என்ற சிரிப் பொலி விஜயன் காதில் வந்து இடிபோல் பாய்ந்தது. ''யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்? யாரு டன் பேசுகிறீர் தெரியுமா? ஜாக்கிரதை. பெட்டி பத்திர மாக வந்து சேர வேண்டும்.''

இதைக் கேட்டு எரிச்சல் அடைந்த விஜயன், ''ஹலோ! யாரை மிரட்டுகிறீர்? என்னிடம் பெட்டியும் இல்லை, சட்டியு மில்லை. என்னை யாரென்று நினைத்தீர்? போலீசுக்குச் சொல்லி உம்மை என்ன செய் கிறேன் பாரும்'' என்றான்.

மறுபடியும் அந்தக் கர்ண கடூரச் சிரிப்பும் அதைத் தொடர்ந்து, ''விஜயன்! போலீசு, கீசு என்று பேசி னீரோ மனைவி, குழந்தைகளை இழப்பீர்...'' என்ற குரலும் கேட்டது. பிறகு டெலிபோன் ஊமையாகி விட்டது. உடல் நடுங்கியது விஜயனுக்கு. பம் பாயிலிருந்து வந்த அந்த ஆசா மி ஏதாவது தங்கக் கடத்தல் வியாபாரத்திலீடுபட்டவரோ? அதைத் தெரிந்து கொண்டு ஒரு கொள்ளைக் கூட்டம் அட்ட காசம் செய்கிறதா? இதற் கெல்லாம் என்ன வழி என்று முழங்கால் மேல் கைகளைத் தாங்கிக் கொண்டு தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தான். மறு நாள் காரை எடுத்துக் கொண்டு ஆபீஸ் கிளம்பி விட்டான் விஜயன். ஆனால் அங்கு சென்றவனுக்கு நிம்மதி இல்லை. தனியாக மனைவி என்ன செய்கிறாளோ என்ற பயம்! டெலிபோன் மணி அலறியது. ''ஹலோ! விஜயன் பேசறேன்!'' என்றான். ''என்ன சார்! பெட்டி விஷயம் என்ன ஆயிற்று?''— அதே அதிகாரக் குரல்.

''அட வீட்டில் இருந்தால்தான் பெட்டி பெட்டி என்று இழவெடுக்கிறீர். ஆபீஸிலுமா உம் எழவு? என்னை விடமாட்டீரோ?''

''பெட்டி கிடைக்கும்வரையில் விடமாட் டேன். சரி! குழந்தை கீதா எப்படி இருக்கிறாள்?



''டேய்! பாவி! அவள் என் உயிர். அவள் மேல் கை வைத்தாய், உன் மென்னியைத் திருகிவிடுவேன்'' என்றான் விஜயன். அந்தப் பேய்ச் சிரிப்புத்தான் பதிலாகக் கிடைத்தது.

ஒரு வழியாக மாலையும் வந்தது. வீடு வந்து சேர்ந்தான் விஜயன். 'வனஜா' என்று கூப்பிட்டுக் கொண்டே நுழைந்தான். ''வனஜா! கீதா வரும் நேரமாகவில்லை?''

''என்ன இப்படி ஆய்விட்டீர்கள்! விளையாடப் போயிருக்கிறாள். தானே குழந்தை வருவாள்.''

''இல்லை! மணி ஐந்தாகி விட்டது. குழந்தையைக் காணோமே!'' ஹாலில் மேலும் கீழும் நடக்க ஆரம்பித்தான். மணி ஐந்தரை. நிஜமாகவே வனஜாவுக்குக் கொஞ்சம் பயம் வந்தது. ''என்ன, காரை எடுங்களேன். போய்ப் பார்ப்போம்!''

இந்தச் சமயத்தில் ''அப்பா!'' என்று குரல் கேட்டது வாசலிலிருந்து.

''கீதா! வாம்மா!'' என்று விஜயன் அள்ளி அணைத்தான் குழந்தையை. தூக்க முடியாமல் ஒரு பொம்மையைக் கையில் வைத்துக் கொண்டிருந்தாள் அவள். பை நிறைய சாக்லேட், பிஸ்கட். ''ஏது இதெல்லாம்?'' என்று கேட்டான் விஜயன்.

''உன் சிநேகிதர் நடேச மாமாதான் வாங்கித் தந்தார்.''

''கழுதை! உன்னை உதைக்க வேண்டும். யாராவது காரிலே வான்னு கூப்பிட்டால் போகலாமா? உன் காலை ஒடிச்சுடுவேன்'' என்று வனஜா மிரட்டியதும், ''அப்பா! அம்மாவைப் பாரப்பா; வையறா!'' என்றாள்.

''இல்லை, கண்ணு! நமக்குத் தெரியாதவா கூப்பிட்டாப் போகலாமா?'' என்று கேட்டார் தகப்பனார்.

''நடேசமாமாதான் உன் பிரண்டாச்சே!''

''நல்ல மாமா! மூஞ்சியைப் பாரு!'' என்று கடிந்தாள் தாயார்.

மறு நாள் காலை ஒன்பது மணிக்கு டெலிபோன் மணி ஒலித்தது. ரிசீவரை எடுத்தான்:

''என்ன மிஸ்டர்! குழந்தை கீதாவுக்கு என் அன்பு முத்தங்கள். சமர்த்துக் குழந்தை; சூடிகையான குழந்தை. அவளுக்கு என்ன நேர்ந்திருக்கக் கூடும் என்று யோசித்துப் பாருங்கள்! அதனால் பெட்டியைப் பத்திரமாக என்னிடம் ஒப்படைத்து விடுவதுதான் நல்லது!'' ரிசீவரை வைத்து விட்டுக் காரில் ஏறி ஆபீசுக்குப் போனான் விஜயன்.

வழியில் கடைத் தெருவில் ஒரு பாக்கெட் சிகரெட் வாங்குவதற்காகக் காரைச் சற்று நிறுத்தினான். மறுபடியும் அவன் டிரைவர் ஆசனத்தில் ஏறி அமர்ந்தபோது அந்த ஸ்டூடி - பேகர் கார் அவன் காரைத் தாண்டிப் பறந்தது. பிறகு அதுவும் நின்றது. 'விர்' என்று பின்பக்கமாக வந்து விஜயன் காருக்கு அருகில் நின்றது. ''ஹலோ மிஸ்டர் விஜயன்! ஆபீஸுக்கா?'' என்று கேட்ட குரலுக்குரிய அந்தக் கார் ஓட்டி ஒரு பெண்மணி என்று தெரிந்துகொள்ள விஜயனுக்குச் சிறிது நேரமாகியது. அழகிய சந்திர பிம்ப முகம். ஆனால் முழு வடிவம் காண முடியாமல் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தாள். தலையைச் சுற்றி மெல்லிய துணியினால் கட்டப்பட்ட முக்காடு. ''என்ன! விஜயன் என்று கூப்பிட்டீர்கள்? என்னை எப்படித் தெரியும்?''

''உங்களைத் தெரிந்திருக்கக் கூடாதா?''

''ஓகே! நான் ஆபீஸுக்குப் போகணும்.''

''ரைட்டோ! என் காரில் ஏறிக்கொள்ளுங்கள். கொண்டு விடுகிறேன்.''

''ஏன்? என் காரில் செல்ல முடியாதா?''

''முடியும் என்று தோன்றவில்லை. கீழே இறங்கிப் பின் பக்கம் டயரைப் பாருங்கள்!''

''என்ன?'' என்று கேட்டுக்கொண்டே கீழே இறங்கிக் காரைப் பார்த்தான். கண்ணராவி. இரண்டு டயர்களும் கிழிந்து சப்பிக் கிடந்தன.

''இது யார் வேலை?''

''என்னைக் கேட்கிறீர்களே! நான் காரை விட்டுக் கீழே இறங்கவில்லையே மிஸ்டர் விஜயன். என் மேல் ஏன் கோபம்? ஆபீஸுக்குப் போக வேண்டுமென்றால் என் காரில் வாருங்கள். உங்கள் தொழிலதிபர் மிஸ்டர் சுதர்சனமும் என் சிநேகிதர்தான்'' என்று கூறி அந்தச் சிவந்த உதடுகளின் வழியாக வெண் முத்துப் பற்கள் தெரியும்படியாகச் சிரித்தாள். முற்றும் துறந்தவர்கள் கூட அந்தச் சிரிப்பின் ஒலியில் சிக்கி விடுவார்கள் என்றால் விஜயன் எம்மாத்திரம்? காரின் கதவைத் திறந்து கொண்டு அந்த மங்கை பின் பக்கத்தில் அமர்ந்தான். கார் நகர்ந்தது. அந்தத் தந்தம் போன்ற கைகள் ஸ்டீய ரிங்கைச் சுற்றிய விதம் அவன் தலையைச் சேர்த்துச் சுற்றியது. ''என்ன மிஸ்டர் விஜயன்! ஆபீசுக்கு அவசியம் போக வேண்டுமா?'' என்றாள் அழகி.

''ஆபீஸ் போக வேண்டுமென்பதில்லை. வேறு எங்கு போகலாம்?'' என்று கேட்டான்.

''அப்படிச் சொல்லுங்கள். என் வீட்டுக்குப் போவோமா?'' என்று குழைந்தாள்.

அப்படி அவள் சொல்ல வேண்டும் என்றே எதிர்பார்த்துக் காத்திருந்த விஜயன் ''சரியான யோசனை'' என்றான்.

கார் ஒரு பெரிய பங்களாவுக்குள் நுழைந்து விட்டது. ''வாருங்கள் மிஸ்டர் விஜயன்! உங்கள் கேள்விகளுக்கெல்லாம் சீக்கிரமே விடைகள் கிடைக்கும்'' என்று உள்ளே சென்றாள். இரண்டு கண்ணாடி டம்ளர்கள் குளிர்ந்த பானங்களைச் சுமந்து வந்தன. ''குடியுங்கள் விஜயன், பிறகு பேசலாம்!'' என்று ஒரு புன்முறுவலை உதிர்த்து டம்ளரை லாகவமாக அவன் கையில் கொடுத்தாள். ஒரு கணம் யோசித்தான். பிறகு பருக ஆரம்பித்து விட்டான். என்ன ருசி, என்ன சுறுசுறுப்பு! உடம்பு முழுவதும் ஓர் உணர்ச்சி. எதிரே நின்ற மங்கை மெதுவாகக் கண்களுக்குள் சென்று விடுவாள் போலிருந்தது. கண்களை மூடினான். திறக்க முயன்றான், முடியவில்லை. பொத்தென்று கீழே விழுந்தான். ஒரு வெண்கலச் சிரிப்பு எங்கோ ஒலித்து ஓய்ந்தது.

கண் விழித்தான் விஜயன். ஒரு குளிர் சாதன அறையில் மெத்தெனப் பஞ்சு சயனத்தில் கிடந்தான். மெல்லிய இசை எங்கோ ஒலித்துக் கொண்டிருந்தது. எவ்வளவு நேரம் தூங்கி, மயங்கிக் கிடந்தானோ தெரியவில்லை. ''ஹலோ! மிஸ்டர் விஜயன்! ரொம்ப நேரம் தூங்கி விட்டீர்களே!'' ஆம், பழகிய குரல். டெலிபோனில் வழக்கமாக வதைக்கும் குரல். 'சரிதான். சிங்கத்தின் குகைக்கே வந்து விட்டோம்!'



"மிஸ்டர் விஜயன்! இன்றுதான் கடைசி நாள். உங்களை எச்சரிக்கிறேன். சந்திக்கப் போகிறோம் நாம் இருவரும். பெட்டியை வாங்கித்தான் போகப் போகிறேன். இப்பொழுது சென்று வாருங்கள். நமஸ்காரம்" என்றதும் அவன் அறைக் கதவு தானாகத் திறந்து கொண்டது. வெளியில் ஓடினான். ஆச்சரியம்! அவனுடைய கார் புதிய டயர்களுடன் நின்றிருந்தது; ஏறிக்கொண்டான். 'விர்' என்று பறந்தது கார். வழியில் 'காவல் நிலையம்' என்ற இடத்தைக் கண்டதும் காரை மெதுவாகச் செலுத்தினான். "வேண்டாம் தம்பி! நேராகப் போ" என்ற சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தான். 'சொரே' லென்றது விஜயனுக்கு. காரின் பின் ஸீட்டுக்குப் பக்கத்தில் பதுங்கி யிருந்து இப்போது நிமிர்ந்து உட்கார்ந்தது ஒரு தடி ஆள். புஸ்தி மீசை. 'பப்' என்று குச்சியில் சுற்றிய பால் மிட்டாய் போன்ற கிராப்பு. கழுத்தில் கறுப்புக் கயிற்றில் கோத்த வெள்ளித் தாயத்து. முண்டா பனியன். கையில் பளபளவென்ற கத்தி. "என்ன தம்பி, போலீஸ் டேசனுக்குப் போவப் பாக்கிறியா? வாணாம். சொல்லிப்பிட்டேன். தம்பி, பெட்டி விசயம் மறந்துடாதே. கூட வரேன். கொடுத்துடு" என்று தேய்ந்துபோன கிராமபோன் பிளேட் போடும் சத்தத்தில் பேசினான்.

"ஐயோவ்! என்ன காரை வேகமாக ஓட்டறே? மெள்ளப் போய்யாங்கறேன்." விஜயன் காதில் ஏதும் விழவில்லை. அப்போது எதிரே ஒரு கார் வந்துகொண் டிருந்தது. அதன் மேல் மோதிவிடக் கூடாதே என்று வேகத்தைக் குறைத்தான் விஜயன். அந்தக் காரில் இருந்தவர் கைகாட்டிக் காரை நிறுத்தினார். இரண்டு கார்களும் நின்றன. மற்றொரு காரிலிருந்து இறங்கியவர் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"என்ன மிஸ்டர் ஓவராகப் போறீங்க. சார்ஜ் செய்யணுமா?" என்று கேட்டார் விஜயனை நோக்கி.

இதற்குள், "சலாம் சாரே! நான்தான்" என்று கீழே இறங்கினான் அந்த முரட்டு ஆள்.

"அட! மருதையா? நீ எங்கேப்பா இந்தக் கார்லே? என்னோடு வரயா?"

"வரேன், ஸார்! தம்பி! நீங்க பத்திரமாகப் போங்க. உங்களை நான் கண்டுக்கிறேன்" என்று கூறிவிட்டுப் போலீஸ் இன்ஸ்பெக்டருடன் சென்றான் அந்த மருதை. அசந்து சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டான் விஜயன்.

ஒரு வழியாய் வீடு வந்து சேர்ந்தான். அந்தி மயங்கும் நேரம். ஹாலில் நுழைந்தான். ஒரே அதிர்ச்சி. அங்கே ஆசிரியர் ஆத்மநாதன் வனஜாவுடன் பேசிக் கொண்டிருந்தார். "விஜயன்! சௌக்கியமா? மன்னிக்க வேண்டும். வந்த வேலை முடிந்து விட்டது. இனிமேல் இங்குதான் முகாம்" என்றார்.

ஆடாமல், அசையாமல் நின்ற விஜயன், "ஐயா! உங்களை வாழ்த்துவதா, தூற்றுவதா என்று தெரியவில்லை. ஆனால் கல்யாணராமன் இப்படி என் தலையில் ஒரு கல்லைப் போடுவானென்று தெரிந்திருந்தால்...." என்றான்.

"ஐயோ! அவர் தங்கமானவராயிற்றே.."

"தங்கம்! அதுதான் இப்போது ஆபத்தாயிற்று. இப்பொழுது உங்களுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. உங்கள் தோல் பை மாயமாய் மறைந்து விட்டது."

"என்ன! என் தங்கக் கரங்கம் பறிபோய் விட்டதா?"

"அது பறிபோனது மட்டுமல்ல. என் குடும்பமே அதனால் மூழ்கி விடும்போலிருக்கிறது. அப்பப்பா! இந்த மூன்று நாட்களும் நான் படும் அவஸ்தை..." அவன் வார்த்தைகளை முடிக்கவில்லை. அந்தப் படகு 'ஸ்டுடி' கார் ஜம் என்று பங்களாவுக்குள் நுழைந்தது. அதிலிருந்து ஒரு கனவான் இறங்கி வந்தார். காரும் உடனே திரும்பி விட்டது.

"வணக்கம். இதுதானே விஜயன் என்பவரது பங்களா?" என்று கேட்டுக்கொண்டே அந்தக் கனவான் ஹாலுக்கு வந்தார். அங்கே ஒரு மூலையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை இதோ, "நடேச மாமா!" என்றான்.

"இவர்தானா அந்தப் பெரிய மனிதர்? திருவாளர் நடேசனாரே! என்னிடம் உமக்கு என்ன வேலை?"

"தெரியவில்லையா? இத்தனை நாட்களாகக் கேட்ட பெட்டிதான் வேண்டும். சந்திக்கப் போகிறோம் என்றேன். வந்து விட்டேன்."

நடேசன் இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போதே 'ஸ்டுடி' கார் மறுபடியும் உள்ளே நுழைந்தது. இப்போது அதிலிருந்து இறங்கியவர்கள் இருவர். ஒன்று அந்த மர்ம அழகி, மற்றொன்று மருதை.

"மருதை! இனிமேல் தாமதிக்கக் கூடாது. அந்தப் பெட்டியை எடுத்து வா" என்றதும், இரண்டெட்டில் மாடியை நோக்கிச் சென்ற மருதை மாடியில் தட்டுமுட்டுச் சாமான்கள் போட்டு வைத்திருக்கும் பரண் மேல் ஒரு தாவுத் தாவினான். கீழே குதித்தவன் கையில் பெட்டி. அதைக் கண்டவுடன் விஜயன் வாயைப் பிளந்தான். "இது எப்படி அங்கு போயிற்று?" என்று கத்தினான்.

ஆத்மநாதன் பேசினார். "விஜயன்! மன்னிப்புக் கோருகிறோம். உங்கள் பம்பாய் நண்பர் கல்யாண ராமன் உங்களுக்கு மர்மக் கதைகள் மிகவும் பிடிக்கும். அதுவும், துப்பறியும் பயங்கரச் சினிமாக்கள் பார்ப்பதில் ஒரு ஆசை உண்டு என்றார். ஆனால் 'மேல் நாட்டில் ஒரு ஹிட்ச்காக் போல் எவன் நம் நாட்டில் 'சஸ்பென்ஸ்' மன்னன் இருக்கிறான்? எல்லாம் வெறும் தெள்ளிக்காய் மூட்டைகள்' என்று வேறு சொல்வீர்களாம். ஆகையால் அவர் இஷ்டப்படி நாங்கள் முன்னேற்பாடு செய்து உங்கள் மனைவி வனஜாவின் ஒத்துழைப்புடன் ஒரு நாடகமே நடத்தி விட்டோம். இதெல்லாம் நாங்கள் எடுக்கப் போகும் 'தங்கக் கரங்கம்' என்னும் மர்மக் கதை சினிமாவில் வரப்போகும் சில சம்பவங்கள்" என்று கூறிக் கொண்டே பெட்டியைத் திறந்து "இதுதான் கதையின் பிரதிகள்" என்றார். "இந்தப் படத்தை டைரக்ட் செய்யப்போகிறவர் நண்பர் நடேசன். கதாநாயகி இதோ தமயந்தி தேவி; உப நடிகர் அதோ மருதை; கதாநாயகன் பெயர் இப்பொழுது வெளியிடப் போவதில்லை. அவர் ஒரு மர்ம மனிதர்" என்று கூறி முடித்தார்.

நிமிஷக் கதைகள்



மன இயல் தந்திரம்

களாடெட் கிளியோபாட்ரா வேஷத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவளிடம் டிமில்லி, "உனக்குத் தெரியுமா, கிளியோபாட்ரா கடைசியில் விஷப் பாம்பைத் தன் மார்பில் விட்டுக் கொண்டு, உயிரை மாய்த்துக்கொண்டாள்!" என்றார்.

"ஐயோ, மிஸ்டர் டிமில்லி! நான் அப்படிச் செய்ய முடியாது. பாம்பா? என்னால் முடியாது" என்று மறுத்தாள் களாடெட்.



அந்தக் காட்சி கடைசியில் படம் பிடிக்க வேண்டிய வேளை வந்தது. அன்று காட்சிச்சாலையிலிருந்து மிகப் பெரிய பாம்பொன்றை இரவலாக வாங்கி வந்திருந்தார் டிமில்லி. அதைத் தம் உடலில் சுற்றிக் கொண்டு 'செட்'டுக்குள் வந்தார் டைரக்டர் டிமில்லி.


பிரும்மாண்டமான பாம்பைக் கண்டதும் களாடெட் நடுங்கியபடியே, "என்னால் அந்தப் பாம்பைத் தொட முடியாது!" என்று பயத்துடன் கூறினாள்.

"சரி! அப்படியானால் இந்தப் பெரிய பாம்பு வேண்டாம். இதை வைத்துக் கொள்வாயா?" என்று கூறி ஒரு சிறிய அபாயமற்ற பாம்பை அவளிடம் நீட்டினார் டைரக்டர்.

"சரி!" என்று களாடெட் தலையை யசைத்தாள், அந்தப் பெரிய மலைப்பாம்பு தன் அருகில் வராதிருந்தால் போதும் என்ற நினைப்புடன்.

ஆனால் கிளியோபாட்ரா தற்கொலைசெய்து கொள்ளப் பயன்படுத்திய கொடிய விஷப் பாம்பும் அளவில் மிகச் சிறியதுதான். ஆகையால் திரைப் படத்திலும் கிளியோபாட்ராவின் மரணக் காட்சி தத்ரூபமாக அமைந்து விட்டது. எப்படி டிமில்லியின் தந்திரம்?

ஒப்பனையின் உதவி



ஹாஸ்யத்துக்கு ஒரு ஹெரால்ட் லாய்டு என்று புகழப்பட்டவரை, முதலில் ஸ்டுடியோவுக்குள்ளேயே நுழையவிடவில்லை. எத்தனையோ முயன்றும் வாசல் காவலாளி இவரை விரட்டி அடித்தான். ஸ்டுடியோ வாசலிலேயே தவம் கிடந்த ஹெரால்ட் லாய்டு தினமும் பகல் உணவுக்கு நடிகர்கள் ஸ்டுடியோவுக்கு எதிரில் உள்ள ஹோட்டலுக்குப் போவதைப் பார்த்துக் கொண்டிருப்பார். ஒப்பனையைக் கலைக்காமல் வரும் அவர்களை எவ்விதச் சந்தேகமுமின்றி மறுபடியும் ஸ்டுடியோவுக்குள் செல்ல அனுமதித்தான் காவல்காரன். இதைக் கண்ட ஹெரால்டு லாய்டு மறுநாள் ஏதோ ஒரு மேக்கப்பைப் போட்டுக் கொண்டு நடிகக் கும்பலோடு கும்பலாக உள்ளே புகுந்து விட்டார். எனினும், வேலை ஏதுமின்றிப் பல நாட்கள் நடிகர்களுடனேயே சுற்றிக் கொண்டிருக்க நேர்ந்தது. பல டைரக்டர்கள் அவரை "உனக்கும் ஹாஸ்ய நடிப்புக்கும் ஸ்நானப் பிராப்தி கூட இல்லையப்பா. வேறு ஏதாவது ஒருவிதத்தில் உழைத்துப் பிழைக்கும் வழியைப் பார்" என்றார்கள்! ஆனால் லாய்டு மனம் தளராமல் பெரும் புகழும் செல்வமும் பெற்றுச் சிறந்த ஹாஸ்ய நடிகரானார்.

பாக்கியசாலி!

"எட்வர்டைப் போன்ற பாக்கியசாலியை நான் கண்டதில்லை!" என்றான் ஒருவன்.

"அப்படியா? அவனை நீ இவ்வளவு புகழக் காரணம் என்ன?" என்று கேட்டான் அவன் நண்பன்.

"காரணமா? கேளு, சொல்லுகிறேன். அவன் தன் வீட்டை இன்ஷ்யூர் செய்தான். ஒரு மாதத்துக்கெல்லாம் அது தீப்பற்றி எரிந்து விட்டது. அப்புறம் விபத்துக்காக இன்ஷ்யூர் செய்தான். அடுத்த வாரமே அவன் கை ஒடிந்து விட்டது. சில நாட்களுக்கு முன்பு தான் ஆயுளை இன்ஷ்யூர் செய்து கொண்டான். இன்று இறந்து விட்டான். அவன் அதிர்ஷ்டசாலியா, இல்லையா? நீயே சொல்!" என்றான் அவன்.

ஒரு கடிதம்!

பெருந் தொழிலதிபர் அவர். காலையில் எழுந்ததும் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். கெய்ரோன் வழக்குச் சம்பந்தமான 'பைல்' ஒன்று காணாமற் போய்க் கிடைத்தது என்னும் செய்தி அதில் பிரசுரமாகியிருந்தது. உடனே தம் காரியதரிசியைக் கூப்பிட்டு ஒரு கடிதம் எழுதச் சொன்னார், தமது தொகுதியில் உள்ள எம். எல். ஏ.க்கு.

"அன்புடையீர், குறிப்பிட்ட இலாகாவில் குறிப்பிட்ட 'பைல்' கெட்டுப் போய் விட்டது. குறிப்பிட்ட வழக்கு சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்களைக் காணோம் என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்தி வருவதைப் படித்து மிகச் சந்தோஷம். ஆனால் எனக்காக ஒரு காரியம் செய்தால், வாழ்நாள் முழுவதும் உங்கள் நன்றியை மறக்க மாட்டேன். என்னுடைய இந்த இன்கம்டாக்ஸ் பைலை எப்படியாவது உங்களால் காணாமற் போகச் செய்ய முடியாதா? தயவுசெய்து ஒரு வரி எழுதிப் போடுங்கள். எனக்கு நிம்மதியாயிருக்கும்!"

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon